ISSN-0971-8362

# திட்டம்

ஜூலை – 2023 வளர்ச்சிக்கான மாத இதழ்



# செழுமைக்கான கூட்டுறவு

**கூட்டுறவின் மூலம் செழிப்பு**
அமித் ஷா

**கூட்டுறவுச் சங்கங்களை டிஜிட்டல்மயமாக்கல்**
அன்ஸூ சிங்

**கூட்டுறவு அமைப்புகளின் வணிகப் போட்டித் தன்மை**
மனிஷா பாலிவால்

**தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள்**
கி.ரவிச்சந்திரன்

**இந்திய தேசிய இராணுவத்தில் சிவகாமி அம்மையார்**
ச. இளந்திரையன்.

# கூட்டுறவின் அடிப்படைகள்: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### கூட்டுறவு என்றால் என்ன?

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொதுவான பொருளாதாரத் தேவைகளைக் கொண்டிருப்பவர்கள் குழுவாகச் சேர்ந்து செயல்படுவதையே கூட்டுறவு என்பது குறிக்கிறது.

வாழ்க்கையின் குறிப்பிட்ட சில விழுமியங்களின் அடிப்படையில் உருவான பொருளாதார அமைப்பின் ஒரு வடிவமே கூட்டுறவாகும். மனிதர்கள் தன்னார்வத்துடனும், ஜனநாயக அடிப்படையிலும் தாமாகவே முன்வந்து ஒன்று சேர்வதை இது குறிக்கிறது. சமமான கட்டுப்பாடு, சமமான வாய்ப்பு, சமமான விநியோகம் ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுறவு அமைகிறது. உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகியோரின் பொதுவான நலன்களை மேம்படுத்துவதையும் இது குறிக்கிறது. இலாபத்திற்காகவும், இலாபம் ஈட்டுவதற்காகவும் இயங்கும் அனைத்துப் பொருளாதார முன்னெடுப்புகளும் கூட்டுறவின் ஒற்றைக் குறிக்கோளாகும். இருப்பினும், இலாபம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிராமல், கூட்டுறவு அமைப்புகள் அதன் உறுப்பினர்களுக்குப் பல சேவைகளையும் வழங்குகின்றன.

### கூட்டுறவு சங்கத்திற்கான அரசியலமைப்பு விதிகள் யாவை?

1. இந்திய அரசியலமைப்பின் உறுப்பு 19 (1) (c) கூறுவது ஒன்று கூடுதல் அல்லது சங்கம் அமைத்தலுக்கான [அல்லது




கூட்டுறவு சங்கங்களுக்கான] உரிமை அனைத்துக் குடிமக்களுக்கும் உண்டு.

2. அரசின் கொள்கைகளை வழிநடத்திச் செல்லும் கோட்பாடுகள் 43B கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துதல் பற்றியதாகும் கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னார்வத்துடன் உருவாக்கிக் கொள்வது, அவற்றின் தன்னாட்சிச் செயல்பாடு, ஜனநாயகக் கட்டுப்பாடு மற்றும் தொழில்முறை மேலாண்மை ஆகியவற்றை ஊக்குவிக்க அரசு முயற்சிக்கும்.

3. இந்திய அரசியலமைப்பின் பகுதி IXB, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசியலமைப்புத் தகுதியை வழங்குவதுடன், அவற்றின் ஜனநாயகச் செயல்பாட்டிற்கான விதிமுறைகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

### கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன?

தங்களின் பொதுவான சமூக, பொருளாதார, கலாச்சாரத் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக, ஜனநாயகக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும், கூட்டுறவு விழுமியங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும், அனைவருக்கும் சொந்தமான அமைப்பு கூட்டுறவாகும் சமூகத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்களின் வெளிப்படையான, தன்னார்வத்துடன் கூடிய தன்னாட்சி சங்கம் கூட்டுறவுச் சங்கமாகும்.

### தேசியக் கூட்டுறவுத் தரவுத்தளம் என்றால் என்ன?

தகவல்களின் அடிப்படையில் முடிவுகளை எடுத்து ஆதரவு அளிப்பதே தேசியக் கூட்டுறவுத் தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான முதன்மைக் இலக்கும், நோக்கமும் ஆகும்.

- அடிமட்டத்திலிருக்கும் மக்களைச் சென்றடையும் விதத்தையும், துறைகள் தோறும் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதையும் வலுப்படுத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வது.
- அனைவரையும் உள்ளடக்கிய, கூட்டுறவு அடிப்படையிலான, நீடித்து நிலவக்கூடிய பொருளாதார வளர்ச்சி மாதிரியை ஊக்குவித்தல்.
- செயல்படும் வழிமுறைகளை எளிதாக்குதல்.

– ஆதாரம்: கூட்டுறவு அமைச்சகம்.

# திட்டம்

## மாத இதழ்

மலர் 54
இதழ் 07

ஜூலை 2023
ஆஷாட – ஷ்ரவண 1945
சோபகிருது வருடம் ஆனி ஆடி



முதன்மை ஆசிரியர்
**மனோக்யா**
முதுநிலை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**



தலையங்கம் 04

கூட்டுறவின் மூலம் செழிப்பு
திட்டமிடல் முதல் நிறைவேற்றுதல் வரை 05
–அமித் ஷா

கூட்டுறவு அமைப்புகளை உத்தி சார்ந்து
பன்முகப்படுத்துதல் மற்றும்
வணிகப் போட்டித் தன்மை 15
– மனிஷா பாலிவால்

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் வேளாண் கடன்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம் அளித்தல் 19
– அன்சூ சிங்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களும்
ஊரக வாழ்வும் 26
– கி.ரவிச்சந்திரன்

இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை 34
– சவுரப் குமார் திவாரி, – அன்ஷமன் கமிலா

இந்திய தேசிய இராணுவ வீராங்கனை
சிவகாமி அம்மையார் 37
– ச. இளந்திரையன்.

மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் 43
– பி.கே.மிஸ்ரா

வேளாண் விளைபொருள் விநியோகச்
சங்கிலித்தொடர் மேலாண்மை 49
– சிநேக குமாரி

கூட்டுறவுத் தொழில்முனைவுகளை
வலுப்படுத்தல் 58
– சாகர் கிஸான் வட்கர்

கூட்டுறவுச் சங்கங்களுக்குத்
தேவையான புத்தாக்கமும் தொழில்நுட்பமும் 65
– ஹரிகிருஷ்ணா மிஸ்ரா



**கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**

Azadi Ka Amrit Mahotsav



**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர்** (Editor)
**திட்டம்**
**வெளியீட்டுப்பிரிவு**
A Wing **இராஜாஜி பவன்**
**பெசன்ட் நகர், சென்னை –600 090**
**தொலைபேசி : 044 24465382, 044 24917673.**
**மின்னஞ்சல்:** editorthittam@gmail.com
bmsechennai@gmail.com



Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**

# கூட்டுறவைப் போற்றி வளர்த்தல்

மக்களின் முதலீட்டில் 1976ஆம் ஆண்டு வெளிவந்த இந்தித் திரைப்படமான மாந்தன், திரை உலகில் கூட்டுறவின் சக்தியை முதன்முறையாக வெளிப்படுத்தியது. வேளாண் சமூகங்கள் நிறைந்திருக்கும் இந்தியாவில், பால் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் மையமாக இருந்தன. அந்தக் காலத்துக் குடும்பங்களுக்கு ஆதரவளித்து, பெண்களுக்கு அதிகாரம் அளித்த ஸ்ரீ மகிளா கிரிஹ உத்யோக் (Shri Mahila Griha Udyog), காதிக் கூட்டுறவுகள் ஆகியவை வேறு சில பிரபலமான கூட்டுறவுகளாகும். கூட்டுறவு என்பது சமூகத்தின் பொதுவான நலன்களுக்காக உருவாக்கப்பட்ட, ஜனநாயக நிர்வாகத்துடன் கூடிய அடிமட்ட நிறுவனங்களாகும். சமூகத்தின் சமூகபொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதையும், உற்பத்திப் பொருள்களுக்கு சந்தையை வழங்குவதையும் இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. கூட்டுறவு என்பது உண்மையிலேயே, கூட்டு ஆதாயம், சமூக மூலதனத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு மாதிரியாகும்.

தொடங்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இத்தகைய கூட்டுறவு அமைப்புகள் தொடர்ச்சியாகச் செயல்பட்டு வந்துள்ள போதிலும், இவற்றின் ஒட்டுமொத்தச் செயல்பாடுகள் ஈர்ப்பளிக்கக் கூடியதாக இல்லை. சீர்திருத்தங்களின் மூலம் கிராமப்புற இந்தியாவை மாற்றியமைத்தல் (Sahakar se Samriddhi) எனும் இலக்கை அடையும் நோக்கத்துடன் மத்திய அரசால் தனியான 'கூட்டுறவு அமைச்சகம்' (Ministry of Cooperation - MoC ) 2021, ஜூலை 6 அன்று உருவாக்கப்பட்டிருப்பது, அடித்தட்டு மக்களைச் சென்றடைந்து கூட்டுறவை மேலும் மேம்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும்.

தேசத்தின் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்கும், மூலதனத்தைக் காட்டிலும் மக்களுக்கு முன்னுரிமை அளித்து, மக்களை மையமாகக் கொண்ட வணிகங்களைச் செயல்படுத்தும் நமது கூட்டுறவுகளின் வலிமையை அங்கீகரிப்பதற்குமான மிகப்பெரிய அடியெடுப்பாக புதிய அமைச்சகம் பார்க்கப்படுகிறது. கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும், அதிகப் போட்டித்தன்மை கொண்டதாக அவற்றை மாற்றுவதற்குமென தனியான நிர்வாக, சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பை கூட்டுறவு அமைச்சகம் வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களை அரசின் மின்வணிகச்சந்தை (GeM) தளத்திற்குக் கொண்டு வருதல், தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை (Primary Agriculture Credit Societies - PACS) கணினி மயமாக்குதல், மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல் போன்ற முக்கியமான கொள்கைகளுக்கு ஒப்புதல் பெறுவதில் அமைச்சகம் தொடக்கத்திலிருந்தே வெற்றி கண்டுள்ளது. இவை மட்டுமின்றி, பல்வேறு பிரச்சினைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், தீர்வு காணல் ஆகியவற்றில் பங்குதாரர்களுடன் இந்த அமைச்சகம் தீவிரமாக ஒத்துழைத்து, கூட்டுறவுத்துறையின் வணிகச்சூழலை மேம்படுத்துவதற்கும், 'எளிதாகத் தொழில் செய்வதற்கான' செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், கூட்டுறவுத் துறையை மேலும் வலுப்படுத்துவதற்குமான உறுதியான நடவடிக்கைகளை அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.

கூட்டுறவுத்துறையின் சமீபத்திய திடமான முன்னெடுப்புகள் கூட்டுறவுத்துறையை மேலும் வலுப்படுத்தக் கூடியவையாக அமைந்திருக்கின்றன. பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து 'உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டம்' செயல்படுத்தப்பட இருக்கிறது. விதைகள், இயற்கை உரம், ஏற்றுமதி ஆகியவற்றிற்கான மூன்று பன்மாநிலக் கூட்டுறவு சங்கங்களை அமைக்கும் முடிவு கூட்டுறவுத் துறைக்கு புதிய உத்வேகத்தை அளித்திடும். மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை இதுவரையிலும் இல்லாத ஒவ்வொரு ஊராட்சியிலும் அவற்றை அமைத்தல், ஒவ்வொரு கடலோர ஊராட்சிகள்/கிராமங்களிலும், பெரிய நீர்நிலைகள் உள்ள கிராமங்களிலும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் ஒருங்கிணைப்பின் மூலமும், அரசாங்கத்தின் முழுமையான அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலமும் கிராமப்புற வளர்ச்சிக்கான பொருளாதார மாதிரியை உருவாக்குவதில் கூட்டுறவு அமைப்புகள் குறிப்பிடத்தகுந்த பங்களிப்புகளை வழங்கும்.

இந்த மாதத் திட்டம் இதழ், கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருக்கும் புரட்சி, நாட்டின் வளர்ச்சியில் கூட்டுறவின் இன்றியமையாத பங்கு ஆகியவை பற்றிய விரிவான விவாதத்தின் ஒரு பகுதியாக இருக்கும். தற்சார்பை ஊக்குவிக்கும் அதே வேளையில், சமூகங்களை ஒன்றிணைக்கவும் கூடிய கூட்டுறவுகளின் திறனைப் பற்றிய எமது வாசகர்களின் புரிதலை மேம்படுத்திட கூட்டுறவுத்துறை சார்ந்த நிபுணர்களின் விளக்கங்கள் உதவும் என்று நம்புகிறோம்.

– ஆசிரியர்

# கூட்டுறவின் மூலம் செழிப்பு திட்டமிடல் முதல் நிறைவேற்றுதல் வரை

–அமித் ஷா

இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் வகையில், 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா' நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், அமுத காலத்தில் கூட்டுறவு முறையைப் பயன்படுத்தி, அதன் வழியாக, உலகின் பொருளாதார வல்லரசுகளில் ஒன்றாக இந்தியாவை உயர்த்துவதற்கு நமக்கு நாமே தயாராகிக் கொள்ள வேண்டும். கூட்டுறவின் அடிப்படை யிலான பொருளாதார மாதிரி தான் சமநிலையான மண்டல வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான திறனைக் கொண்டிருக்கிறது; இந்தப் பொருளாதார மாதிரிதான் உள்ளூர்த் தொழில்முனைவு வரை உலகளாவிய வகையில் சிந்திக்கச் செய்யும் திறன் கொண்டதாகும். கூட்டுறவின் மூலம் செழிப்பு என்ற இந்தியப் பிரதமரின் கனவை நனவாக்குவதற்கான முழுமையான அரசு அணுகுமுறைகளின் வழியாக மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் ஒருங்கிணைக்கப்பட்ட, ஒற்றுமையான அணுகுமுறையைப் பின்பற்ற மத்தியக் கூட்டுறவுத் துறை அமைச்சகம் உறுதி பூண்டிருக்கிறது.

கூட்டுறவு என்பது பொறுப்பாளர்கள் ஒரே அணியாக இணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அது மட்டுமின்றி, இணைதல், செயல்படுதல் அதாவது இணைந்து செயல்படுதல் என்ற இரு பதங்களை வலியுறுத்துகிறது. மனித வாழ்வில் அதிகரித்துவரும் சிக்கல்கள் நிறைவேறாத நவீனகால முன்னுரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளில் பெறும் பரப்பு, தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் வளமைக்கான முயற்சிகள் மற்றும் தேவைகள், கூட்டுறவின் பல்வேறு வகையான அளவிலான பொருத்தங்கள் ஆகியவற்றின் காரணமாக கூட்டுறவு அமைச்சகம் என்ற புதிய நிர்வாக அமைச்சகத்தை கடந்த 2021ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் நாள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்படுத்தினார். கூட்டுறவின் மூலம் செழிப்பு என்ற பிரதமரின் அறைகூவல் அரசின் இலக்குகளையும் அவற்றை அடைவதற்கான



வழிமுறைகளையும் கூர்மைப்படுத்த வேண்டியதற்கான தேவையை வலியுறுத்தியது. அதுமட்டுமின்றி, சமூகத்தின் தலைமையிலான மற்றும் சமூகத்திற்குச் சொந்தமான தொழில்முனைவுத் திறன் மூலம் பொருளாதார சுதந்திரம், தற்சார்பு மற்றும் சமூகநீதியை அடைவதற்கான சிறந்த கருவி கூட்டுறவு தான் என்ற செய்தியையும் பிரதமரின் அறைகூவல் நாட்டிற்கு உணர்த்தியது.

கூட்டுறவு எனப்படுவது சமூக நிலையிலான வணிக அமைப்புகள் ஆகும். இவை சமூக மூலதனத்தை உருவாக்குவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் தேவையான திறனைக் கொண்டவையாகும். இந்தியாவில் கூட்டுறவு தான் நமது வாழ்க்கைமுறை என்பதைப் பிரச்சாரம் செய்யும் அளவுக்கும், நிரூபிக்கும் அளவுக்கும் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கு உள்ளேயும் கூட்டுறவு என்ற உணர்வைச் செலுத்தி வளர்த்தெடுக்க நமது முன்னோர்கள் முயன்றுள்ளனர். அந்த உணர்வு தான் நமக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்து ஒட்டுமொத்த உலகமும் ஒரே குடும்பம் என்ற தத்துவத்தை நமக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. 1904ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது, பின்னர் 1912ஆம் ஆண்டில் அதில் திருத்தம் செய்யப்பட்டது ஆகியவற்றின் வழியாகவே இந்தியாவில் கூட்டுறவு என்பது, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஓர் இயக்கமாக மாறியது. கூட்டுறவு என்பது, ஊரக அளவில் கடன் வழங்குவதற்கான நிதியைத் திரட்டி உழவர்களுக்கு வழங்குவதில் தான் பெரும்பாலும் கவனம் செலுத்தியது.

1914–15ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கூட்டுறவுக்கான மெக்லஹன் குழு அளித்த பரிந்துரையைத் தொடர்ந்து, நிவாரணம் வழங்குவதில் மட்டும் கவனம் செலுத்தி வந்த கூட்டுறவு இயக்கம், சமூகப் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் இயக்கமாக மாறியது. விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவில், இந்திய அரசின் முன்னோக்கத் திட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்ததால், அவை மிகப் பெரிய மாற்றங்களைச் சந்தித்தன.

இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வளமான வரலாறு உண்டு. இந்தியாவில் 8.54 இலட்சம் கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 80 சதவீதம் கடன் வழங்கும் வழக்கம் இல்லாத கூட்டுறவு அமைப்புகளாகும். மீதம் உள்ள 20 சதவீதம்தான் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகும். இன்றைய நிலையில், இந்தியாவின் 98 சதவீத கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 29 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தியா இப்போது அதன் கடந்த கால சாதனைகளைக் கொண்டாடிக் கொண்டிருப்பது மட்டுமின்றி, வாட்டம் இல்லாத சமூகப் பொருளாதார வளம் நிறைந்த சூழலைக் கொண்ட இந்தியாவை உருவாக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் வகையில், ‘சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவை’ நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், அமுத காலத்தில் (2023 2047) கூட்டுறவு முறையைப் பயன்படுத்தி அதன் வழியாக, உலகின் பொருளாதார வல்லரசுகளில் ஒன்றாக இந்தியாவை உயர்த்துவதற்கு நமக்கு நாமே தயாராகிக் கொள்ள வேண்டும்.

### கூட்டுறவுத் தத்துவங்களுக்கு மதிப்பளித்தல்

இந்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் முதலீடுகளை விட மக்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன; அவை மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளாகச் செயல்பட்டு வருகின்றன. நமது கூட்டுறவு அமைப்புகளின் இந்த வலிமையை நாம் ஒப்புக் கொள்வதுடன், பாராட்டவும் வேண்டும். இவை கூட்டு ஒருங்கிணைப்பு, சமூக வணிக உணர்வு, ஏழு கூட்டுறவுத் தங்கத் தத்துவங்களைப் பின்பற்றுவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட சமூக உறவு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய

## இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் ஒரு பார்வை (2016 - 2017)

| அ. கூட்டுறவு அமைப்புகளின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 1.77 இலட்சம் |
| கடன் வழங்கா கூட்டுறவு அமைப்புகள் | 6.76 இலட்சம் |
| தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் | 97,961 |
| கூட்டுறவு அமைப்புகளில் மொத்த உறுப்பினர்கள் | 29 கோடி |
| தேசிய அளவிலான கூட்டுறவுக் கூட்டமைப்புகள் | 17 |
| மாநில அளவிலான கூட்டுறவுக் கூட்டமைப்புகள் | 390 |
| மாவட்ட அளவிலான கூட்டுறவுக் கூட்டமைப்புகள் | 2,703 |
| பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,435 |

| ஆ. கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடு | சதவீதம்% |
|---|---|
| கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட வேளாண் கடன் | 13.4 |
| கூட்டுறவுச் சங்கங்களின் சேவை பெறும் ஊரகப் பகுதிகள் | 98 |
| தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மூலம் கடன் பெறும் கிராமங்கள் | 90.10 |
| கூட்டுறவுத் துறையில் உர உற்பத்தி | 23.8 |
| கூட்டுறவு அமைப்புகள் மூலம் உர விநியோகம் | 15 |
| கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் சர்க்கரை உற்பத்தி | 30.6 |
| கிடங்கு வசதி உள்ள தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் | 55.5 |

பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான திறன் கூட்டுறவுக்கு உண்டு. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல், கூட்டுறவு முறையில் பாலை உற்பத்தி செய்வதற்காகவும், சந்தைப் படுத்துவதற்காகவும் திரிபுவன் தாஸ் பட்டேல் மூலம் உழவர் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தினார். அதன் வழியாகத்தான் அமுல் எனப்படும் ஆனந்த் மாவட்ட பால் உற்பத்தியாளர் நிறுவனத்தின் (Anand Milk Union Limited - Amul) விதைகள் விதைக்கப்பட்டன. சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களால் விதைக்கப்பட்ட சிறு விதைதான் இந்தியக் கூட்டுறவு அமைப்புகளின் இறவாக் கொள்கைகளான அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழவேண்டும், இந்தியாவில் உற்பத்தி செய்யவேண்டும், தற்சார்பு, வளம் ஆகியவற்றைப் பின்பற்றும் வகையிலான உலகின் மிகப்பெரிய பால் பொருள் நிறுவனங்களில் ஒன்றாக அமுல் உயர்ந்திருக்கிறது.

### கூட்டுறவுத் தத்துவங்கள்

தன்னார்வம் மற்றும் அனைவருக்குமான உறுப்பினர் சேர்க்கை

தானாக முன்வந்து உறுப்பினராகலாம், பாகுபாடின்றி அனைவரும் உறுப்பினர் ஆக முடியும்.

### உறுப்பினர்களின் பொருளாதாரப் பங்கேற்பு

உறுப்பினர்கள் தங்களது கூட்டுறவு அமைப்புகளின் பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், அவற்றின் முதலீடுகளைக் கையாண்டு பயன்படுத்தும் வகையிலும் சம அளவில் பொருளாதாரப் பங்களிப்பு செய்ய வேண்டும்.

### தன்னாட்சி சுதந்திரம்

கூட்டுறவு அமைப்புகள் ஜனநாயகக் கட்டுப்பாட்டுடன் கூடிய சுயஉதவித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட தன்னாட்சியான வணிக அமைப்புகள் ஆகும்.

### ஜனநாயக உறுப்பினர் கட்டுப்பாடு

கூட்டுறவு அமைப்புகள் அதன் உறுப்பினர்களால் இயக்கப்படும், உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படும் ஜனநாயக அமைப்புகள் ஆகும். முடிவு எடுக்கும் நடைமுறையில் உறுப்பினர்கள் தீவிரமாகப் பங்கேற்பார்கள். உறுப்பினர்களுக்கு சமமான வாக்குரிமை உண்டு (ஒரு உறுப்பினர் ஒரு வாக்கு).

கல்வி, பயிற்சி மற்றும் தகவல்

உறுப்பினர்களுக்குக் கல்வி மற்றும் பயிற்சி வழங்க வசதி உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள், மேலாளர்கள் மற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

### சமுதாயத்தின் மீது அக்கறை

சரியான கொள்கை நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமும், சமூக வளர்ச்சிக்கான தேவைகளை நிறைவேற்றுவதன் மூலமும், நீடித்த சமூக மேம்பாட்டை கூட்டுறவுகள் உறுதி செய்கின்றன.

### கூட்டுறவு அமைப்புகளிடையே கூட்டுறவு

கூட்டுறவு அமைப்புகள் ஒன்றுபட்டு உழைப்பதன் மூலம் கூட்டுறவு அமைப்பை வலுப்படுத்துகின்றன.

ஆதாரம்: சர்வதேசக் கூட்டுறவுக் கூட்டணி (https://www.ica.coop/en/cooperatives/cooperative-identity)

கூட்டுறவு அமைப்புகள் தனித்துவமான அடையாளம் கொண்டவை. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற எப்போதும் போற்றப்படும் இலக்கை எட்டுவதற்கான கூட்டுறவு வணிக மாதிரியின் உண்மையான வலிமை இன்னும் முழு அளவில் பயன்படுத்தப்படவில்லை. நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளைத் தூண்டும் வகையில் கூட்டுறவு அமைப்புகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றாலும் கூட, இந்த வலிமையான அடித்தளத்தின் மீது இன்னும் வலிமையான துடிப்பான கூட்டுறவுத்துறையைக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை உள்ளது. முறையான கொள்கைகள் மற்றும் அரசு நடவடிக்கைகளின் மூலமாக இதை எட்டுவதில் உள்ள அனைத்துத் தடைகளும் தகர்க்கப்பட வேண்டும். கூட்டுறவின் மூலம் செழிப்பு இலக்கை அடைவதற்கான முக்கியமான கொள்கை நடவடிக்கைகள் மூன்றாவது அட்டவணையில் வழங்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவின் மூலம் செழிப்பு: 4Ps + 4Es

4Ps

1. மக்களுடன் ஒத்துழைத்தல் (People Cooperating with people)

2. மக்களால் உற்பத்தி (Production by People)

3. இலாபத்தை விட மக்களுக்கு முன்னுரிமை (People before Profit)

4. பயனுடன் கூடிய இலாபம் (Profit with a Purpose)

4Es

1. எளிதாக வணிகம் செய்தல் (Ease of Doing Business)

2. எளிதாக வாழ்தல் (Ease of Living)

3. எளிதாகக் கடன் பெறுதல் (Ease of Credit Access)

4. எளிதான கூட்டுறவு (Ease of Cooperation)

**கூட்டுறவு இயக்கத்துடனான கடமைப்பாடு**

கூட்டுறவின் அடிப்படையிலான பொருளாதார மாதிரி தான் சமநிலையான மண்டல வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான திறனைக் கொண்டிருக்கிறது; இந்தப் பொருளாதார மாதிரி தான் உள்ளூர்த் தொழில்முனைவு வரை உலகளாவிய வகையில் சிந்திக்கச் செய்யும் திறன் கொண்டதாகும். நமது கூட்டுறவு அமைப்புகளை முன்னேற்றுவதற்கான புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல், திட்டமிடுதல், முன்னுரிமைப்படுத்துதலுக்கு நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். அதுமட்டுமின்றி, கூட்டுறவு அணி (Squad) அமைப்பின் உறுப்பினர் என்ற முறையில் கூட்டாக உழைக்கத் தீர்மானித்திருக்கிறோம். கூட்டுறவு அணி (Squad) என்பதில் S என்ற எழுத்து தற்சார்பு (Self - reliance) என்பதையும், Q என்ற எழுத்து தரச் செயல்பாடு (Quality Perfomance) என்பதையும், U என்ற எழுத்து அசைக்க முடியாத கூட்டுறவு இயக்கம் (Unshakable Cooperative Movement) என்பதையும், A என்ற எழுத்து நிர்வாகத்தின் பொறுப்புடைமை (Accountability in Governance) என்பதையும், D என்ற எழுத்து நவீனத் தொழில்நுட்பத்தின் மேம்பாடு (Development through Modern Technology) என்பதையும் குறிக்கின்றன.

**கூட்டுறவு அணி** (Squad) **என்பதன் பொருள்**

S - Self - reliance தற்சார்பு

சமூக மற்றும் கூட்டுச் செயல்பாடுகளின் மூலம் தற்சார்பு நிலையை அடைதல்

Q - Quality Perfomance - தரச் செயல்பாடு

சமூக நலத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் அரசியலைக் கடந்து செயல்படுவதன் மூலம் கூட்டு வணிகச் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள மனிதர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக தரம் மற்றும் கால வரையறை மற்றும் மனித நேயத்துடன் கூடிய தொழில்முறைச் செயல்பாடு.

U - Unshakable Cooperative Movement - அசைக்க முடியாத கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவுத் தொழில் முனைவுத் தத்துவத்தைப் பரப்புதல் மூலமும், சாத்தியமாக்குவதன் மூலமும் கூட்டுறவு இயக்க மேம்பாட்டிற்கு அசைக்க முடியாத உறுதிப்பாடு.

A - Accountability in Governance நிர்வாகத்தின் பொறுப்புடைமை

பொறுப்புடையிலும், வெளிப்படைத் தன்மையிலும் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல், கூட்டுறவு அமைப்புகளில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல், செயல்படுத்துதல்.

D - Development through Modern Technology நவீன தொழில்நுட்பத்தின் மேம்பாடு

**சமுதாய அளவில் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக சரியான தொழில்நுட்பத்தை உருவாக்கி நவீனப்படுத்தி முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுத்துதல்.**

சரியான வாய்ப்புகளைக் கண்டறிதல், பிரச்சினைகள், சவால்களைக் கண்டறிந்து நீக்குதல், சட்டபூர்வக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுக்கு இடையில் சமநிலையைப் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் கூட்டுறவு அமைப்புகளுக்கு புத்துயிரூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணம் அனைவர் மத்தியிலும் வலிமையாக உணரப்படுகிறது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அரசு இணைந்து மேற்கொண்டு வரும் பொதுவான நடவடிக்கையின் பயனாக, ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டிற்கான பொதுவான சட்ட மற்றும் செயலாக்கத் திட்டம் உருவாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. பொதுக் கூட்டுறவு இயக்கத்திற்கான அனைவரையும் உள்ளடக்கிய கொள்கையை உருவாக்குவதற்காக எங்கள் அரசு உறுதிபூண்டு இருக்கிறது. தேசியக் கூட்டுறவுக் கொள்கையை சுரேஷ் பிரபு தலைமையிலான குழு இறுதி செய்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவும், ஆழப்படுத்துவதற்கு மட்டுமின்றி, தற்சார்பு நிலையை அடைவதற்கான கூட்டுறவின் அடிப்படையிலான உள்ளடக்கிய பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கும், பரப்புரை செய்வதற்குமான செயல்திட்டங்களை இந்தக் கொள்கை ஆவணம் எங்களுக்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2023ஆம் ஆண்டு வரை

யிலான காலத்தில் முக்கியமான எட்டு கொள்கைகளுக்கு கூட்டுறவு அமைச்சகம் ஒப்புதல் பெற்றிருக்கிறது. இந்தக் கொள்கைகளின் முதன்மை நோக்கம் கூட்டுறவு மேம்பாட்டு முயற்சிகளுக்கு அதிக அளவில் உத்வேகம் அளிப்பதாகும்.

**காலவரிசை**

**ஜூன் 1, 2021**

இந்திய அரசின் மின்னணு சந்தைத் தளத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் கொள்முதல் நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டன.

**ஜூன் 2, 2022**

செயல்பாட்டில் உள்ள 63 ஆயிரம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் கணினி மயமாக்கப்பட்டன.

**அக்டோபர் 12, 2022**

பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. 97வது அரசியல் சட்டத் திருத்த விதிகளைப் பின்பற்றி நடப்பதற்கு வசதியாக இவ்வாறு செய்யப்பட்டது.

**ஜனவரி 11, 2023**

இயற்கை விவசாயப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன் தேசிய ஆர்கானிக் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

**ஜனவரி 11, 2023**

கூட்டுறவு அமைப்புகள் மூலம் ஏற்கெனவே அதிகரிக்கும் நோக்குடன் தேசிய ஏற்றுமதிக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது.

**ஜனவரி 11, 2023**

கூட்டுறவு அமைப்புகள் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்தல், பாதுகாத்தல், சான்றளித்தல் மற்றும் விநியோகிப்பதைச் செய்வதற்காக தேசிய விதைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது.

**கூட்டுறவு அமைச்சகம் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் இப்போது வரை மேற்கொள்ளப்பட்ட முக்கிய கொள்கை முடிவுகளும், அதனால் கிடைக்கும் பயன்களும் (ஜூலை 2021 - மே 2023)**

| வ. எண் | விலக்கு / முயற்சி | வழங்கப்பட்ட சலுகைகள் | பயன்கள் |
|---|---|---|---|
| 1 | வருமான வரி மீதான தீர்வை | ஆண்டு வருமானம் 1 கோடி முதல் 10 கோடி வரை உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கான கூடுதல் தீர்வை 12 சதவீதத்திலிருந்து இருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. | வரிச்சுமை குறையும். வணிக நடவடிக்கைகளுக்கு அதிக மூலதனம் |
| 2 | குறைந்தபட்ச மாற்று வரி | கூட்டுறவு அமைப்புகளுக்கான குறைந்த பட்ச மாற்று வரி 18.5 சதவீதத் திலிருந்து இருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. | நிறுவனங்களுடனான சமநிலை உறுதி செய்யப்பட்டுள்ளது. வலிமையான கூட்டுறவுப் பரவல் உறுதி செய்யப்பட்டுள்ளது. |
| 3 | தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக் கடன் வங்கிகளின் நிதி வைப்பீடு மற்றும் பணக் கடன் உச்சவரம்பு அதிகரிப்பு | தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக் கடன் வங்கிகளின் நிதிவைப்பீடு மற்றும் பணக் கடன் உச்சவரம்பு ஒரு உறுப்பினருக்கு 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. | கூடுதலான சமூகப் பொருளாதாரச் செயல்பாடுகள். அதிகரிக்கப்பட்ட ஊரக வணிக வாய்ப்புகள் |
| 4 | புதிய உற்பத்திக் கூட்டுறவுகளுக்கு வரிச்சலுகை | 2024ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் உற்பத்தியைத் தொடங்கும் புதிய கூட்டுறவு அமைப்புகளுக்கான வரிவிகிதம் 30 சதவீதத்திற்கு பதிலாக 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. | கூட்டுறவு அமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும் இடையே சமநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்புகள் ஆழமாக வேரூன்றவும். பரவவும் வகை செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 5 | ஆதாரத்தில் வரிக் கழிவுக்கான உச்ச வரம்பு அதிகரிப்பு | ஆதாரத்தில் வரிக்கழிவு செய்யாமல், கூட்டுறவு வங்கியில் இருந்து பணம் எடுப்பதற்கான அளவு ஆண்டுக்கு ரூ.1 கோடியில் இருந்து ரூ.3 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. | கூட்டுறவுச் சங்கங்கள் எளிதாக வணிகம் செய்வதும், சிக்கல் இன்றி வரிவிதிகளைப் பின்பற்றுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. |
| 6 | வருமான வரிச்சட்டம் 269 ST-யின்படி விலக்கு | வருமான வரிச்சட்டத்தின் 269ST பிரிவின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்படும் பணப் பரிமாற்றத்தில் ஏற்படும் சிக்கல்களைப் போக்க விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. | |
| 7 | கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வரி விலக்கு | அரசால் நிர்ணயிக்கப்படும் நியாயமான மற்றும் ஆதாரவிலைக்கும் மேல் கூடுதலாக வழங்கப்படும் கொள்முதல் விலைக்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கூடுதல் வரி செலுத்தத் தேவையில்லை. | கரும்பு உழவர்களுக்கு அதிக விலை. அதிக விலைத் தருவதை கூடுதல் செலவாகக் காட்டலாம் என்பதால், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வரிச்சுமை குறையும். |
| 8 | கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு | 201617ஆம் ஆண்டுக்கு முன்பாக, கரும்பு உழவர்களுக்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வழங்கிய தொகையை செலவாகக் கருதி அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். | மொத்தம் ரூ.10 ஆயிரம் கோடி நிவாரணம் பல பத்தாண்டுகளாக நீடித்து வந்த வருமான வரி பாக்கி மற்றும் அது சார்ந்த அபராதங்களில் இருந்து விடுதலை. வலிமையான மூலதனத் தளம். |
| 9 | தேசியக் கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 10 ஆயிரம் கோடி கடன் திட்டம். | கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை வலுப்படுத்துவதற்காக தேசியக் கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.1000 கோடி மானியம் வழங்கும் மத்தியக் கூட்டுறவு அமைச்சகத்தின் திட்டம் தொடக்கம். | கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எத்தனால் நிலையம், மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் அல்லது மூலதனத் தேவைகளுக்காக கூட்டுறவுக் கடன் பெறலாம். |
| 10 | கடன் உத்தரவாத நிதிய அறக்கட்டளையில் கூட்டுறவு வங்கிகள் உறுப்பினர் கடன் அமைப்புகளாக அங்கீகரிக்கப்படும். | பட்டியலிடப்படாத நகரக் கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட, மத்தியக் கூட்டுறவு வங்கிக்களுக்கு கடன் உத்தரவாத நிதிய அறக்கட்டளை உறுப்பினர் கடன் அமைப்புகளாக அங்கீகரிக்கப்படும். | சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு அதிகரிக்கும். சிறு, குறு நிறுவனங்களுக்குக் கூட்டுறவு நிதி நிறுவனங்கள் மூலம் 85 சதவீதம் வரை கடன் உத்தரவாதம். |
| 11 | கூட்டுறவு வங்கிகளின் நெருக்கடிகள் களையப்படும். | மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வணிக, நில வணிக வீட்டுக் கடன்களை வழங்க இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது. | தனிநபர் வீட்டுக்கடன் வரம்பு இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. வீடு தேடிச் சென்று கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. |

**பிப்ரவரி 15, 2023**

நாடு முழுவதும் உள்ள 2.54 இலட்சம் ஊராட்சிகளிலும் சேவை வழங்கும் நோக்குடன் 2.5 இலட்சம் தொடக்க வேளாண் கடன் சங்கம் அல்லது பால் பொருள் / மீன் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

**மே 31, 2023**

தொடக்க வேளாண் கடன் சங்கம் மூலமாக உலகின் மிகப் பெரிய சமுதாய உணவு தானியக் கிடங்கு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.

கூட்டுறவுத் துறைக்கான வணிகச் சூழலைச் சுமுகமாக்கும் நோக்குடன் அத்துறை எதிர்கொள்ளும்

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களைக் கண்டறிதல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், தீர்வு காணுதல் ஆகிய முயற்சிகளில் அது தொடர்பான பங்குதாரர்களுடன் இணைந்து, தொடங்கப்பட்ட நாளில் இருந்தே கூட்டுறவு அமைச்சகம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

**கூட்டுறவு அமைப்புகளின் வளர்ச்சிக்காக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள், நடவடிக்கைகள், அதன் காரணமாக ஏற்பட்ட பயன்கள் (ஜூலை 2021 - ஏப்ரல் 2023):**

மாதிரி அமைப்பு விதிகள்: தொடக்க வேளாண் கடன் சங்கங்களை வலிமையாக்குதல்

தொடக்க வேளாண் கடன் சங்கங்களுக்கான மாதிரி அமைப்பு விதிகள் வகுக்கப்பட்டு, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடிமட்ட அளவில் வலிமையான உறுதியான பல்வகைப் பயன்பாடு கொண்ட, பல்வகைப் பரிமாணம் கொண்ட கூட்டுறவுக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கு வசதியாக இந்த மாதிரி அமைப்பு விதிகளை மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 22 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் அமைப்பு விதிகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் மீன்வளம், பால் வளம், கிடங்குகள், பொதுச்சேவை மையங்கள், வங்கி வணிகத் தொடர்பு, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி சார்ந்த செயல்பாடுகள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்கள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட வணிக நடவடிக்கைகளில் கூட்டுறவு அமைப்புகள் ஈடுபடுவது உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. கூட்டுறவு அமைப்புகளில் செயல்பாடுகளில் செயல்பாட்டுத் திறனை அதிகரித்தல், வெளிப்படைத்தன்மை, கூட்டு சமூக மேம்பாட்டிற்கான பொறுப்பு ஆகியவற்றுக்கான திறனை மேம்படுத்தும் சக்தி, மாதிரி அமைப்பு விதிகளுக்கு உண்டு.

**பொதுச்சேவை மையங்களாகச் செயல்படும் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள்**

பொது மக்களுக்கு 300க்கும் மேற்பட்ட மின்னணு சேவைகளை வழங்குவதற்காக தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் / பெரிய பகுதி பல்வகைப் பயன்பாட்டு சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்து மின்னணுமயமாக்குவதற்காக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், கூட்டுறவு அமைச்சகம், நபார்டு வங்கி, பொதுச்சேவை மைய மின்னணு சேவைகள் அமைப்பு ஆகியவை இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன. வங்கிச்சேவை, காப்பீடு, ஆதார் பெயர் சேர்க்கை / விவரங்களை மேம்படுத்துதல், சட்டச் சேவைகள், வேளாண்மை இடுபொருள் மேலாண்மை, நிரந்தரக் கணக்கு அட்டை, பேருந்து / விமானம் / தொடர் வண்டிப் பயணச் சீட்டு சேவைகள் போன்ற சேவைகளை மக்களுக்கு தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் வழங்கும். முதல் கட்டமாக நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட 75 மாவட்டங்களில் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மூலமாக அனைத்து சேவைகளையும் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் பொதுச்சேவை மையங்களாகச் செயல்பட இருப்பதால், அவற்றின் வணிகம் பரவலாக்கப்பட்டு, அதன் தற்சார்புக்குப் போதுமானதாக அமையும்.

**தொடக்க வேளாண் கடன் சங்கங்களை உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்**

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை மேம்படுத்த கூட்டுறவு அமைப்புகள் தயாராக உள்ளன. மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம் செயல்படுத்திவரும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பின் கீழ் மேலும் 1,100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை தேசியக் கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது. உழவர் உற்பத்தியாளர் அமைப்புத் திட்டத்தை கூட்டுறவு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் தங்களின் செயல்பாடுகளை வேளாண் உற்பத்தி, இடுபொருள் மேலாண்மை, வேளாண் கருவிகள், நடைமுறைகள், பேக்கிங் செய்தல், இருப்பு வைத்தல், சந்தைக்கு அனுப்புதல் போன்ற துறைகளுக்கும் நீட்டிக்க முடியும். கூட்டுறவு அமைப்புகளுடன் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஒருங்கிணைப்பதால், தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு போன்ற அதிக வருமானம் கிடைக்கும் தொழில்களை தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**எண்ணெய் மற்றும் எரிசக்தி வணிகத்தில் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை ஈடுபடுத்துதல்**

பெட்ரோல் / டீசல் விற்பனை மற்றும் சமையல் எரிவாயு விநியோகத்திற்கான உரிமங்களைப் பெறுவதற்கான தகுதி படைத்தவையாக தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் தற்போது செயல்பட்டு வரும் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் தங்களின் மொத்த பெட்ரோல், டீசல் நுகர்வோர் தகுதியை சில்லறை விற்பனை நிலையங்களாக மாற்றிக் கொள்வதற்கான ஒருமுறை சலுகை பெறத் தகுதி பெற்றுள்ளன. இத்தகைய நேர்நோக்கு நடவடிக்கைகள் காரணமாக தொடக்க வேளாண் கடன் சங்கங்களின் வணிகம் பரவலாக்கப்படுவதுடன், அவற்றின் வருவாயும் வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கப்படுவதும் உறுதி செய்யப்படும். தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், எரி சக்திப்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட உள்ளன. மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு புதுப்பிக்கவல்ல எரிசக்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளன. தொடக்க வேளாண் கடன் சங்கங்களின் உறுப்பினராக உள்ள உழவர்கள், தங்களின் வேளாண் விளைநிலங்களில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தகடுகளைப் பொருத்துவதன் மூலம் எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்யவும், கூடுதல் வருமானம் ஈட்டவும், மத்திய புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி அமைச்சகத்தால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரியின் உழவர் புதுப்பிக்கவல்ல எரிசக்திப் பாதுகாப்பு திட்டம் உதவும்.

**தேசிய தகவல் தொகுப்பை உருவாக்குதல்**

துறை சார்ந்த கூட்டுறவு அமைப்புகளின் பட்டியலைத் தயாரிப்பதற்காக மத்திய கூட்டுறவு அமைச்சகம் விரிவான கூட்டுறவுத் தகவல் தொகுப்பை உருவாக்கி வருகிறது. தேசியத் தகவல் தொகுப்பை வடிவமைத்து உருவாக்குவதற்கான மாபெரும் பணியை மத்தியக் கூட்டுறவு அமைச்சகம் படிப்படியாக மேற்கொண்டு வருகிறது. கூட்டுறவுத்துறையுடன் தொடர்புடைய பங்குதாரர்கள், தகவல் பகுப்பாய்வை மேற்கொள்வதற்கும், குறைகளைக் கண்டறியவும், கொள்கை வகுப்பில் உதவி செய்யவும் உதவும் நோக்குடன் அனைத்துத் துறைசார்ந்த கூட்டுறவு அமைப்புகளின் சரியான மற்றும் மேம்படுத்தப்பட்ட தகவல்கள் இந்தத் தகவல் தொகுப்பில் இடம் பெற்று இருக்கும்.

**கூட்டுறவுக் கடன்களை ஒருங்கிணைத்தல்**

தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மூலமாக நாடு முழுவதும் 13 கோடி உழவர்கள் கூட்டுறவு அமைப்புகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் பல்வேறு வகையான கடன் தேவைகளை நிறைவேற்ற கவனமான திட்டமிடல் தேவைப்படுகிறது. இந்தியாவில் தற்போது நடைமுறையில் உள்ள மூன்று அடுக்கு கூட்டுறவுக் கடன் அமைப்பில் ஏதேனும் மாற்றங்களைச் செய்தால், அது கடன் முதலீட்டைத் திரட்டுதல், விநியோகித்தல், கடன் வழங்குதல், மறுநிதி வழங்குதல் ஆகியவற்றைச் சீர்குலைத்துவிடும் என்பதால், அந்த மூன்றடுக்கு முறையை அப்படியே தொடர்வதற்கு மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. கூட்டுறவுக் கடன் அமைப்புகளான மாநிலக் கூட்டுறவு வங்கிகளில் இருந்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் வழங்குதல், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இருந்து தொடக்க வேளாண் கடன் சங்கங்களுக்கு கடன் வழங்குதல் என்ற கூட்டுறவுக் கடன் அமைப்பின் வழியாக வழங்கப்படும் கடன் அளவை அதிகரிப்பதில் உள்ள சிக்கல்களைக் களைவதில், மத்திய கூட்டுறவு அமைச்சகம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. இந்த அமைப்பில் மைய இடத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை வலுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பை வலுப்படுத்தும் நோக்குடன், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை கணினிமயமாக்கும் திட்டத்தை மத்திய கூட்டுறவு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கடன் வங்கிகளையும், மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வணிக வளர்ச்சி வங்கிகளையும் போதுமான அளவில் கணினிமயமாக்குவதன் மூலம் இதில் உள்ள சிக்கல்களையும், குறைகளையும், செயலாக்கத் திறமையின்மையையும் குறைத்து, அவற்றை அதிக இலாபத்தில் இயங்கச் செய்ய முடியும்.

**கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியை வலுப்படுத்துதல்**

கூட்டுறவு அமைப்புகளின் வளர்ச்சியையும் பரவலையும் உறுதிசெய்வதற்காக மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய முன்முயற்சிகள் குறித்து அறிந்துகொள்வதற்காக கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதற்கு மத்தியக் கூட்டுறவு அமைச்சகம் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த முன் முயற்சிகளால் ஏற்படும் பயன்கள் குறித்த விழிப்புணர்வை உள்ளூர் மொழிகளிலும், எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் எவ்வாறு பரப்புரை செய்ய முடியும் என்பதற்கான திட்டத்தை மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் வகுக்க வேண்டும். இந்தியா முழுவதும் செயல்படக்கூடிய வகையிலான தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான எங்களின் உறுதிப்பாட்டை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மேம்படுத்தப்பட்ட மற்றும் காலத்தை வென்ற கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, கலந்தாய்வு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக இந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட உள்ளது. புதிய பல்கலைக்கழகத்தைத் தொடங்குவதன் மூலம் விரிவான, ஒருங்கிணைந்த, தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அமைப்பு உருவாக்கப்படும். கூட்டுறவுத்துறையில் தற்போது பணியாற்றிவரும் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த வேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கையை இந்தப் பல்கலைக்கழகம் நிறைவேற்றுவது மட்டுமின்றி, கூட்டுறவுத் துறைக்குத் தேவையான தரமான பயிற்சி பெற்ற பணியாளர்களை போதிய அளவில் உள்ளூர் மக்களைக் கொண்டும் வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரையும், எதிர்காலச் செயல் திட்டங்களும்**

கூட்டுறவின் மூலம் செழிப்பு என்ற இந்தியப் பிரதமரின் கனவை நனவாக்குவதற்கான முழுமையான அரசு அணுகுமுறைகளின் வழியாக மத்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒருங்கிணைக்கப்பட்ட, ஒற்றுமையான அணுகுமுறையைப் பின்பற்ற மத்தியக் கூட்டுறவுத்துறை அமைச்சகம் உறுதி பூண்டிருக்கிறது. இந்தியாவை 5 இலட்சம் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றவேண்டும், உழவர்களின் வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்ற பிரதமரின் தொலைநோக்குத் திட்டத்தை சாத்தியமாக்குவதில் கூட்டுறவு அமைப்புகள் பல்வேறு நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த இலக்குகளை எட்டுவதற்காக சமுதாய நிலையில் தொடக்கக் கூட்டுறவு அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதையும், வலுப்படுத்துவதையும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். தொடக்க வேளாண் கூட்டுறவு அமைப்புகளை துடிப்பானவையாகவும், வலிமையானவையாகவும் மாற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பது மட்டுமின்றி, நமது அணுகுமுறையிலும் கருத்தொற்றுமையை ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமின்றி, தொடக்க வேளாண் கடன் சங்கங்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக கூட்டுறவு அமைச்சகம் மேற்கொண்டுள்ள முன் முயற்சிகளை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும் உதவ வேண்டும்.

கூட்டுறவு அமைப்புகளின் சுமுகமான மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய, அதற்குத் தடையாக உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்க்கவேண்டிய தேவை உள்ளது. அதற்காக உடனடி கவனம் தேவைப்படும் முக்கியப் பிரச்சினைகளில் அ. கூட்டுறவு அமைப்புகளில் மண்டல மற்றும் பிரிவு சார்ந்த வேறுபாடுகளைக் களைதல், ஆ. ஒழுங்குமுறைச் சிக்கல்களைச் சரிசெய்தல், இ. நிர்வாகம், தலைமைப்பண்பு மற்றும் செயலாக்கமுறைகளை மேம்படுத்துதல், ஈ. தொழில்முறை மேலாண்மையை உறுதி செய்தல், உ. காலத்தை வென்ற அமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடங்குதல் போன்றவை அடங்கும். விரிவான ஆய்வுகளுக்குப் பிறகு அதிக கவனம் செலுத்த வேண்டிய கூட்டுறவுத் துறை சார்ந்த சிக்கல்களில் கூட்டுறவு அமைப்புகளின் மத்தியப் பதிவாளருக்கும், மாநிலப் பதிவாளர்களுக்கும் இடையே சிறப்பான பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்புப் பொறிமுறையை உருவாக்குதல்; கூட்டுறவுத் தத்துவங்களையும், ஜனநாயக மாண்புகளையும் கடைபிடித்தல்; வெளிப்படைத்தன்மை நடைமுறைகளைப் பின்பற்றுதல்; சமத்துவ அமைப்பு மற்றும் பன்மயமாக்கல் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்; தொழில்முனைவு, தரப்பெயர் உருவாக்குதல், சந்தைப் படுத்துதல், தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ளுதல், பயிற்சி, உறுப்பினர்களிடையே கல்வி மற்றும் பயிற்சிகளைப் பரிமாறிக்

கொள்ளுதல், புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல், சமூகக் கூட்டுறவுகளை மேம்படுத்துதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கிராம நிலையில் இருந்து தேசிய நிலை வரை அனைத்தையும் உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்ட வலிமையான கூட்டுறவுச் சூழல் உருவாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இதில் தொடர்புடைய அனைவரையும் ஒரு குழுவாக ஒருங்கிணைத்து, மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துவருகிறது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கூட்டுறவு அமைப்புகள் ஒரே சீராகவும், வேகமாகவும் பரவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வது தான் இதன் நோக்கமாகும். இந்தப் பணி கடினமானதாகத் தோன்றினாலும் செய்ய முடியாதது அல்ல. இந்தப் பணியைச் செய்து முடிக்க நமது கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டாட்சி அமைப்புகளில் தலைமைப் பொறுப்புகளில் உள்ளவர்களின் உறுதிப்பாட்டுடன் கூடிய கூட்டு முயற்சிகள் தேவைப்படுகின்றன. இதற்காக இன்றைய தேவை என்பது கூட்டுறவுக் கட்டமைப்பில் உள்ள உறுப்பினர்கள் இடையே வளர்ச்சிக்கான நம்பிக்கையை விதைப்பதற்கான கூட்டு நடவடிக்கைகளை நீட்டிப்பது தான். மக்களின் கூட்டு நடவடிக்கையின் திறனை நமது சமூக வணிக அமைப்புகள் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டுறவு சார்ந்த சமூகப் பொருளாதார வளர்ச்சி மாதிரித் தத்துவத்தின் அடிப்படையில் செயல்பட்டால், கூட்டுறவின் மூலம் செழிப்பு என்ற நமது தத்துவத்தின் நோக்கத்தை எட்ட முடியும்.

---


– **அமித் ஷா**, மாண்புமிகு
மத்திய உள்துறை மற்றும்
கூட்டுறவுத் துறை அமைச்சர்,
இந்திய அரசு, புதுதில்லி.

**எமது நூல்**

## யோகா விளக்கங்களுடன் (Yoga Illustrated)

**ஆசிரியர் : தரம்வீர்சிங் மஹிதா**

மொழி: ஆங்கிலம் விலை: ரூ.460




யோகாசனம் குறித்து விரிவாக விளக்கக்கூடிய இந்த நூல், புகழ்பெற்ற யோகாசன வல்லுநர் தரம்வீர்சிங் மஹிதா என்பவரால் எழுதப்பட்டது. யோகாசனத்தின் எட்டு அங்கங்களான யாமா, நியமா, ஆசனா, பிராணாயாமா, ப்ரத்யாஹாரா, தாரனா, தியானா, சமாதி ஆகியவை குறித்து இந்த நூல் மிகவும் அழகாக விளக்கியிருக்கிறது. குறிப்பாக, யோகாசனம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தி இருக்கிறது.

யோகா இல்லஸ்ட்ரேட்டட் நூல் முதன் முதலில் இந்தி மொழியில் 1995ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நூலுக்குக் கிடைத்த வரவேற்பு, யோகாசனத்தை மேம்படுத்துவதற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் ஆகியவற்றின் காரணமாக, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புத்தக வெளியீட்டுப் பிரிவு இந்த நூலை மறுவடிவமைப்பு செய்து, அச்சிட்டு வெளியிட்டது. இந்த நூலின் ஆசிரியர் யோகாசனத்தையும், அதன் வடிவங்களையும் பல பத்தாண்டுகளாக கற்றுத்தந்து வரும் ஆசிரியர் ஆவார். முதலில் மிகவும் எளிதான ஆசனங்களைக் கற்றுக் கொண்டு, படிப்படியாக கடினமான ஆசனங்களை செய்வதற்கு உத்வேகப்படுத்தும் வகையில் இந்த நூல் அமைந்திருக்கிறது. வீடுகளில் உள்ள நாற்காலிகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சுவர்கள் போன்றவற்றை யோகாசனத்திற்காகப் பயன்படுத்தலாம். அதன் மூலம், மனித உடல் சிறப்பான ஆரோக்கியத்துடனும், சோர்வடையாமலும், உடல் வலி ஏற்படாமலும், ஆன்மீக வலிமையும், மன தைரியமும் ஏற்படும் வகையிலும் யோகாசனத்தைச் செய்யலாம் என்பதை இந்த நூலில் ஆசிரியர் விளக்கியிருக்கிறார்.

600க்கும் மேற்பட்ட விளக்கங்களின் மூலம் யோகாசனங்களில் ஒவ்வொரு அசைவு, நுணுக்கம் குறித்து வாசகர்களுக்கு விளக்குவதற்கு ஆசிரியர் முயற்சி செய்திருக்கிறார். இந்த நூலின் சிறப்பு அம்சங்களில் ஒன்று, வாராந்திரத் திட்டம் ஆகும். வாரத்தின் ஒவ்வொரு நாளும் எத்தகைய ஆசனங்களை எவ்வளவு நேரம் செய்யலாம் என்பது குறித்து வாராந்திரத் திட்டம் வழிகாட்டுகிறது. மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் புத்தக வெளியீட்டுப்பிரிவு வெளியிட்டுள்ள சுகாதார மற்றும் நுண்ணூட்டச் சத்து குறித்த நூல்களின் விரிவான பட்டியலையும், பல்வேறு துறைகள் சார்ந்த பிற நூல்கள் குறித்த விவரங்களையும் அறிய எங்களின் publicationsdivision.nic.in என்ற இணையதளத்தைப் பாருங்கள்.

# கூட்டுறவு அமைப்புகளை உத்தி சார்ந்து பன்முகப்படுத்துதல் மற்றும் வணிகப் போட்டித் தன்மை

– மனிஷா பாலிவால்

இந்தியா என்ற தத்துவத்தில் கூட்டுறவு என்பது வேரூன்றி நிலைத்திருக்கிறது. கூட்டுறவின் மூலம் செழிப்பை ஏற்படுத்துவோம் என்று இந்தியப் பிரதமர் விடுத்த அறைகூவலைத் தொடர்ந்து, இந்தியாவின் கூட்டுறவு அமைப்புகளை நவீனப்படுத்துதல், மாற்றியமைத்தல், புத்துயிரூட்டுதல் ஆகியவற்றுக்கான தனித்துவமான நிர்வாக சட்டக் கொள்கைச் செயல்திட்டத்தை வழங்கும் நோக்குடன் கூட்டுறவு அமைச்சகம் என்ற புதிய அமைச்சகம் 2021ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் கார்ப்பரேட் எனப்படும் பெருநிறுவனங்களுடன் போட்டியிடும் அளவுக்கு கூட்டுறவு அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டிருக்கிறது. சந்தையில் போட்டிகளைச் சமாளிக்கவும், நிலைத்து நிற்கவும் வசதியாக சமுதாய நிலையில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் முதல் தேசிய அளவிலான கூட்டுறவு அமைப்புகள் வரை அனைத்து கூட்டுறவு அமைப்புகளும் தங்களின் வணிகத்தைப் பன்முகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் 19வது நூற்றாண்டில் கடைசிக் காலாண்டில் தோன்றிய இந்தியக் கூட்டுறவு இயக்கம், 1970கள் வரை அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடிய வகையில் சுமுகமாக வளர்ச்சி அடைந்து வந்தது. ஒட்டுமொத்தக் கூட்டுறவு இயக்கத்தையும் முடக்கும் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையில், இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும், திட்டம் வகுப்போரும் கூட்டுறவுகளின் மூலமான சமூகப் பொருளாதார வளர்ச்சியின் மீது கவனம் செலுத்துவதைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டனர். கூட்டுறவு அமைப்புகளில் வளர்ச்சிக்கான திறன் இணைந்திருக்கிறது. அதைச் செயலாக்குவதற்கான புதுப்பிக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இன்றைய சூழலில் கூட்டுறவின் மூலம் செழிப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், கூட்டுறவுச் செயல்பாடுகளின் வழியாக கூட்டுறவு அமைப்புகளை அடித்தட்டு மக்கள் வரை கொண்டு செல்வதில், புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்துவதற்காக கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தற்சார்புப் பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற கனவை நனவாக்க வேண்டும்; கூட்டுறவு அமைப்புகளில் உள்ள உறுப்பினர்கள் வெளியில் இருக்கும் சக்திகளின் தலையீடு இல்லாமல், அச்சம் இல்லாமல் தங்களுக்கான முடிவுகளைத் தாங்களே தீர்மானிக்கக் கூடிய தங்களின் தலையெழுத்தைத் தாங்களே எழுதக்கூடிய அளவுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் 8.54 இலட்சம் கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. அவற்றில் 29 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தியாவில் கார்ப்பரேட் எனப்படும் பெருநிறுவனங்களுடன் போட்டியிடும் அளவுக்கு கூட்டுறவு அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் கூட்டுறவின் மூலமான பொருளாதார வளர்ச்சி மாதிரி என்பது, அண்மைக்காலத்தில் பொறுப்புடைமை மற்றும் நிர்வாகம் சார்ந்த அம்சங்கள், கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத்தில் இருந்தவர்களின் சுயநலம், போதிய ஒத்துழைப்பு இல்லாமை, அரசின் குறுக்கீடுகள், வணிகங்கள் பன்முகப்படுத்தப்படாதது உள்ளிட்ட சில காரணங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

### வணிகப் பன்முகமயமாக்கலுக்கான தேவை

எந்தவொரு வணிகமாக இருந்தாலும் அது வணிகரீதியாகத் தாக்குப்பிடிக்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டுமானால், அதன் தொடக்கநிலை வாடிக்கையாளர்கள் மற்றும் சந்தைக்கு அப்பால் சிந்திக்கக் கூடியதாக இருக்க வேண்டும். புதிய பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான சந்தைகளைக் கண்டறிய வேண்டும். எந்தவொரு நிறுவனத்தையும் பன்முகப்படுத்தாவிட்டால்,

அதில் தேக்கநிலை ஏற்படும். தேக்க நிலை ஏற்பட்டால், அதன் எதிர்கால வணிகம் கடுமையாகப் பாதிக்கப்படும். அதுமட்டுமின்றி, உத்திசார்ந்த பன்முகமயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, சம்பந்தப்பட்ட வணிகம் சார்ந்த ஆராய்ச்சி, மேம்பாடு, சந்தைப்படுத்துதல் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மேம்பாடு போன்றவற்றுகாக அதிக அளவில் முதலீடு செய்யப்படும் என்பதால், பன்முகமயமாக்கலுக்கான நடவடிக்கைகள், அந்த வணிகச் சந்தையில் நீடித்து நிற்பதை உறுதி செய்யும். அதுமட்டுமின்றி, இத்தகைய நடவடிக்கையின் மூலம் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல், அதிக போட்டியும், தடைகளும் இல்லாத கூடுதல் இலாபம் தரும் சந்தைகளை அடையாளம் காணுதல், அதன் மூலம் நீண்ட காலத்தில் அதிக இலாபமும் சொத்துக்களும் கிடைப்பதை உறுதிசெய்தல் போன்ற நன்மைகளும் ஏற்படும்.

**கூட்டுறவு அமைப்புகளின் வணிகப் பன்முகமயமாக்கல்**

ஒரு நிறுவனம் இலாபம் ஈட்டும் நோக்குடன் வணிக, தொழில் மற்றும் தொழில்முறைச் செயல்பாடுகளில் ஈடுபட்டால், அது வணிக நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது. கூட்டுறவு அமைப்புகள் எனப்படுபவை சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பைக் கொண்ட நிறுவனமாகும். கூட்டுறவு நிறுவனங்கள் அதற்கென உருவாக்கப்பட்ட கூட்டுறவுத் தத்துவங்களைக் கடைபிடிப்பதை மட்டுமின்றி, அதன் உறுப்பினர்களின் நலனுக்காகச் சேவை செய்கின்றன. வணிகத்தில் ஈடுபடும் கூட்டுறவு அமைப்புகள் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் நிறுவனங்களாகவோ, அல்லது இலாப நோக்கம் இல்லாத நிறுவனங்களாகவோ இருக்கலாம். அவை வெளியில் கிடைக்காத பொருள்கள் மற்றும் சேவைகளையோ, அல்லது தனிநபர்களாக வாங்குவதற்கு அதிக விலை தரவேண்டிய பொருள்கள் மற்றும் சேவைகளையோ வழங்குவதன் மூலம் தங்களின் உறுப்பினர்களுக்குச் சேவை செய்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களை வணிக ரீதியாக சாத்தியமானவையாகவும், வலிமையானவையாகவும் மாற்ற வேண்டும் என்றால், அவற்றை உத்தி சார்ந்து பன்முக மயமாக்கல் வேண்டியது கட்டாயமாகும். பெருநிறுவனங்களின் பார்வையில் உத்தி என்பது அதன் தொலைநோக்குப் பார்வை மற்றும் அதை எட்டுவதற்காக குறிப்பிடப்படும் சொல் ஆகும். உத்தி சார்ந்த முடிவுகள் எனப்படுபவை பெரும்பாலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அதை எட்டுவதற்கான செயல்திட்டங்களுடன் இணைந்திருக்கும். அவை அமைப்பின் அடித்தளத்தை நோக்கிப் பயணம் செய்யக்கூடியவையாக இருக்கும். இவ்வாறாக, சந்தையில் போட்டிகளைச் சமாளிக்கவும், நிலைத்து நிற்கவும் வசதியாக சமுதாய நிலையில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் முதல்

**உத்திசார்ந்த பன்முகமயமாக்கலின் மூலமாக போட்டித் தன்மையில் சாதகமான நிலையை அடைதல்.**

கூட்டுறவு அமைப்புகளின் வலிமை மற்றும் திறன்களை பகுப்பாய்வு செய்தல்

கூட்டுறவு அமைப்புகளின் நோக்கம் மற்றும் மாண்புகளை வரையறுத்தல்

பன்முக மயமாக்குதலுக்கான திறன் சார்ந்த பகுதிகளை அடையாளம்

பன்முகமயமாக்கல் திறன் வாய்ப்புகளை மதிப்பிடுதல்

பன்முகமயமாக்கல் உத்தியை வகுத்தல்

செயல்படுத்துவதற்கான உறுப்பினரை நியமித்தல் மற்றும் வளங்களை அடையாளம் காணுதல்

தொடர்பு மற்றும் உத்திச் செயலாக்கம்

கூட்டுறவு அமைப்புகளுக்கான விரிவான உத்திசார்ந்த பன்முகமயமாக்கல் நடைமுறை

போட்டித்தன்மையில் சாதகமான நிலையை அடைதல்

தேசிய அளவிலான கூட்டுறவு அமைப்புகள் வரை அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளும் தங்களின் வணிகத்தைப் பன்முகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

**சாத்தியமான கூட்டுறவு வணிக உத்திகள்**

கூட்டுறவு அமைப்புகள் அனைத்துத் துறைகளிலும் வணிகம் செய்கின்றன. அவை தங்களின் தொலைநோக்குத் திட்டம் என்ன? என்பதையும் அவற்றை எட்டுவதற்கான செயல்திட்டங்களையும் உறுதி செய்வது மட்டுமின்றி, எந்த நோக்கத்திற்காகவும், என்னென்ன பயன்பாட்டிற்காகவும் அவை உருவாக்கப்பட்டன? என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். கூட்டுறவு அமைப்புகள் தங்களின் வணிகத்தைப் பன்முகப்படுத்துவதற்கான உத்திகளை வகுக்க இந்தத் தகவல்கள் பெரிதும் உதவும்.

**நிறைவுரை**

சமுதாயம் சார்ந்த கூட்டுறவுப் பொருளாதார வளர்ச்சி மாதிரியின் திறன் குறித்து பல்வேறு தளங்களில் மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். இந்தியாவில் தற்போதுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்துதல், செயலற்றுக் கிடக்கும் கூட்டுறவு அமைப்புகளுக்குப் புத்துயிரூட்டுதல், அடுத்த 4 அல்லது 5 ஆண்டுகளில் குறைந்தது 2 இலட்சம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களை கூடுதலாக உருவாக்குதல் ஆகிய உன்னத நோக்கங்களை மத்திய அரசு சரியாக வெளிப்படுத்தியுள்ளது.



அமைச்சர் அமித் ஷா அவர்களின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு அமைச்சகம் உத்திசாா்ந்த பன்முகமயமாக்கலின் மூலமாக கூட்டுறவு அமைப்புகள் போட்டித் தன்மையில் சாதகமான நிலையை அடைவதை உறுதி செய்யவேண்டும் என்று விரும்புகிறது. அதற்கு கூட்டுறவு அமைப்புகளின் வலிமைகள், நோக்கம், மாண்புகள் ஆகியவை குறித்த தகவல்களைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்வதும், உத்தி மேலாண்மை நடைமுறையின் முழுப்பயணத்தில்

## வணிகப் பன்முகமயமாக்கல் மூலம் இலாபத்தைப் பெருக்குதல்

தமிழ்நாட்டின் தருமபுரி மாவட்டத்தில் பழங்குடியின கிராமமான சிட்லிங்கியில் 500க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, சிட்லிங்கி இயற்கை உழவர்கள் சங்கம் என்ற கூட்டுறவு சங்கத்தை 2004ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார்கள். குறைந்தபட்சம் இரண்டரை ஏக்கர் பரப்பளவு நிலம் கொண்ட வணிகர்கள், ராகி, கம்பு, சாமை, தினை உள்ளிட்ட சிறுதானியங்களையும், பருத்தி, மஞ்சள், சர்க்கரை, நிலக்கடலை, காய்கறிகள் போன்ற பணப்பயிர்களையும் பயிரிட்டனர். உறுப்பினர்களின் நிதி மற்றும் பொருளாதார நிலையை உறுதிபடுத்துவதற்காக சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப பயிர்களை உற்பத்தி செய்யும்படி சிட்லிங்கி இயற்கை உழவர் அமைப்பு ஆலோசனை வழங்கியது. அதன் மூலம் ஒரே வகையான பயிர்களைப் பலரும் பயிரிடாமல் இருப்பதையும், வாடிக்கையாளர்களுக்கு பல வகையான பயிர்கள் கிடைப்பதையும் சிட்லிங்கி இயற்கை உழவர் சங்கம் உறுதி செய்தது. சிட்லிங்கி இயற்கை உழவர் சங்கத்தின் உறுப்பினர்கள் சிறு தானியங்கள் சார்ந்த ரொட்டிகள், சத்துமாவுகள், வறுத்து அரைக்கப்பட்ட மாவுப் பொருள்கள், அப்பளங்கள் என தங்களின் பொருள்களையும், சந்தையையும் பன்முகப்படுத்தினார்கள். அவர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் 40 சில்லறை விற்பனை நிலையங்களால் இவை கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டன. அதன் மூலம் ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும், மாதத்திற்கு குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை நடப்பது உறுதி செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி, இயற்கை உரம் போன்ற வேளாண்மை சார்ந்த துணை வணிகங்களையும் சிட்லிங்கி இயற்கை உழவர்கள் சங்கம் பன்முகப்படுத்தியுள்ளது. தாவரங்களுக்கான நாற்றுப் பண்ணைகளை நடத்திவரும் இந்த அமைப்பு, இயற்கை உர ஆலைகளையும் நடத்தி வருகிறது. அவற்றின் மூலம் ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் அளவுக்கு வணிகம் நடைபெறுகிறது.

ஆதாரம்: சிட்லிங்கி இயற்கை உழவர்கள் சங்கம் <https://www.sofasittilingi.org>

## கூட்டுறவின் மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தல்

மராட்டிய மாநிலம் மாஸ்வாத் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட மகளிரை மையப்படுத்திய குறு வணிகக் கூட்டுறவு அமைப்பான மான் தேஷி 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கிராமப்புறப் பெண்களை சமூக ரீதியாகத் திரட்டி, அவர்களுக்குப் பொருளாதார அறிவு, வணிகத் திறன் மேம்பாடு, சரியான நேரத்தில் போதுமான அளவு கடனை கட்டுபடியாகும் வட்டி விகிதத்தில் பெறுவதற்கு வகை செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலமாக அவர்களை மகளிர் கூட்டுறவுத் தொழில்முனைவோராக்குவதன் மூலம் அதிகாரம் அளிப்பதுதான் இந்த அமைப்பின் நோக்கமாகும். மான் தேஷி அமைப்பு தொடங்கப்பட்டது முதல் இதுவரை 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள கடன்களை வழங்கியிருப்பது மட்டுமின்றி, மராட்டிய மாநிலத்தின் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த நான்கு இலட்சத்திற்கும் கூடுதலான மகளிர் தொழில்முனைவோருக்குப் பயிற்சியும் வழங்கியுள்ளது. அதன் நடமாடும் ஏடிஎம்கள் மூலம் மராட்டிய மாநிலத்தில் உள்ள 300க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இப்போது சரியான நேரத்தில் கடன் சேவை வழங்கப்பட்டு வருகிறது. மகளிர் தொழில்முனைவோருக்கு உதவும் வகையில், நுண்கடன், தொழில்பயிற்சி, வணிக மேம்பாடு, சந்தைத்தொடர்பு போன்ற பல்வேறு திட்டங்களையும், சேவைகளையும் செயல்படுத்தி வருகிறது. மான் தேஷி அமைப்பு அதன் செயல்பாடுகளை வங்கிச்சேவையைக் கடந்து, ஊரக வணிகச் செயல்முறை துணை ஒப்பந்தச் சேவை (Business process outsourcing, - BPO) சமுதாய வானொலி என பன்முகப்படுத்தியுள்ளது. அதன் பிபிஓ நிறுவனத்தில் 250 பெண்கள் உள்ளனர். அதன் சமுதாய வானொலியை 40 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கேட்கின்றனர். அதுமட்டுமின்றி, 50 வணிகப்பள்ளிகள் மற்றும் பயிற்சி மையங்களை மான் தேஷி அமைப்பு நிறுவியுள்ளது. மான் தேஷி அமைப்பு அதன் உறுப்பினர்களுக்கு கல்வி மற்றும் சுகாதாரம் பெறும் வாய்ப்புகளை அதிகரித்திருக்கிறது என்பதாலும், சமூகநிலையை உயர்த்தியிருக்கிறது என்பதாலும், மான் தேஷி அமைப்பின் தாக்கம் பொருளாதார அதிகாரம் அளித்தல் என்ற நிலையைக் கடந்து விரிவடைந்திருக்கிறது. ஊரக மக்கள் வெற்றிகரமான தொழில்முனைவோராக உருவெடுப்பதற்கும், தங்களின் சமுதாயங்களின் தலைவர்களாக மாறுவதற்கும், தேவையான வழிகளையும் வாய்ப்புகளையும் வழங்குவதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கு உதவக்கூடிய முன்னோடி நிறுவனமாக மான் தேஷி அமைப்பு உருவெடுத்திருக்கிறது.

ஆதாரம்: மான் தேஷி வங்கி மற்றும் அறக்கட்டளை (<https://manndeshifoundation.org>)

உறுப்பினர்களின் ஈடுபாடும், ஆதரவும் தேவைப்படுகிறது. கூட்டுறவு அமைப்புகளின் தனித்துவமான வலிமைகள், திறன்கள் ஆகியவற்றை முடுக்கிவிடுவதன் மூலமாகவும், கூட்டுறவு அமைப்புகளின் பன்முகமயமாக்கல் வாய்ப்புகளை அதன் நோக்கம் மற்றும் மாண்புகளுடன் இணைப்பதன் மூலமாகவும், கூட்டுறவு அமைப்புகள் புதிய சந்தைகளிலும் பொருள்கள் வரிசையிலும் வளர்ச்சி அடைவதும், போட்டித் தன்மையில் சாதகமான நிலையை அடைவதும் சாத்தியமான ஒன்றுதான். இந்தியாவில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் குறிப்பிட்ட சில சந்தைகளை மட்டுமே நம்பி இருப்பதைக் குறைத்து, தங்களின் வாடிக்கையாளர் தளத்தைப் பெருக்குவதற்கும், உறுப்பினர்களின் தேவைகளுக்கு சிறப்பாக சேவை செய்வதற்கும், உத்தி சார்ந்த பன்முகமயமாக்கல் உதவும். கூட்டுறவு அமைப்புகள் சந்தைகளின் தேவையைப் பூர்த்திசெய்ய முடிந்தால் அவை சந்தையில் தாக்குப்பிடித்து நிற்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. நீண்டகாலப் பயணத்தில் உத்திசார்ந்த சாதகமான இடத்தை அடைவதற்கு இது உதவுவது மட்டுமின்றி, அதன் வழியாக கூட்டுறவு அமைப்புகள் அவற்றின் செயல்பாடுகளில் உத்திசார்ந்த பன்முகமயமாக்கலைச் செய்வதன் மூலம் உள்ளடக்கிய தன்மையுடன் கூடிய வணிக இலாபத்தை எட்டுவதற்கும் உதவும்.

---

– **முனைவர் மனிஷா பாலிவால்**, பேராசிரியர், ஸ்ரீ பாலாஜி பல்கலைக்கழகம், புனே, மராட்டியம்

# டிஜிட்டல் மயமாக்கல் மூலம் வேளாண் கடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம் அளித்தல்

– அன்சூ சிங்

தொழில்நுட்பம் அதிவேகமாக வளர்ந்து வரும் காலத்தில், ஊரகக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் வழக்கமாக வழங்கிவரும் கடன்களைக் கடந்து, தங்களின் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் தங்களைச் சார்ந்திருக்கும் உழவர்களுக்கு அதிக நன்மைகளைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. வங்கிச் சேவைகள் இப்போது இருப்பதைவிட, இன்னும் செலவு குறைந்ததாகவும், சிறந்ததாகவும் விரைவானதாகவும், பாதுகாப்பானதாகவும் மேம்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில், வேளாண் கடன் வழங்குவதற்கான வாய்ப்புகள் வெகுவாக மாறியிருக்கின்றன. வேளாண் கடன் என்பது உணவு தானிய உற்பத்திக்காகக் கடன் வழங்குவது என்ற நிலையைக் கடந்து சென்றிருக்கிறது. இதன் காரணமாக, உழவர் அமைப்புகள் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஊரகக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் கடன் வழங்கும் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை சமூகப் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் எப்போதும் மிக முக்கியமான பங்காற்றி வருகின்றன. புதிதாக உருவாகி வரும் தேவைகளையும், நாட்டின் பிற தேவைகளையும் நிறைவேற்றுவதன் மூலம், வளர்ச்சியில் காணப்படும் இடைவெளியைப் போக்கும் ஆகச் சிறந்த திறன் கூட்டுறவு அமைப்புகளுக்கு உண்டு.



இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும், அதற்குத் தேவையான கடனைத் திரட்டுவதிலும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மிகவும் முக்கியமான பங்காற்றுகின்றன. குறுகிய காலக் கடன் வழங்கும் ஊரகக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் அமைப்பு என்பது மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும். மாநில அளவில் மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட அளவில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், கிராம அளவில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவை தான் அந்த மூன்று நிலை அமைப்புகள் ஆகும். உறுப்பினர்களாக இருக்கும் உழவர்களுக்கு சரியான நேரத்தில் போதுமான அளவில் கட்டுப்படியாகக் கூடிய வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதும், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அடித்தட்டு மக்களின் பங்கேற்பில் தொடங்கி, உற்பத்தி, விநியோகம், வளங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் திரட்டுவதில் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல் வரையிலான சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நோக்கங்களை சாத்தியமாக்க உதவுவதும் தான் இந்த மாதிரியின் நோக்கம் ஆகும்.

தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின்

உறுப்பினர்களாக அல்லது உரிமையாளர்களாக இருப்பவர்கள் உழவர்கள் தான். ஒவ்வொரு தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கமும் அருகில் உள்ள மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டிருக்கும். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்களாக இருக்கும். முழுக்க முழுக்க உறுப்பினர்களால் இயக்கப்படும் சமூகம் சார்ந்த இந்த அமைப்புகள் உழவர்களுக்குத் தேவையான நிதிச்சேவைகளை மிகச் சிறப்பாக ஒருங்கிணைந்த முறையில் வழங்கும் வகையில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறை வரம்புக்குள் வருகின்றன. இந்தக் கூட்டுறவு கடன் அமைப்புகளின் செயல்பாடுகளை நபார்டு எனப்படும் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மேற்பார்வை செய்யும். இன்றைய நிலையில் இந்தியாவில் மொத்தம் 34 மாநிலக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கு 200க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. அதே போல், சுமார் 14 ஆயிரம் கிளைகளுடன் 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. சுமார் 95 ஆயிரம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 65 ஆயிரம் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

### கூட்டுறவுக் கடன்: பிரச்சினைகளும் சவால்களும்

ஊரகக் கடன் வழங்குதல், படிப்படியாக நிறுவனமயமாக்கப்பட்டதன் பயனாக, ஏராளமான வணிக வங்கிகளும் நுண் கடன் நிறுவனங்களும், அதிநவீனத் தொழில்நுட்பங்களுடன் செயல்படுவது சாத்தியமாகி யிருக்கிறது. ஊரக வங்கிச் சந்தை என்பது கூட்டுறவு அமைப்புகளுக்குக் கடுமையான போட்டியை ஏற்படுத்தி வருகிறது. குறுகிய காலப் பயிர்க் கடன்களைக் கடந்து, உழவர்களுக்கு நிதி, ஆலோசனை மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பல வகையான சேவைகள் தேவைப்படுகின்றன. கூட்டுறவுக் கடன் அமைப்புகள் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை பயன்படுத்த இயலாததால், வணிக வங்கிகளுடன் இந்த விசயத்தில் போட்டியிட முடியவில்லை. கூட்டுறவுக் கடன் அமைப்புகள், அவை வழங்கும் சேவைக்கு ஏற்ற தொழில்நுட்பம் சார்ந்த டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கினால் தான் ஊரகக் கடன் சந்தையில் உள்ள வாய்ப்புகளை அவற்றால் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். கூட்டுறவு அமைப்புகளுக்குத் தீர்வு தேவைப்படும் சில பொதுவான அம்சங்களில் அலுவலக மேலாண்மை முறைகள், வெளிப்படைத்தன்மை, நல்ல நிர்வாகம் மற்றும் தொழில்முறையாக்கல், சேவைப் பொருள்கள் புத்தாக்கத்தை வேகமாக மேற்கொள்ளுதல், சேவை வழங்குதல் உள்ளிட்டவை அடங்கும்.

### தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதலும் கூட்டுறவுக் கடன்களும்

கூட்டுறவுக் கடன் அமைப்புகள் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதாலும், பணி நடைமுறைகளை டிஜிட்டல் மயமாக்குவதாலும், அவற்றின் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். கூட்டுறவு அமைப்புகளுக்கு என தனித்துவமான கொள்கை நடவடிக்கைகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதன் மூலமும் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை நவீனமயமாக்குதல் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலமும் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக சரியான திசையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தான் மத்திய அரசில் கூட்டுறவுத் துறைக்கென தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டதாகும். கூட்டுறவு வங்கிகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கைகளை இரு அம்சங்களின் அடிப்படையில் புரிந்துகொள்ள முடியும். அவற்றில் முதலாவது, மாநிலக் கூட்டுறவு வங்கிகளை டிஜிட்டல்மயமாக்குவது, இரண்டாவது, நுகர்வோரைத் தொடர்பு கொள்ளுதல், சேவை வழங்குதல், முடிவு எடுத்தல் ஆகிய நடைமுறைகளில் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துதல் என்பனவாகும்.

### அ. மாநிலக் கூட்டுறவு வங்கிகளை டிஜிட்டல் மயமாக்குதல்

மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறை அமைப்பிற்குள் வருகின்றன. இந்த இரு வகையான வங்கிகளும் கோர் எனப்படும் மையமாக்கப்பட்ட ஆன்லைன் நிகழ்நேரப் பரிமாற்றம் (Centralised Online Real-time Exchange - CORE) என்ற தொழில்நுட்பத்தை

அடிப்படையாகக் கொண்ட வங்கித் தீர்வு மூலம் தானியங்கி முறையில் செயல்படுகின்றன. வங்கிகள் மின்னணு வடிவில் ஒரே வகையான கணக்குப் பதிவேடுகளை பராமரிக்க இது உதவுகிறது. சிபிஎஸ் என்று அழைக்கப்படும் இந்தத் தொழில்நுட்பம், கூட்டுறவு வங்கிகளுக்கான ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்துவது மட்டுமின்றி, வாடிக்கையாளர்கள் எந்த இடத்தில் இருந்தும், எந்த நேரத்திலும் வங்கிச்சேவை பெறுவதை உறுதி செய்கின்றன. ஒருபுறம் வங்கிப் பரிமாற்றங்களை சிபிஎஸ் தொழில்நுட்பம் நவீனமயமாக்கி, வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வந்திருக்கிறது என்றாலும் கூட, பெரும்பான்மைக் கூட்டுறவு வங்கிகள், குறிப்பாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இன்னும் போதுமான அளவுக்கு அலுவலக மேலாண்மை முறையை டிஜிட்டல்மயமாக்கவில்லை.

கூட்டுறவு வங்கிகளில் கணக்குகள், துறைசார்ந்த தணிக்கை, திட்ட மேலாண்மை, சேவை வழங்கல், மனிதவளம், சந்தைச் செயல்பாடுகள் போன்ற அன்றாட வணிக நடவடிக்கைகளை மேலாண்மை செய்வதற்கு வலிமையான அலுவலக மேலாண்மை முறை (Enterprise Resource Planning - ERP) மிகவும் முக்கியமாகும். பல கூட்டுறவு வங்கிகளில் கடன் விநியோகம், செயல்பாடுகளை மதிப்பிடுதல், அலுவலக ஆவணங்களைப் பராமரித்தல் போன்ற வணிக நடைமுறைகள் இன்னும் கைமுறையாகவே கையாளப்படுகின்றன. இது கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளைப் பாதிப்பதுடன், வணிகச் செயல்பாடுகளுக்கு முட்டுக் கட்டையையும் ஏற்படுத்துகிறது. ஊரகக் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்புகள் எதிர்கொள்ளும் பெரும்பான்மையான சிக்கல்கள், எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும் பொதுவானவை தான் என்பதால், தரப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் அலுவலக மேலாண்மை முறைகளை மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொழில்நுட்ப உதவியுடன் செயல்படும் கூட்டுறவு வங்கிகளின் உள் செயல்பாட்டு அமைப்பு, முறையான நிர்வாகம், ஆட்சி முறை, உள் அலுவலகக் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதி செய்யும். இவ்வாறு செய்வதன் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள சட்டபூர்வ விதிகளைப் பின்பற்ற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான வேளாண் கடன் வழங்கும் முறையை ஏற்படுத்துவதற்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகளில் பொதுத் தொழில்நுட்பத் தளங்களும், மென்பொருள்களும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் வணிக நடைமுறைகளை டிஜிட்டல் மயமாக்கவேண்டிய தேவை ஒருபுறம் ஏற்பட்டிருக்கும் நிலையில், மற்றொருபுறம், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். இதை உணர்ந்து பெரும்பான்மையான தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. டிஜிட்டல்மயமாக்கத்தை நோக்கிய முதல் நடவடிக்கை தான் கணினிமயமாக்கல் ஆகும். தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் கணினி மயமாக்கப்பட்டால் தான் அவை சிபிஎஸ் தொழில் நுட்பத்தையும் இந்திய ரிசர்வ் வங்கியால் வகிக்கப்பட்ட விதிகளையும் பின்பற்றுவதை உறுதி செய்யமுடியும். அதன் மூலம் தான் ஒருங்கிணைக்கப்பட்ட மூன்று அடுக்கு கடன் வழங்கும் அமைப்பில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யமுடியும். இந்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சரின் சீரிய தலைமையில் வகுக்கப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இந்திய அரசின் கொள்கை, உழவர்களுக்குக் கடன் மற்றும் பிற நிதிச்சேவைகளை வழங்குவதில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்திறனை மேலும் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கிராமப்பகுதிகளில் செயல்பட்டுவரும் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அடிக்கடி மின்சாரம் தடைபடுதல், தடையற்ற இணையதள இணைப்பு இல்லாமை, போதிய கணினி கையாளும் திறன் இல்லாமை போன்ற குறைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கையாளப்படும் பதிவேடுகள், முழுமையாக இல்லாததும், சீரற்று இருப்பதும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகின்றன. தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்திறனை வலுப்படுத்த வேண்டும் என்றால், அதற்கான அடிப்படை நடவடிக்கை அவற்றை கணினிமயமாக்க

வேண்டும் என்பதாகும். அதுமட்டுமின்றி, தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அவற்றுக்கு அடுத்த நிலையில் உள்ள மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றுடன் டிஜிட்டல் வழியில் ஒருங்கிணைக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தான் வலிமையான மற்றும் வெளிப்படையான வேளாண் கடன் அமைப்பை உறுதி செய்யமுடியும். இவை மட்டுமின்றி, தரவுகளைத் தயாரித்தல், தரவுகளை உள்ளீடு செய்தல், பயிற்சி பெற்ற அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட மனித சக்தியுடன் கூடிய அலுவலக மேலாண்மை முறையை ஒவ்வொரு சங்கத்திற்கும் ஏற்ற வகையில் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் போன்றவற்றுக்கு போதிய அளவில் கணினிக் கட்டமைப்பு, இணையதளம் போன்றவையும் தேவைப்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் தலைமையில் செயல்பட்டுவரும் கூட்டுறவு அமைச்சகம் ரூ.2,516 கோடி செலவில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கணினிமயமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, நாடு முழுவதும் உள்ள சுமார் 63 ஆயிரம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஐந்து ஆண்டுகளில் கணினி மயமாக்கப்படும். அதன் மூலம் சிறு, குறு உழவர்களுக்கான சேவை வழங்கல் வலுப்படுத்தப்படும். அதைத் தொடர்ந்து, தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அவற்றின் சேவைகளை டிஜிட்டல்மயமாக்கவும், மாவட்ட மற்றும் மாநில அளவிலான கூட்டுறவு வங்கிகளுடன் தங்களை இணைத்துக் கொள்ளவும் இது உதவும். இந்தியாவில் அனைத்து அமைப்புகளாலும் வழங்கப்பட்ட உழவர் கடன் அட்டை வழியான கடன்களில் 41 சதவீதம் அதாவது 3 கோடியே 1 இலட்சம் உழவர்களுக்கான கடன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகத் தான் வழங்கப்பட்டிருக்கின்றன என்று தரவுகள் தெரிவிக்கின்றன. அதேபோல், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட உழவர் கடன் அட்டை வழியான கடன்களில் 95 சதவீதம் அதாவது 2.95 கோடி கடன்கள் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி, நேரடிப் பயன் பரிமாற்றம், வட்டி மானியத்திட்டம், பயிர்க் காப்பீட்டுத் திட்டம், உரம் மற்றும் விதை போன்ற இடுபொருள்கள் வழங்கும் திட்டம் போன்ற நிதிச்சேவை மற்றும் நிதி சாராத சேவைகளை கிராம அளவில் வழங்குவதற்கான தொடர்பு மையங்களாகவும், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தான் செயல்பட்டு வருகின்றன.

### ஆ. வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ளுதல், சேவை வழங்கல் மற்றும் முடிவு எடுக்கும் நடைமுறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

வங்கித் தொழில்துறையில் டிஜிட்டல்மயமாக்கல், தலைகீழான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைய டிஜிட்டல் காலத்தில் பொதுமக்கள் ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் முறையும், அன்றாட வணிகம் செய்யும் முறையும் மேம்பட்டிருக்கின்றன. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இந்தியாவில் வங்கித் துறையின் எதிர் காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. அண்மை ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம், நிதித் தொழில்நுட்பம் மற்றும் வேளாண் தொழில்நுட்பப் புரட்சிகளின் மையமாக மாறி வருகிறது. இந்தியாவில் தான் ஏராளமான புத்தொழில் நிறுவனங்கள் அவற்றின் ஊரக வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மூலம் சேவை வழங்கி வருகின்றன. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியா மிகவும் வலிமையான நிதித் தொழில்நுட்பம் மற்றும் வேளாண் புத்தொழில் சூழல் அமைப்பைக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் புத்தாக்க நிதிச் சேவைத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம் என்ற நிலையை இந்தச் சூழல் அமைப்பு ஏற்படுத்தி இருக்கிறது. அதுமட்டுமின்றி, இது கிராமப் பகுதிகளில் செயல்பட்டு வரும் கூட்டுறவு கடன் அமைப்புகளுக்கு, குறிப்பாக வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சேவை வழங்குதல் தொடர்பான விசயங்களில், மிகக் கடுமையான போட்டியை ஏற்படுத்தியிருக்கிறது.

தொழில்நுட்பம் அதிவேகமாக வளர்ந்துவரும் காலத்தில், ஊரகக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் வழக்கமாக வழங்கிவரும் கடன்களைக் கடந்து, தங்களின் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் தங்களைச் சார்ந்திருக்கும் உழவர்களுக்கு அதிக நன்மை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. வங்கிச் சேவைகள் இப்போது இருப்பதைவிட, இன்னும்

செலவு குறைந்ததாகவும், சிறந்ததாகவும் விரைவானதாகவும், பாதுகாப்பானதாகவும் மேம்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில், வேளாண் கடன் வழங்குவதற்கான வாய்ப்புகள் வெகுவாக மாறி இருக்கின்றன. வேளாண் கடன் என்பது உணவு தானிய உற்பத்திக்காக கடன் வழங்குவது என்ற நிலையைக் கடந்து சென்றிருக்கிறது. உலக அளவில் காய்கறிகள் மற்றும் பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. இந்தத் துறைக்கு அதிகக் கட்டமைப்பு வசதிகளும், தளவாடக் கட்டமைப்பும் தேவைப்படுவது மட்டுமின்றி, அதிக அளவிலான தொடர்நிதியும் தேவைப்படுகிறது. அதேபோல், கிடங்கு இரசீது அடிப்படையில் நிதி பெறும் முறையும் இந்தியாவில் வளர்ந்து வருகிறது. இதற்காக பொருள்களை வாங்குபவர்கள், விற்பவர்கள், சந்தை, கிடங்கு, வங்கி ஆகியவை அடங்கிய ஒட்டுமொத்தச் சூழல் அமைப்பையும், டிஜிட்டல் தகவல் தொகுப்பு மற்றும் கடன் வழங்கும் அமைப்புடன் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமாகும். இதன் காரணமாக, உழவர் அமைப்புகள் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஊரகக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மிக அதிகமான அளவில் கடன் வழங்கும் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் பெரும் பான்மையான கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதள வங்கிச் சேவைகளை வழங்க முடியாத நிலையில் உள்ளன. கூட்டுறவு வங்கிகளில் இணையம் சார்ந்த பாதுகாப்புக்கு போதிய முதலீடுகள் செய்யப்படாததால், கூட்டுறவு வங்கிகளில் நடைபெறும் இணைய முறைகேடுகள் மற்றும் இணையப் பாதுகாப்பு பாதிப்புகள் ஒப்பீட்டு அளவில் அதிகமாக உள்ளன. தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதால், ஏராளமான பயன்கள் இருந்தாலும் கூட, அதற்காக ஆகும் செலவு என்பது ஊரகக் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களால் சமாளிக்கும் அளவில் இல்லை. எனவே, இணைந்து செயல்படும் அணுகுமுறை மற்றும் உத்தி சார்ந்த கூட்டணி முறையில் தொழில்நுட்ப வளங்களைப் பகிர்ந்துகொள்வது விரும்பத்தக்கதாக அமையும். எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளர் விவரங்களைப் பதிவுசெய்தல், உழவர்களின் கடன் பெறும் திறனைப் பட்டியலிடுதல், ‘உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்’ தொடர்பான விவரங்கள், ஆலோசனைச் சேவைகளைப் பரப்புதல், சொத்துக்களைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல், பிற நிதிச்சேவைகளுக்கான வசதிகள், டிஜிட்டல்மயமாக்கப்பட்ட நுகர்வோரைத் தொடர்பு கொள்ளும் முறையை உருவாக்குதல் போன்ற சேவைகளைச் செய்து தருவதற்காக கிராமப்புறக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மற்றொரு எடுத்துக்காட்டு, வேளாண் களங்களைக் கண்காணிப்பதற்கு டிரோன்களைப் பயன்படுத்துவதாகும். வேளாண் காப்பீட்டுத் திட்டங்களின் செயல்திறனையும், துல்லியத்தையும் மேம்படுத்துவதற்கு இது உதவும். ஊரகப்பகுதிகளில் திறன்மிகு கைப்பேசிகள் அதிவேகமாக ஊடுருவி வரும் நிலையில், அவற்றின் வாயிலாக உழவர்களுக்கு சிறப்பான வங்கிச் சேவையை வழங்குவதற்கான மிகப்பெரிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. டிஜிட்டல் முறையில் கடன் வழங்குதல், வழங்கிய கடனைத் திரும்பப் பெறுதல், பணம் வழங்குவதற்கான தீர்வுகள், நிதிசார்ந்த ஆலோசனைகளை வழங்குதல், பயிர் சார்ந்த ஆலோசனைகளை வழங்குதல், ஒற்றை டிஜிட்டல் சாளரம் வழியாக குறைகளைக் களைதல் ஆகிய வடிவங்களில் இந்த வாய்ப்புகள் உருவாகியுள்ளன. கிராமப்புறக் கடன் வழங்கும் அமைப்புகளில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அளவில் கடன் பெறுவதை மேம்படுத்த இது உதவுகிறது.

இணையத்தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்புக் குறைபாடுகளைப் போக்கவும், கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தவும் தேவையான திறன்களை பிளாக்செயின் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்கள் பெற்றுள்ளன. வணிகப் பகுப்பாய்வு என்பது வங்கித்துறையில் வளர்ந்துவரும் இன்னொரு புதிய தொழில்நுட்பமாகும். கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள், கடன் வழங்குதல் மற்றும் அவற்றைத் திரும்பப் பெறுவது தொடர்பான முடிவுகளை சரியான தருணத்தில் எடுப்பதற்கு இந்தத் தொழில்நுட்பம் உதவுகிறது. சிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் கூட்டுறவு வங்கிகள் ஏராளமான தரவுகளை உருவாக்க முடியும். அதே நேரத்தில், தனியார் வங்கிகளைப் போன்று இவற்றால் தகவல் பகுப்பாய்வைப் பயன்படுத்தி

## எக்கோபாநெட்: எர்ணாகுளம் கூட்டுறவு வங்கிகளின் வலைப்பின்னல்
### *(ECOBANet: Ernakulam Cooperative Bank's Network)*

எக்கோபாநெட் (ECOBANet) எனப்படுவது 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட எர்ணாகுளம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் ஒருங்கிணைந்த தொழில்நுட்பத் தளம் ஆகும். எர்ணாகுளம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி கொச்சியில் அமைந்திருக்கிறது. அந்த வங்கியுடன் இணைவு பெற்ற அனைத்து கடன் வழங்கும் சங்கங்களையும் ஒரு பொதுவான தொழில்நுட்பம் சார்ந்த தளத்தில் 'எக்கோபாநெட்' ஒருங்கிணைக்கிறது. இந்த ஒருங்கிணைந்த தொழில்நுட்பத்தின் மூலமாக தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள், அதன் உறுப்பினர்களுக்கு நிகழ்நேர அடிப்படையில் அதிநவீன வங்கிச் சேவைகளை வழங்க முடிகிறது. அந்தக் கடன் வழங்கும் நிறுவனங்கள் தொழில்நுட்ப வசதி கொண்ட நிதிச்சேவை வழங்கும் அமைப்புகளாகச் செயல்பட முடிகிறது. இதன் மூலம் அவை தங்களின் வாடிக்கையாளர்களுக்கு நேரடிப் பணப்பரிமாற்றங்கள், ரூபே கடன் / பற்று அட்டைகள், ஆர்டிஜிஎஸ் / நெஃப்ட், செல்பேசி பாஸ்புக் சேவைகள், மின்னணு வணிகச் சேவைகள், கணக்குத் தொடங்கும் சேவைகள் போன்றவற்றை வழங்க முடிகிறது. தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆதார் மூலமான சேமிப்புக் கணக்குகளை தொடங்குதல், உழவர் கடன் அட்டை கணக்குகளைத் தொடங்குதல் போன்றவற்றை மேற்கொள்வதையும், அவற்றை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நிகழ்நேரத்தில் கண்காணிப்பதையும் 'எக்கோபாநெட்' சாத்தியமாக்கியிருக்கிறது. கிராமப்புற வாடிக்கையாளர்கள் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் டிஜிட்டல் நிதிச் சேவைகளைப் பெறுவதையும், அதன் மூலம் நவீன கால வங்கிச்சேவையை அனுபவிப்பதற்குமான வாய்ப்புகளை 'எக்கோபாநெட்' திறந்துவிட்டிருக்கிறது. எர்ணாகுளம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முழுமையான வங்கிச்சேவை முனையங்களாகச் செயல்பட்டு வருவதுடன், தங்களின் பகுதிகளில் நிதி உள்ளடக்கத்தைத் தீவிரமாக்கி வருகின்றன. கிராமப்புற வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த தளங்களால் எவ்வாறு சிறப்பான வங்கிச் சேவை அனுபவத்தை வழங்கமுடியும் என்பதற்கு 'எக்கோபாநெட்' ஓர் ஊக்கமளிக்கும் எடுத்துக்காட்டு ஆகும். டிஜிட்டல் வழியான வங்கித் தீர்வுகளை செயல்படுத்துவதிலும், அதன் மூலம் வங்கிச்சேவை வழங்கும் செயல்திறனை மேம்படுத்துவதிலும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி போன்ற பெரிய அளவிலான கடன் அமைப்புகள், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் போன்ற அடித்தட்டு நிலையிலான அமைப்புகளுடன் கைகோர்த்துச் செயல்படுவதில் ஆற்ற வேண்டிய மிக முக்கியமான பங்கையும் 'எக்கோபாநெட்' வலியுறுத்துகிறது.

ஆதாரம் நபார்டு [bird-cpec.nabard.org]

முடிவுகளை எடுக்க இயலாது. சிறப்பான வணிகச் செயல்பாடு, உறுப்பினர்களுக்குச் சேவை வழங்குதல் ஆகியவற்றை கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு சாத்தியமாக்கும் திறன் டிஜிட்டல்மயமாக்கலுக்கு மட்டுமே உண்டு.

வங்கிச்சேவை வழங்குவதற்கான வழிகள் மற்றும் முறைகளில் புத்தாக்கத்தையும், மாற்றங்களையும் கொண்டுவர கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.

**நிறைவுரை**

மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொள்கை ஆதரவும், வழிகாட்டுதலும் வழங்குவதற்கான சாத்தியமான வழிமுறைகளை உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் தலைமையில் செயல்பட்டுவரும் கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கியிருக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கணினி மயமாக்குவதற்கான நடவடிக்கை கூட்டுறவு வங்கிச்சேவையில் புரட்சியை ஏற்படுத்தும் திறன் கொண்டது மட்டுமின்றி, கூட்டுறவுக் கடன் அமைப்புகளின் நீண்ட கால நம்பகத் தன்மைக்கும் வழிவகுக்கும். முதலில் கணினிமயமாக்கல் அதைத் தொடர்ந்து டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றைச் செய்வதன் மூலம், நிதி மற்றும் நிதி சாராத திட்டங்களின் சேவை வழங்கலை விரிவாக்க முடியும். கூட்டுறவு வங்கிச் சூழல் அமைப்பில் சிறந்த நிர்வாகத்திற்கும், நல்லாட்சி முறைக்கும் இது வகை செய்யும். டிஜிட்டல்மயமாக்குவதற்கான பொறுப்புகளை மாநிலக் கூட்டுறவு



வங்கிகளும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் எடுத்துக் கொண்டு, தங்களது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அவற்றைச் செயல்படுத்தவும், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நிலையில், அவை முறையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உழவர் சமுதாயத்திற்கு மிகவும் நெருக்கமாக இருப்பது, அவர்களுக்குக் கால காலமாக வங்கிச்சேவை வழங்குவதால் ஏற்பட்ட ஞானம் ஆகியவை வேளாண் கடன் சந்தையில் வணிக வங்கிகளைவிட, கூட்டுறவு வங்கிகளுக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளன. இவற்றுடன் சரியான தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கத்தையும் மேற்கொள்வதன் மூலம், இந்திய வேளாண்துறையின் மாறிவரும் தேவைக்கு ஏற்ப சேவை செய்வதற்கு கூட்டுறவுக் கடன் அமைப்புகள் தயாராகி வருகின்றன. நிதி உள்ளடக்கம், நீடித்த வேளாண்மை மற்றும் வேளாண் வருமானத்தைப் பெருக்குதல் போன்ற மத்திய அரசின் முதன்மை நோக்கங்களுடன் கூட்டுறவுக் கடன் செயல்பாடுகளை இணைக்கும் வகையில், வேளாண் கடன் அமைப்பை முழுமையாக மாற்றுவதற்கு டிஜிட்டல்மயமாக்கம் மிகவும் அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா ஐந்து இலட்சம் கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கான ஊரகப் பொருளாதாரத்தின் பங்களிப்பு கணிசமாக அதிகரிக்கும். இந்த வளர்ச்சி என்பது வேளாண்மை, வேளாண் வணிகம், பண்ணை சாராத தொழில்கள், சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் நிகழும் என்று நம்பப்படுகிறது. இந்தியப் பொருளாதாரத்தின் அளவு அதிகரிக்கும் போது, நிதிச் சந்தையின் அளவும் அதிகரிக்கும். அதில் இருந்து, ஊரகக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் தங்களுக்கான இலாபகரமான வணிகத் திட்டங்களை உருவாக்கிக் கொள்வதுடன், விரிவான பெருநிலைப் பொருளாதார இலக்குகளுக்கும் பங்களிக்க வேண்டும். வேளாண் கடன் கூட்டுறவு அமைப்புகளை ஊரகச் செழுமையின் முகவர்களாக மாற்றியமைப்பதற்கு, மத்திய அரசின் கொள்கை ஆதரவுடன் தொழில்நுட்ப மேம்பாடும் இணைந்து மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக அமையும்.

---

– **அன்சூ சிங்**, இணைப் பேராசிரியர் (ஓய்வு), வைகுந்த் மேத்தா தேசியக் கூட்டுறவு மற்றும் மேலாண்மைக் கல்வி நிறுவனம், புனே, கூட்டுறவு வங்கி மற்றும் நிதித் துறை வல்லுநர்

# தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களும் ஊரக வாழ்வும்

– கி.ரவிச்சந்திரன்

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக தமிழ்நாடு போற்றப்படுகிறது. சேவைகளை வழங்குதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னெடுத்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிரூபிக்கப்பட்ட பங்கு உண்டு. கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயல்பாட்டுப் பதிவாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் தமிழகம் முழுவதும் தற்போது 17 தலைமைச் சங்கங்கள் 216 மத்திய சங்கங்கள் மற்றும் 22,690 தொடக்கச் சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றுள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை ஊரக வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றுகின்றன.

**தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள்**

| வ. எண் | பதிவாளர்/ செயற்பதிவாளர்கள் | சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | தொடக்கச் சங்கங்கள் | மத்தியச் சங்கங்கள் | தலைமைச் சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 7,580 | 7,446 | 127 | 7 |
| 2 | இதர செயற்பதிவாளர்கள் | 15,343 | 15,244 | 89 | 10 |
| 3 | **மொத்தம்** | 22,923 | 22,690 | 216 | 17 |

### ஊரக வளர்ச்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்கு

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 22923 சங்கங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஊரகப்பகுதிகளில் மக்களுக்கு வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் கிராமப்புற அளவிலான கூட்டுறவுக் கடன் அமைப்புகள் ஆகும். அனைத்து கிராமப்புற மக்களுக்கும் கடன் வழங்கும் பணியுடன் பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு இயக்கத்தின் அடித்தளமாக தொடக்க



வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் திகழ்கின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்களின் சட்டம் 1904இல் இயற்றப்பட்ட பிறகு முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1904ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் திரூரில் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் தற்பொழுது மொத்தம் 4453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 151 கிளைகளுடன் 12525 கிராம ஊராட்சிகளில் பரந்து விரிந்த கட்டமைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் நடைமுறை மூலதனமானது உறுப்பினர்கள் பங்குத்தொகை வைப்புகள் கடன்கள் அரசு மானியம் மற்றும் இதர வழிகளில் பெறப்படுகின்றன. இத்தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு முக்கியமாக சிறு குறு விவசாயிகள் மற்றும் பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு அவர்களின்

**தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் முன்னேற்றம்**

| வருடம் | சங்கங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட வைப்புத் தொகை | வழங்கப்பட்ட கடன் |
|---|---|---|---|
| 2017-18 | 4520 | 6606.17 | 17784.88 |
| 2018-19 | 4521 | 6371.79 | 19723.89 |
| 2019-20 | 4525 | 6657.61 | 22746.86 |
| 2020-21 | 4451 | 7131.35 | 28276.17 |
| 2021-22 | 4451 | 7522.00 | 17806.57 |
| 2022-23 (28.02.2023 வரை) | 4453 | 7593.54 | 28549.89 |

கடன் தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2006-07ஆம் ஆண்டு கார்ப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு பயிர் கடனை 7 சதவீத வட்டி விகிதத்தில் வழங்கி வருகின்றன. பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இப்படி ஏற்படும் வட்டி இழப்பானது மத்திய மாநில அரசுகளால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றது. உழவர் கடன் அட்டைத் திட்டத்தின் கீழ் வட்டி ஊக்கத்தொகையைப் பெறுவதற்கான உச்சபட்சக் கடன் வரம்பாக ரூ.3.00 இலட்சத்திற்குட்பட்டும் கால்நடை வளர்ப்புக்கடனாக ரூ.2.00 இலட்சம் வரையிலும் வழங்கப்படுகிறது.

இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கிய மொத்தக் கடன் அளவு ரூ.17784.88 கோடியிலிருந்து ரூ.28549.89 கோடியாக உயர்ந்துள்ளது (2017-22). இதே காலகட்டத்தில் உறுப்பினர் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத்தொகை ரூ.6606.17 கோடியிலிருந்து ரூ.7593.54 கோடியாக உயர்ந்துள்ளது.

**நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் பங்குபெறுதல்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகள் பெருமளவில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உறுதுணையாக இருக்கின்றன. உதாரணமாக இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் பொதுமக்கள் அனைவருக்கும் குறிப்பாக நலிவுற்ற மற்றும் ஏழை மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சரியான நேரத்தில் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் 24,058 முழுநேர மற்றும் 9,644 பகுதிநேர நியாய விலைக்கடைகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பரவலான விநியோகத் தொடரமைப்பைக் கொண்டுள்ளன. மாநிலத்தில் உள்ள மொத்த நியாயவிலைக் கடைகளில் 96.87 சதவீத நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திவருகின்றன. உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதிலும் ஏழைகள் மற்றும் நலிவுற்ற மக்களின் நீடித்த நிலையான வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் பொது விநியோகத் திட்டம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகளில் இலக்கு எண்.1. வறுமையின்மை இலக்கு எண்.2. பசியின்மை மற்றும் இலக்கு எண்.3. ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகிய மூன்று இலக்குகளை அடைவதில் தமிழ்நாடு அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் பெரும் பங்காற்றுகிறது. இவற்றில் 23814 முழுநேரக் கடைகளும் 9360 பகுதி நேரக் கடைகளும் 16 நகரும் கடைகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் ஊரகப்பகுதிகளில் நடத்தப்படுகின்றன.

மேலும் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை 2030ஆம் ஆண்டுக்குள் அடைவதை நோக்கிய பயணத்தில் ஒன்றிய அரசின் பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊராட்சி அளவில் சாத்தியப்பட்ட ஒன்பது கருப்பொருள்களாக ஒருங்கிணைத்துள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகள் இந்த ஒன்பது கருப்பொருள்களை ஊராட்சி அளவில் அடைவதாக உள்ளது.

## நீடித்த நிலையான வளர்ச்சிக்கான ஊராட்சி அளவில் சாத்தியப்பட்ட ஒன்பது கருப்பொருள்கள்

| கருப்பொருள்கள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகள் |
|---|---|
| வறுமையில்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி | (1) பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்குதல்<br>(2) உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில கடன் மற்றும் வட்டியில்லாக் கடன் வசதிகளை அளிப்பது. |
| நல்வாழ்வு கிராம ஊராட்சி | (1) பெண்களுக்காக சுய உதவிக்குழுக்களை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான தொழில்முனைவுப் பயிற்சி அளித்தல்<br>(2) பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தொழில்முனைவுத் திறனை மேம்படுத்த கடன் வசதிகளை ஏற்படுத்துதல் |
| குழந்தைகள் நலன் கொண்ட கிராம ஊராட்சி | குழந்தைகளிடையே சிறுசேமிப்புப் பழக்கத்தை உருவாக்குதல் |
| நீர்த்தேவையில் தன்னிறைவு பெற்ற கிராம ஊராட்சி | விவசாயப் பண்ணை குட்டைகள் அமைத்தல் மற்றும் நீர் மேலாண்மைக்குத் தேவையான கடன் வழங்குதல் |
| சுத்தமான பசுமை நிறைந்த கிராமம் | விவசாயிகளை இயற்கை வேளாண்மைக்கு ஊக்கப்படுத்துதல் தேவையான உரம் மற்றும் இதர சேவைகளை வழங்குதல் |
| உள்கட்டமைப்பும் தன்னிறைவும் அடைந்த கிராம ஊராட்சி | விவசாயிகளுக்குத் தேவையான கிடங்கு வசதிகள் மற்றும் உலர் கலன் வசதிகளை உருவாக்குதல் மற்றும் பொதுச்சேவை மையங்களாக செயல்படுதல். |
| சமூகப் பாதுகாப்பு நிறைந்த கிராம ஊராட்சி | (1) சங்கத்தின் இயக்குநர் குழுவில் 30 சதவீத இடங்கள் பெண்களுக்கும் 18 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தை சார்ந்த உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படுவதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்படுகின்றது.<br>(2) ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பெண்கள் தொழில்முனைவோர்க்கு கடன் வழங்குதல் மற்றும் பங்கு மூலதனம் மானியம் வழங்குதல் |
| சிறப்பான நிர்வாகம் நடைபெறும் கிராம ஊராட்சி | ஜனநாயக முறையில் உறுப்பினர்களால் உறுப்பினர்களுக்காக உறுப்பினர்களாலேயே நடத்தபடுகின்ற கிராம அளவிலான கூட்டுறவு அமைப்பு |
| வளர்ச்சியில் பாலினச் சமத்துவ ஊராட்சி | (1) சங்கத்தின் இயக்குநர் குழுவில் இட ஒதுக்கீடு செய்வது மற்றும் பெண்களுக்கான சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துதல் மூலம் அவர்களுக்கான உரிமைகள் மற்றும் அதிகாரத்தை உறுதிபடுத்துதல் (2) பெண்கள் தொழில்முனைவோர்க்கு கடன் வழங்குதல் மற்றும் பங்கு மூலதனம் மானியம் வழங்குதல் |

ஆனால் இந்த வளர்ச்சி வீதம் எதிர்பார்த்த அளவு இல்லை. அரசின் கொள்கைகளால் உருவான கடன் தள்ளுபடித் திட்டம் விவசாயத்தில் இயற்கைப் பேரிடர்களால் கடந்த காலங்களில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலை அதிக எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டிருக்கும் நுண்கடன் அமைப்புகள் கிராம அளவில் கிரிப்டோ கரன்சியின் தாக்கம் கொரோனா தாக்கம் மற்றும் இதர பல காரணங்களால் சங்கங்களால் பெறப்பட்ட வைப்புத் தொகையிலும் மற்றும் வழங்கப்பட்ட கடன்களின் அளவிலும் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

**(5) விவசாய விளை பொருள்களுக்கு நியாமான விலை கிடைக்காதது.**

இந்தச் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான கடன் மற்றும் பிற வசதிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். ஆனால் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட மொத்த விவசாயக் கடன் அளவானது மிகக் குறைந்த அளவே உள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் விவசாயத்திற்காக வழங்கப்பட்ட மொத்தக் கடனில் அனைத்து குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் அமைப்புகள் கடந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகவே பெற இயலும். எனவே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகள் மற்றும் மேலாண்மையைச் செம்மைப்படுத்துவதன் மூலம் சிறு குறு விவசாயிகளையும் விவசாயத்தையும் காப்பாற்ற இயலும்.

**கொள்கை உரையாடலுக்கான ஆலோசனைகள்**

இக்காலகட்டத்தில் கீழ் வரும் இனங்களைப் பற்றிய கொள்கைகள் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும். இதன்

**தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட கடனில் கூட்டுறவு வங்கிகளின் பங்கு**

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|
| வணிக வங்கிகள் | 109742 (83.9) | 103447 (82.4) | 215602 (90.2) |
| கூட்டுறவு வங்கிகள் | 12866 (9.8) | 14713 (11.7) | 10888 (4.6) |
| மண்டல கிராம வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் | 8256 (6.3) | 7348 (5.9) | 12387 (5.2) |
| | 130864 (100) | 125508 (100) | 238877 (100) |

இந்த வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வு விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. தமிழ்நாட்டில் விவசாயம் கீழ்கண்ட சவால்களை எதிர்கொள்கிறது.

(1) அதிக அளவிலான குறு விவசாயிகளின் சாகுபடி நிலப்பரப்பு மற்றும் அவர்களின் கடன் தேவைகள்

(2) விவசாய நிலங்களைப் பிற உபயோகத்திற்காக மாற்றுதல்

(3) பருவகால மாற்றத்தால் விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட தாக்கம்

(4) விவசாயத்திற்குத் தேவையான வேலையாட்கள் பற்றாக்குறை

காலங்களில் மிகக் குறைந்த அளவே கடன் வழங்கி உள்ளன. உதாரணமாக மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் மாநிலக் கூட்டுறவு விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டக் கடன் அளவு ரூ.12899 கோடியிலிருந்து (2019–20) ரூ.10888 கோடியாகக் (2021–22) குறைந்துள்ளது. இந்தத் தொகை விவசாயத்திற்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 4.6 சதவீதமாகும். தமிழகத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 93 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகளிடம் உள்ளது. இவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கிராம வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும்.

**1). மாநிலக் கூட்டுறவுக் கொள்கை உருவாக்குதல்:**


இந்தியக் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகக் கருதப்படுகிறது. பல கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் அகில இந்திய அளவில் பாராட்டப்படுகின்றன. மேலும் அகில இந்திய அளவில் கூட்டுறவு அமைப்புக்கான கொள்கைகள் வகுக்கப்படுகின்ற இத்தருணத்தில் கூட்டுறவுக் கொள்கைகளின்

அடிப்படையில் மாநிலத்திற்கென்று ஒரு கூட்டுறவுக் கொள்கை இயற்றப்பட வேண்டும். இந்தக் கொள்கை சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் அதனைச் சார்ந்த உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையான தேவை கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் பற்றிய தரவுத்தளமாகும். கடந்த காலங்களில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளுக்கு என்று ஒரு தரவுப் புத்தகத்தை வெளியிட்டது. தற்பொழுது தரவுகள் அலுவலகக் குறிப்புகளில் மட்டுமே காணப்படுகிறதே ஒழிய பொதுவெளியில் மக்கள் பார்வைக்கு வருவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்கும் இந்நேரத்தில் நம்பகமான கூட்டுறவுத் தரவுக் களஞ்சியம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் உருவாக்கப்பட வேண்டும்.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளைக் கணினி மயமாக்கல்:**

இந்திய அரசு செயல்பாட்டிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகளைக் கணினிமயமாக்க ரூ.2516 முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சங்கங்களின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை கூடுதல் செயல்திறன் நம்பகத்தன்மையை மேம்படுத்தப்படுவதுடன் கிராமப் பஞ்சாயத்து அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மேம்படுத்தப்பட்ட நிறுவனமாகச் செயல்படவும் ஏதுவாகும். இந்திய அரசு கணினிமயமாக்குதல் திட்டத்தின் கீழ் தமிழக அரசு அனைத்து 4453 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகளை ஒரே கட்டமாக கணினிமயமாக்க முடிவு செய்துள்ளது.

கணினிமயமாக்குதல் சம்பந்தமாக கடந்த காலங்களில் பேராசிரியர் வைத்தியநாதன் குழு பரிந்துரையின்படி மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் எதிர்பார்த்த அளவு பலனை அளிக்கவில்லை. எனவே தற்பொழுது கணினிமயமாக்கும் திட்டத்தில் உயர்தொழில்நுட்பம் உள்ளடக்கிய கணினிகளை இயக்குவதில் திறன்சார்ந்த பயிற்சி சங்கத்தில் உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். வட்டார அளவில் தொழில்நுட்பக்குழு ஏற்படுத்தி தேவைப்படும் நேரத்தில் சங்கங்களுக்கு உடனடி தொழில்நுட்ப வசதி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மையப்படுத்தப்பட்ட வங்கியியல் தீர்வு முறையிலான சேவைக்கு (CORE Banking Solutions) உட்படுத்தப்பட வேண்டும்.






**பொதுச்சேவை மையங்களாகச் செயல்படுதல்:**

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்குக் கடன் வசதிகள் மற்றும் பிற சேவைகளை வழங்குவதாக இருந்தது. நாளடைவில் வியாபார விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது அகில இந்திய அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொதுச்சேவை மையங்களாக மாற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாழ்திறனை மேம்படுத்திடவும் ஊரக வளர்ச்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஓர் இன்றியமையாக் காரணியாக உருவாக இச்சங்கங்களை பல்நோக்கு சங்கங்களாக மேம்படுத்தவும் முடிவு செய்துள்ளது. இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் ஒவ்வொரு சங்கத்திற்கும் தேவையான அளவு எண்ணிக்கையில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மானியத்துடன் கூடிய நிதி உதவி கணினிமயமாக்குதல் மற்றும் சங்கங்களுக்கிடையேயான கூட்டுறவை மேம்படுத்துதல் ஆகியவையாகும்.

**கடன் வழங்குவதில் புதிய மாதிரிகளை உருவாக்குதல்:**

தொடக்க காலத்தில் இருந்து இன்று வரை சங்கங்களின் கடன் வழங்கும் பணிகளில் பல்வேறு வகையான மேம்பாடுகள் நடந்துள்ளன. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் உள்ளூர் சந்தையில் இருந்து உலகப் பொருளாதாரம் வரை ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப சங்கங்களின் கடன் வழங்கும் பணிகளில் மாற்றங்களைக் கொண்டுவர இயலவில்லை. புதிய கடன் யுத்திகளைக் கண்டறிந்து இக்கால சந்ததியினர்களை கூட்டுறவின்பால் ஈர்க்கும் பொருட்டு விவசாயிகளுக்கு விவசாயம் சாரா இனங்கள் மூலம் வருவாயைப் பெறவும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கி கிராமபுறத்தை வளர்ச்சியடையச் செய்யவும் புதிய கடன் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

**கிடங்கு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துதல்:**

தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 414100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3883 கிடங்குகளைக் கொண்டுள்ளன. அவற்றில் 1050 கிடங்குகள் ஏற்கெனவே கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும் விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விலையினைப் பெற்றுத் தரவும் சிறு குறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக தானிய ஈட்டுக்கடன்களை வழங்க இந்தக் கிடங்குகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. தரவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது இச்சங்கங்கள் வழங்கிய தானிய ஈட்டுக் கடன்களுக்கும் மற்றும் கிடங்குகளின் கொள்ளளவு பயன்படுத்தப்பட்ட வீதத்திற்கும் இடையே மிக அதிக அளவில் வேறுபாடு உள்ளது. மேலும் இந்தக் கடன்கள் பெருமளவில் விவசாயிகளால் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே விவசாயிகள் அவர்தம் விளைபொருள்களைச் சேமித்து உரிய நேரத்தில் நல்ல விலைக்கு விற்க ஏதுவாக கிடங்கு வசதிகளை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்த ஏற்பாடு செய்தல். விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விற்பனையைப் பெற்றுத் தர விவசாயக் கடன் மற்றும் விளைபொருள் விற்பனைகளுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துதல் ஆகியவை இன்றியமையாதன.

**அனைத்து உறுப்பினர்களுக்கும் காப்பீடு வழங்குதல்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் நலனைப் பேணிக்



காக்கும் பொருட்டு அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் தேவையான பொது மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கலாம். இதற்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் காப்பீட்டு நிறுவனங்களின் பெருநிறுவன முகவர்களாகச் செயல்படலாம். இதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க இயலும்.

**உறுப்பினர்களுக்கான நல நிதி**

உறுப்பினர்களின் குடும்பங் களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க அளவில் நலநிதி உருவாக்கப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு வருடமும் சங்கத்தின் இலாபத்தில் இரண்டு சதவீதம் சட்டப்பூர்வ நிதியாக ஒதுக்கப்பட வேண்டும். இந்த நிதியின் மூலம் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் விபத்து மரணம் இறுதிச்சடங்கு செலவுகள் உறுப்பு இழப்பு பெண் குழந்தைகளின் திருமணம் மற்றும் கல்விச்செலவு உள்ளிட்ட அத்தியாவசியச் செலவுகளுக்கு உறுப்பினர்களுக்கு நிதி உதவி செய்யலாம். இதற்கு ஏதுவாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 72ல் தேவையான சரத்துகள் சேர்க்கப்பட வேண்டும்.

**8). சுய உதவிக் குழு கூட்டுப் பொறுப்புக் குழுக்களை சங்கத்தின் வியாபாரத்துடன் இணைத்தல்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தங்கள் பகுதியிலுள்ள சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப்பொறுப்புக் குழுக்களை தங்களுடைய வியாபார முகவர்களாகச் செயல்பட அனுமதி அளிக்கலாம். மேலும் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப் பாட்டிலுள்ள பயன்படுத்தப்படாத இடங்கள் கிடங்குகள் மற்றும் இதர சொத்துக்களை சுய உதவிக்குழுக்கள் வியாபார நோக்கில் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புகளை உருவாக்கலாம். உதாரணமாக சுய உதவிக்குழுக்களை கடன் வசூலித்தல் வைப்புத் தொகைகளைப் பெறுதல் காப்பீட்டு முகவர்களாகச் செயல்பட பயிற்சி அளித்து தங்களுடைய வியாபாரத்துடன் இணைத்துக் கொள்ளலாம்.

இதன் மூலமாக நேரடியாக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமாகவும் பயன்படுத்தப்படாத சொத்து களை பயன்படுத்தவும் மற்றும் சங்கங்கள் வட்டி சாரா வருமானத்தை ஈட்ட இயலும்.

**சுய உதவிக் குழு மற்றும் கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு தொழில்முனைவுப் பயிற்சி அளித்தல்:**

ஊரக வளர்ச்சியில் அப்பகுதியிலுள்ள வளங்களைச் சார்ந்த தொழில்முனைவு என்பது இன்றியமையாததாகும். தமிழ்நாட்டில் முன்னோடி வணிக வங்கிகளால் நடத்தப்படுகின்ற 33 ஊரக வளர்ச்சி மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்தப் பயிற்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்குத் தேவையான தொழில்முனைவுப் பயிற்சியினை அளிக்கலாம். அவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சிக்குப் பிறகு உறுப்பினர்களால் தொடங்கப்படும் விவசாயம் மற்றும் விவசாயத்தை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்குத் தேவையானக் கடன் வசதிகளை சங்கங்கள் வழங்கலாம்.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வியாபார வளர்ச்சித் திட்டத்தை கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்துடன் இணைத்தல்:**

கிராமத்தின் வளர்ச்சித் திட்டம் என்பது கிராம வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வியாபார வளர்ச்சித் திட்டம் என்பது உறுப்பினர்களின் தேவையை மையமாக வைத்து உருவாக்கப்படுகிறது. ஆனால், நெடுங்காலமாக இந்த இரண்டு திட்டங்களுக்கும் இடையே மிகப்பெரிய அளவில் இடைவெளி

இருந்து கொண்டுவருகிறது. குறிப்பாக கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வியாபார வளர்ச்சித் திட்டம் எந்தவொரு தாக்கத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை பாதிக்கும் வகையில் இருக்காது. தமிழகத்தைப் பொருத்தவரையில் கிராமத்தில் உள்ள அனைவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயல்பாடுகளில் பங்கு கொள்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட கிராம சமூகத்தை மேம்படுத்த உருவாக்கப்படுகின்ற இரண்டு திட்டங்களும் வெவ்வேறு பாதையில் செல்ல முடியாது. எனவே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வளர்ச்சித் திட்டம் கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தைப் பிரதிபலிக்குமாறு தயாரிக்கப்பட வேண்டும். மேலும் தமிழக அரசின் வழிகாட்டுதல்படி கிராம சபைக்கூட்டம் வருடத்திற்கு ஆறு முறை நடத்தப்பட வேண்டும். அதே கிராமத்தில் செயல்படுகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கத்தின் அலுவலர்கள் கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்றால் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மூலமாக கிராம வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய பணிகளை பற்றி ஆய்வு செய்வதுடன் இரண்டு அமைப்புகளும் சேர்ந்து கிராம வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

**உன்னத் பாரத் அபியான் திட்டத்துடன் இணைதல்:**

இந்திய அரசின் கல்வி அமைச்சகம் உன்னத் பாரத் அபியான் திட்டத்தை 11.11.2014 அன்று தொடங்கியது. இத்திட்டத்தின் மூலமாக இந்தியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு அருகிலுள்ள கிராமங்களைத் தேர்வு செய்து அக்கிராமங்களின் வளர்ச்சிக்கான தொழில்நுட்ப வசதிகளை செய்து கொடுக்கின்றன. எனவே சங்கங்கள் உன்னத் பாரத் அபியான் திட்டத்தில் இணைந்துள்ள உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தங்கள் கிராமங்களின் வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலமாக கிராம வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் நேரடியாக பொது மக்களைச் சென்றடைய ஏதுவாகின்றன.

**முன்னேற விழையும் மாவட்டத் திட்டத்துடன் இணைதல்:**

இந்திய அரசு முன்னேற விழையும் மாவட்டத் திட்டத்திற்காக 115 மாவட்டங்களை 28 மாநிலங்களில் தேர்வு செய்து ஜனவரி 2018 அன்று துவங்கியது. இந்தத் திட்டத்தின் கீழ் உடல்நலம் ஊட்டச்சத்து கல்வி விவசாயம் நீர்வளங்கள் நிதி மற்றும் திறன் வளர்ச்சி அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவை முக்கிய வளர்ச்சியினங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொருத்தவரையில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படுள்ளன. இந்த மாவட்டத்தில் செயல்படுகின்ற கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மேற்கூறிய அனைத்து வளர்ச்சிக் குறியீடுகளுக்கும் தேவையான சேவைகளைச் செய்ய இயலும். எனவே சங்கங்களின் வியாபார வளர்ச்சித் திட்டம் மேற்கூறிய வளர்ச்சித் திட்டங்களைப் பிரதிபலிக்குமாறு தயாரிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை:**

கூட்டுறவு அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி மாதிரியைப் புதுப்பித்தல் ஊக்குவித்தல் மற்றும் வளரச்செய்தல் மாநிலத்தில் பல்வேறு துறைகளில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல் மற்றும் அடித்தட்டு மக்கள் வரை அது சென்றடைய வகை செய்தல் ஆகியவற்றினை அடைய "கூட்டுறவின் மூலம் செழுமை" என்ற தொலைநோக்கை நனவாக்க தமிழ்நாடு செயல்படுகிறது. ஆனால் நிலையான வளர்ச்சிக் குறியீடுகளை எய்துவதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வியாபார வளர்ச்சித் திட்டம் கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை பிரதிபலிப்பதாக இல்லை. மேலும் நிலையான வளர்ச்சிக் குறியீடுகளை எய்துவதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்கு பற்றி தேவையான கொள்கை அளவிலான செயல்பாடுகளும் இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உதவிகள் இல்லாமல் நிலையான வளர்ச்சிக் குறியீடுகளை எய்துவது என்பது இயலாதது. எனவே கொள்கை அளவிலான முடிவுகள் எடுக்கப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகளை நிலையான வளர்ச்சி இலக்குக் குறியீடுகளை கிராமப் பஞ்சாயத்து அளவில் எய்துவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

---

– **கி.ரவிச்சந்திரன்**
பேராசிரியர் கூட்டுறவியல் துறை
காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.

# இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை

– சவுரப் குமார் திவாரி
– அன்ஷமன் கமிலா

நவீனத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அரசின் பொதுச்சேவை வழங்கலில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனைச் செயல்பாடு பத்தாண்டுகளுக்கு முன்பு துவங்கிய பின் ஏப்ரல் 2023 வாக்கில் 300க்கும் மேற்பட்ட மத்திய அரசுத் திட்டங்களுக்கும், 2000க்கும் மேற்பட்ட மாநில அரசுத் திட்டங்களுக்கும் இது விரிவாக்கப்பட்டிருக்கிறது. நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்பது, பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி, சமூகப் பாதுகாப்புத் திட்டப் பண வழங்குதலை பயனாளிகளுக்கு அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கும் அரசின் ஒரு செயல்பாடாகும். இதனால், நிதிக் கசிவுகளும், லஞ்சமும் தடுக்கப்பட்டு, திட்டப் பயன்பாடுகள், பயனாளிகளுக்கு நேரடியாகச் சென்றடைந்து அதிக மக்கள் அதன் மூலம் பயன்பெறுவர்.

இந்தியா ஒரு சமுதாய நல நாடாக விளங்குகிறது. எல்லோருக்கும் உரிமைகளும், நலிந்தவர்களுக்கு சிறப்பு உரிமைகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் காக்கும் வண்ணம் அடிப்படை உரிமைகளும், அரசுக் கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிகளும் உள்ளன. இந்த இரு முனைவுகளுக்கும் பெரும் செயலாக்கம் அளிக்கும் வகையில் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைந்துள்ளது. இந்த வகையில் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை, அரசியலமைப்பு சட்டப் பிரிவு 21க்கு அதிக பலத்தை அளிக்கும் வகையில் வருமானம், வாய்ப்புகள் மற்றும் வளங்களில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் குடிமக்களின் உடல்நலத்தையும், வலிமையையும் மேம்படுத்தவும், வேலை செய்ய உரிமை அளிக்கவும், இவை தேவைப்படுபவர்களுக்கு அரசு உதவி செய்வது போன்ற அரசு கொள்கையின் வழிகாட்டு நெறிகளைத் திறம்பட செயல்படுத்தவும் உதவுகிறது. அரசின் நலத் திட்டங்களின் பயன்பாடுகளை மக்களுக்குத் திறம்பட வழங்குவதற்கு இந்த நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைந்து இந்தியாவின் நவீன கால சிறந்த ஆளுகைக்கு அடையாளமாக விளங்குகிறது.

### நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனைக்கான பொருளாதாரச் செயல்முறை:

பல சேவைகளுக்கான விலையில் மானியம் அளிக்கும் போது, ஏழை மக்களை விட வசதியான குடும்பங்களே மிகவும் பயனடைகின்றன (உதாரணமாக, மின்சாரம், குடிநீர் மற்றும் எரிபொருள் மானியங்கள்). இறுதியில் இதனால், ஏழை மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் (உதாரணமாக, குறைந்தபட்ச ஆதரவு விலைகள் அல்லது ரயில் பயணிகளுக்கான மானியங்கள்). மேலும், அரசு செலவினங்களில் இடைக்கசிவு ஏற்படுவதால் நேரடியாக இழப்புகள் ஏற்படுவதோடு, இந்தத் தொகையை எப்படி அரசு வேறு விதமாக பயன்படுத்தியிருக்க முடியும் என்பதும் பூதாகாரமாக விளங்குகிறது. அதனால் விலை மானியங்கள் அளிக்கப்படும் திட்டப் பயன்களை ஏழை மக்களுக்கு மொத்தமாக நேரடியாகவே வழங்கினால் இந்த மானியங்களால் ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்கலாம் என்று பொருளாதார ஆய்வறிக்கை கூறியுள்ளது. இந்தப் பின்னணியின் அடிப்படையில் மானியங்களை நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனையாக மாற்ற ஜன் தன், ஆதார் மற்றும் கைப்பேசி எண் என்ற மூன்று செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டன.

### நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்றால் என்ன?

நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்பது ஆரம்பக் கட்டத்தில் மக்கள் நலத் திட்டங்களின் பயன்பாட்டுத் தொகையையும், பயனாளிகளையும் அரசு அடையாளம் கண்டு அவர்களுக்கு நேரடியாக வங்கி அல்லது அஞ்சலகக்கணக்குகளில் பணத்தைச் செலுத்துவதாகும். முதன்முதலாக, சுமார் பத்தாண்டுகளுக்கு முன் மத்திய அரசின் 24 திட்டங்களில் 43 மாவட்டங்களில் இது செயல் படுத்தப்பட்டது. இதுவரை, நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனையில் பயன்பாடு பெறத்தக்கவர்களுக்கான நிதி ஆதரவு 300க்கும் மேற்பட்ட மத்தியத் திட்டங்களிலும் 2000க்கும் மேற்பட்ட மாநிலங்களின் திட்டங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன. இப்படி

நேரடியாக பணப் பரிவர்த்தனை செய்யப்படும் திட்டங்களில் சிறப்பாக பிரதம மந்திரி வேளாண் நிதி உதவித் திட்டம் மற்றும் தேசிய சமுதாய ஆதரவுத் திட்டங்களான முதியோர், ஆதரவற்றவர்கள் மற்றும் கைம்பெண்களுக்கான நிதி உதவித் திட்டங்களைக் கூறலாம். இதைப் போலவே, நலிந்த மற்றும் பிற பிரிவினர்களுக்கு கல்வி உதவித்தொகை, பொது விநியோகத் திட்டங்களின் கீழ் உரங்கள், உணவு தானியங்கள் ஆகியவற்றிற்காக வழங்கப்படும் மானியங்கள் மற்றும் பிரதம மந்திரி ஊட்டச்சத்துத் திட்டமான குழந்தைகளுக்கான மத்திய உணவுத் திட்டம் ஆகியவற்றையும் கூறலாம். இதில் முதல் வகையாக உதவித்தொகைகள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகின்றன. இரண்டாவது வகையாக பயனாளிகளுக்கு பொருள்களாக வழங்கப்படுகின்றன. பயன்பெறும் மக்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு மட்டுமே நேரடியாக உதவித்திட்டங்களை வழங்க மின்மய அடையாள அட்டையான ஆதார் உருவாக்கப்பட்டுள்ளது. பயனாளிகளைப் பட்டியலிடும் போது அவர்களுடைய ஆதார் எண் இணைக்கப்படுகிறது. பிறகு, இந்தியாவின் தனிப்பட்ட அடையாளம் பதிக்கும் வாரியத்தின் மத்திய தகவல் தொகுப்புத் தரவுகள் மூலம் இந்த நபரின் அடையாளம் உறுதி செய்யப்படுகிறது. பிறகு, அரசின் பல்வேறு சேவை வழங்கு திட்டங்களோடு இணைக்கப்படுகிறது.

### நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனைக்கான இந்தியத் தொகுப்பு

நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்பது ஒரு சமுதாய நலத்திட்டம் அல்ல. ஆனால், பல திட்டங்களின் செயல்பாடுகளால் பயனாளிகளுக்கு நேரடியாக அதன் பயன்களை அளிப்பது சார்ந்த தகவல் ஒருங்கிணைப்பாகும். பணப்பரிவர்த்தனை செய்யவேண்டிய நிலையில் நேரடிப் பரிவர்த்தனை அமைப்பு ஆதார் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக நலப் பயன்பாட்டு நிதியை பயனாளிகளுக்கு நேரடியாக வழங்குகிறது. ஆகவே, ஆதார் எண்ணைப் பயன்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நபரை அடையாளம் காண்பதோடு மட்டுமல்லாமல் அவருடைய நிதி முகவரியும் அறியப்படுகிறது. இந்த ஆதார்சார் பண வழங்கல் முறையில் அதே கணக்கிலிருந்து பயனாளி பிற வங்கிச் செயல்பாடுகளையும் மேற்கொள்ள முடியும். இந்த முறையில் இண்டியாஸ்டாக் அமைப்பு திட்டப் பயனாளியின் அடையாளத்தையும் பணவழங்குமுறையையும் வலைதளம் மூலமாகவும், காகித உபயோகம் இல்லாமலும் பணத்தை உபயோகப்படுத்தாமலும், பயனாளியின் இரகசியத்தைக் காப்பாற்றியும் சேவைகளை வழங்குகிறது.

### G20 நாடுகளின் செயல்திட்டத்தில் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை

இது அல்லாமல், இந்திய நாடு ஒரு வகையில் உலகத்தையே பிரதிபலிக்கக்கூடிய பன்முகத்தன்மை கொண்டுள்ளதால் நாம் குடிமக்களின் நலனுக்காக தொழில்நுட்பத்தைச் செயல்படுத்தும்போது, இது உலகளாவிய மக்களின் எண்ணங்களில் அடிப்படை மாற்றத்தையும், பெரும் பலன்களையும் விளைவிக்கும் என்று கருதப்படுகிறது (பிரதம மந்திரி அலுவலகம் 2022). நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை இந்தியாவின் புத்தாக்கல் முனைவுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும், உலகளாவிய சிந்தனையுடன் ஒன்றிப்போகக் கூடியதாகவும் உள்ளது. G20 தளத்தைப் பயன்படுத்தி, நாட்டில் உருவாக்கப்பட்ட நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைப்பு முறையை உலகுக்கு, குறிப்பாக வளரும் நாடுகளுக்கு வழங்க இந்தியா உத்தேசித்துள்ளது. (இந்திய பிரஸ் டிரஸ்ட் 2023) உலகளாவிய நாடுகளின் எல்லோருக்குமான நிதிச் சேவைகள் என்ற அமைப்பில் இந்தியா இணைத் தலைவராகச் செயல்படுவதிலும் இந்த நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை கொண்டு நம் நாடு, உலகளவில் எல்லோரையும் உள்ளடக்கிய பொறுப்பான எண்ம நிதிச்சூழல் கட்டமைப்பை உருவாக்க முனைந்துள்ளது. இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைப்பு, வெளிப்படைத் தன்மையையும் உருவாக்குகிறது என்பதை G20 நாடுகளின் ஊழலுக்கு எதிரான செயற்குழு கூட்டத்திலும் விளக்கப்பட்டுள்ளது. (பத்திரிகை தகவல் அலுவலகம் 2023).

### இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை முறைக்கு உலக நாடுகள் பாராட்டு:

இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்பது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, சமுதாய நலத் திட்டங்களின் பயன்களை, பயனாளிகளுக்கு அவர்களின் வங்கிக்கணக்கு மூலம் நேரடியாக வழங்கி, திட்டச் செயல்பாட்டுக் கசிவுகளையும், லஞ்சத்தையும் குறைத்து எல்லா குடும்பங்களையும் அணுகி, திட்டங்களை விரிவுபடுத்த ஏதுவாக உள்ளது. இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை செயல்முறை கோடிக்கணக்கான

ஏழை எளிய மக்களுக்கு அரசின் நலத்திட்டப் பயன்பாடுகளை நேரடியாக வழங்குவதில் பெரும் வெற்றியடைந்துள்ளதாக பன்னாட்டு நிதி அமைப்பு பாராட்டியுள்ளது. எண்ம நிதிப் பரிவர்த்தனை மூலம் இந்தியா 85 சதவிகித கிராமப்புறக் குடும்பங்களுக்கும் 69 சதவிகித நகர்ப்புறக் குடும்பங்களுக்கும் உணவு மற்றும் நிதி வழங்கலை மிகப்பெரிய அளவில் செயல் படுத்தியுள்ளதாக உலக வங்கியும் பாராட்டியுள்ளது. இதே சமயத்தில் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை மற்றும் அது சார்ந்த அரசின் சீர்திருத்த முனைவுகள் மூலம் இந்திய அரசு மார்ச் 2021 வரை 2,23,000 கோடி ரூபாய் அளவிற்கு சேமிப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும், உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 1.1 சதவிகிதம் அளவில் இது உள்ளதாகவும் கருதப்படுகிறது (அலோன்சோ, மற்றவர்கள் 2023).

**நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனையின் எதிர்காலம்:**

இந்த நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை என்பது ஒரு சிறிய முயற்சியே. நாம் பயணிக்க வேண்டிய தூரம் நிறைய உள்ளது. ஆகவே. இந்த நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனைத் திட்டத்தின் இரண்டாம், மூன்றாம் பரிமாண சீர்திருத்த வேலைகள் ஏற்கனவே தொடங்கியுள்ளன.

• ஏதாவது ஒரு அரசுத் திட்டத்தில் பயன்பெறுவதற்கு குடிமக்கள் பல ஆவணங்களையும், சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் அவை உண்மையானவையா அல்லது போலியானதா என்று கண்டுபிடிக்க பல காலம் ஆகிறது. சில சமயங்களில் அவைகளை வழங்கிய துறைகளிடம் விசாரிக்க வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட எல்லா ஆவணங்களையும் ஒருவருடைய ஆதார் எண்ணுடன் இணைப்பதால் அவற்றைத் துரிதமாகச் சோதித்து முடிவெடுக்க முடியும். இதனால், குடிமக்களுக்கும் நன்மை பயக்கும் வண்ணம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மையை அதிக செலவில்லாமல் உடனுக்குடன் அறிய முடியும். டிஜி லாக்கர் மற்றும் API Setu எனப்படும் பொதுவான செயலி செயலாக்க இணைப்பு ஆகியவை மக்களுக்கு வழங்கப்படும் ஆவணங்களையும்; மற்றும் சான்றிதழ்களையும் எண்ம முறையில் வெளியிட உதவுகிறது. இவற்றை இணையதளம் மூலமே சோதித்து உறுதி செய்யமுடியும். ஏப்ரல் 21, 2023இல் அரசுப் பணிகள் நாளன்று உரையாற்றிய பிரதமர் இந்த அணுகுமுறையைப் பற்றிக் குறிப்பிட்டார் அதன்படி, இதற்கான கொள்கைகள் வரையப்பட்டு, அதற்கான தொழில்நுட்பத் தளங்கள் உருவாக்கப்பட்டு பல மாநிலங்களும், மத்திய அரசின் அமைச்சகங்களும், துறைகளும் இதனைப் பின்பற்றி வருகின்றன. மற்றவர்களும் இந்த முறையைப் பின்பற்ற ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

• நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை 3.0 பரிணாம வளர்ச்சியில் குடிமக்களுக்கு திட்டப் பயன்களை வழங்குவதில் பெருமாற்றங்கள் ஏற்பட உள்ளன. இப்போதுள்ள நிலைமையில் குடிமக்கள் அரசுகளுனுடைய பல திட்டங்களை கண்டுபிடித்து, அவற்றிற்குத் தாங்கள் உகந்தவர்களா என்று அறிந்து கொண்டு செயல்படுத்தும் அமைப்புக்கு விண்ணப்பித்துப் பலன்களை பெற வேண்டியுள்ளது. ஆனால், அரசினுடைய எல்லா அமைப்புகளிலும் உள்ள இதுபோன்ற தகவல்களை ஒன்றுதிரட்டி ஒவ்வொரு திட்டத்திற்குமான பயனாளி யார் என்பதை ஆதார் தகவல்களின் அடிப்படையில் அரசே முடிவு செய்து அவர்களை அணுகி குறிப்பிட்ட திட்டப் பலன்களைப் பெற விரும்புகிறார்களா என்று கேட்டறியலாம். பல மாநில அரசுகள் இப்படிப்பட்டத் திட்டங்களை செயல்படுத்தும் வண்ணம் 'பல வகையான சமுதாயப் பதிவேடு'களை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

உதாரணமாக, கர்நாடகாவில் 'குடும்பா' ஹரியானாவில் 'பாரிவார் பஹசான்', மத்தியப் பிரதேசத்தில் 'சாமக்ரா' ராஜஸ்தானில் 'ஜன் ஆதார்;' மற்றும் ஒடிசாவில் 'சமுதாயப் பாதுகாப்பு வழங்குதளம்' ஆகியன. இன்றைய நிலையில் தேவையானது பல்வேறு மாநில அரசுகளின் முனைவுகளின் அனுபவங்களின் அடிப்படையில் தேசிய அளவில் ஒரு சிறந்த சமுதாயப் பதிவேடு உருவாக்கப்பட்டு, இந்தியாவின் ஆளுமையையை சிகரத்தில் ஏற்ற வேண்டும்.

**முடிவாக**

இந்தியாவின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைப்பு சிறப்பாகச் செயல்பட்டு, வருங்காலங்களில் பரிணாம வளர்ச்சியைப் பெறும் நிலையில் நம்முடைய அனுபவங்கள் தற்போது இந்தியாவின் தலைமையில் செயல்பட்டு வரும் G20 நாடுகளின் கலந்தாலோசனைகளுக்கு மிகுந்த பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நம்முடைய எண்ணங்களான உலகம் ஒரு குடும்பம், அனைவருக்கும் ஒரே எதிர்காலம் என்ற எண்ணம் சிறப்புற நிறைவேறும்.

---

– **சவுரப் குமார் திவாரி**, இணைச் செயலாளர், இந்திய அரசின் நேரடிப் பயன்பாட்டுப் பரிவர்த்தனை அமைப்பு.
– **அன்ஷமன் கமிலா**, உதவி இயக்குநர், அமைச்சரவைச் செயலகம், இந்திய அரசு.

இந்திய சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா

# இந்திய தேசிய இராணுவ வீராங்கனை சிவகாமி அம்மையார்

– ச. இளந்திரையன்.

தருமபுரி மாவட்டத்தில் அன்னசாகரம் பகுதி கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலுக்கு மிகவும் புகழ்வாய்ந்த இடமாகும். இங்கு உற்பத்தியாகும் கைத்துண்டுகள் 'காசித் துண்டு' என்று அழைக்கப்படும் சிறப்பு வாய்ந்தவை. இவை இங்கு உற்பத்தியாகி வடஇந்திய புனிதத்தலமான காசி நகரில் விற்பனைக்கு அனுப்பப்படுவதால் இப்பெயர் பெற்றது என்பர். தருமபுரி மாவட்டத்தின் அன்னசாகரம் என்னும் சிறிய கிராமத்தில் மாரிமுத்து முதலியாருக்கும் சின்னத்தாய் அம்மாவுக்கும் மகளாக 1.4.1933ஆம் ஆண்டு சித்திரை மாதம் திங்கட்கிழமை குடும்பத்தின் இரண்டாவது மகளாகப் பிறந்தவர் சிவகாமி அம்மையார். மூத்த மகனாகப் பிறந்தவர் பரமானந்தம். கடைசி மகளாக பிறந்தவர் சண்முக ஈஸ்வரி ஆகியோர்.

வறுமை நிலை காரணமாகவும், தருமபுரி மாவட்டத்தில் போதுமான அளவு விவசாயம் பொருளாதார வளம் இல்லையென்ற காரணத்தாலும், இவர்களின் குடும்பம் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் மலேசியாவிற்கு இடம்பெயர நேரிட்டது. அப்போது சிவகாமி அம்மையார் ஒன்றரை வயது சிறு குழந்தையாக இருந்தார். இவரின் பெற்றோர் அங்கு சென்று ரப்பர் தோட்ட வேலைகளையும். தோட்டங்களைப் பராமரித்தல் போன்ற வேலைகளையும் செய்து வந்தனர்.

### சிவகாமி அம்மையார் படிப்பும், இந்திய தேசிய இராணுவமும்.

சிவகாமி அம்மையார் மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூர் உள்ள ஜெய்ஹிந்த் இந்தி பாட சாலா என்றப் பள்ளியில் படித்தார்.

ராஷ் பிஹாரிபோஸ் தலைமையில் அமைக்கப்பட்ட இந்திய சுதந்திரலீக் முதலாவது இந்திய தேசிய இராணுவத்தைத் துவக்கி வைத்தது. 1943 ஜூலை மாதம் 4ஆம் தேதி இரண்டாவது தேசிய இராணுவம் நேதாஜியால் அமைக்கப்பட்டது. இந்த தகவல் உலக முழுவதற்கும் அறிவிக்கப்பட்டது.

1939–1945 ஆம் ஆண்டு வரை இரண்டாவது உலகப்போர் நடைபெற்றது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவதில் நேதாஜி ஈடுபட்டார். இதன் காரணமாக 1940 ஜூலை பிரிட்டிஷ் படை நேதாஜியை சிறையில் அடைத்தது. உலகப்போரின் ஆரம்பத்தில் இந்திய தேசிய இராணுவப்படை திறமையாகச் செயல்பட்டது. இதன் மூலம் பிரிட்டிஷ் படைக்குத் தோல்வி ஏற்பட்டது. இந்த நிலையில் எதிரி நாடுகளிடமிருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்று நேதாஜி எண்ணினார். அதற்கு சிறையிலிருந்து வெளியே வரவேண்டும் என்று கருதினர்.

1940ஆம் ஆண்டு நவம்பரில் சிறையில் உண்ணாவிரதம் தொடங்கினார். பிரிட்டிஷ் அரசு சுபாஷ் சந்திரபோஸ் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிகமாக கிளர்ச்சிகள் ஏற்படும் என்று அறிந்திருந்தது. இதனால் சுபாஷ்சந்திரபோசிடம் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி



பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகள் கெஞ்சினார்கள். ஆனால் சுபாஷ் இணங்கவில்லை. உண்ணாவிரதம் தொடங்கி ஒரு வாரம் ஆயிற்று. நேதாஜி சுபாஷ்சந்திரபோஷ் உடல்நிலை மோசம் அடைந்தது. வேறுவழியின்றி பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. ஆனால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் வீட்டைச் சுற்றிலும் இரகசியக் காவலர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது. நண்பர்களின் உதவியைப் பெற்று இந்தியாவிலிருந்து வெளியேறிடவேண்டும் என சுபாஷ்

தீர்மானித்தார். 1940ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம்தேதி நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் தப்பிசென்றார்.

இந்தியாவின் எல்லையைக் கடந்து பின்னர் ஆப்கானிஸ்தான் சென்றார். இத்தாலி நாட்டு தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இத்தாலிக்கு செல்ல அனுமதி வாங்கினார். ரஷ்யா வழியாக இத்தாலிக்கு செல்ல வேண்டும் என்பது நேதாஜியின் திட்டம். ஆனால் ஜெர்மனிக்கு வருமாறு ஹிட்லரிடமிருந்து அழைப்பு வந்தது. நேதாஜி மாஸ்கோ சென்று பின்னர் அங்கிருந்து ஜெர்மன் தலைநகரம் பெர்லினுக்குப் போய்ச்சேர்ந்தார். அவர் ஜெர்மனிக்கு வந்த செய்தி பத்திரிக்கையில் வெளியானது. இந்தச் செய்தியை பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிந்துகொண்டது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்க்கு சிறப்பான வரவேற்பு கிடைத்து. இந்தியாவின் விடுதலைக்கு சுபாஷ் சந்திரபோஷ் ஹிட்லரின் ஆதரவைக் கேட்டார். ஹிட்லர் ஆதரவு தருவதாக உறுதி அளித்தார். 1941இல் சுதந்திர இந்திய மையம் என்ற அமைப்பை நேதாஜி தொடங்கினார். ஆசாத் ஹிந்த் என்ற ரேடியோவையும் உருவாக்கி அங்கிருந்த இந்திய மக்களிடம் சுதந்திர உணர்ச்சியை விதைத்தார். நாட்டுக்கு எனத் தனிக்கொடியை உருவாக்கி ஜனகனமன பாடலை தேசிய கீதமாக அறிவித்தார். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் உதவி கிடைத்தது.

1943ஆம் அக்டோபர் 21இல் சிங்கப்பூரில் நடந்த மாநாட்டில் போஸ், சுதந்திர அரசு பிரகடனத்தை வெளியிட்டார். ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சீனா போன்ற ஒன்பது நாடுகளின் ஆதரவு கிடைத்தது.



ஆனால் போரின்போது சில நாடுகள் மறைமுகமாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவின. ஆனாலும் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் படைத்திறமையால் வெற்றியை நோக்கிச் சென்றது.

ஜான்சி ராணியின் படைகளும், பாலகர் படைகளும் இரண்டாம் உலகப்போரில் பங்கு கொண்டன. இராணுவத்தின் படைகளுக்கு அதிகமாகத் தளவாடங்கள் இல்லை. இந்தக் காலத்தில் சிவகாமி அம்மாள், பரமானந்தம் ஆகிய இருவரும் துப்பாக்கிக் குண்டுகள் வெடிகுண்டுகளால் காயம் அடைந்தவர்களைத் தங்களின் சர்கார் முகாமிற்குக் கொண்டு வந்து சேர்த்து சில நல உதவிகளைச் செய்தனர். இவர்கள் இந்தியர்கள் காயமடைந்ததைக் கண்டு வருந்தித் துன்பம் அடைந்தனர். நாட்டின் சுதந்திரத்திற்காக பல நன்மைகளைச் செய்து சுதந்திரப் போராட்ட தியாகமும் செய்தனர்.

இந்திய தேசிய இராணுவத்தின் சிவகாமி அம்மாள் வீரச்செயல்களும், சுதந்திர விழிப்புணர்ச்சி, சுதந்திரத்திற்காக பலவீரச் செயல்களின் தியாகமும், சர்காரின் நல உதவிகளும் இந்திய சுதந்திரத்திற்கு முக்கியமானது. எனவே சிவகாமி அம்மாளின் சிறு வயதில் ஒரு வீரப் பெண்மணியாகச் செயல்பட்டார்.

## இந்திய தேசிய இராணுவத்தில் சிவகாமியம்மாள்

இந்திய தேசிய இராணுவத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிறுவர்களுக்கு ஒரு தனிப்படைப் பிரிவை அமைத்தார். இந்தப் படையானது சிறுவர்களுக்கு தேசிய ஆர்வத்தைத் தூண்டுவதற்காக உருவாக்கப்பட்டது. இதற்குப் பாலகர் படை (பாலச்சேனா) என்ற பெயர் வைக்கப்பட்டது. 12 வயது முதல் 18 வயது வரையுள்ள சிறுவரும், சிறுமிகளும் இந்தப படையில் சேர்ந்திருந்தனர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த ஆஸாத் ஹிந்த் சர்காரின் சுகாதார சமூக நல இலாகாவின் தலைவராக பழனிவேல் பிள்ளை என்பவர் அப்போது இருந்தார். அவரது உதவியால் சிவகாமி அம்மையார், பரமானந்தம் ஆகிய இருவரும் சர்காரில் இணைந்தனர்.


பிரதான இந்திய தேசிய இராணுவத்தின் பின்னணியில் இந்தப் பாலகர் படை பல வீரச் செயல்களைப் புரிந்தது. பாலகர் சேனையைச் சேர்ந்தவர்களுக்கு கொரில்லாச் சண்டையில் விசேசப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்திய தேசிய இராணுவத்தில் பாலகர் சேனை மிகவும் திறமையாக அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் நேதாஜியின் தலைமையில் நடத்திய சுதந்திரப்போர் இந்திய சுதந்திரத்தில் நிரந்தர இடம்பெற்றுவிட்டது. இந்த பாலகர் படை சுதந்திரத்தின் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பல வீரச் செயல்களைச் செய்து வந்துள்ளனர். சிவகாமி அம்மாள் பாலகர் படையில் சிறப்பாகச் செயல்பட்டார். சிவகாமி அம்மாள் தனது திறமையை நாடகத்தின்

மூலம் வெளிப்படுத்தி சுதந்திர உணர்வைத் தூண்டும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்.

நேதாஜியின் முன்பாக தனது திறமையை நாடகமாக இவர் நடித்துள்ளார். இதன் மூலம் இவர் நேதாஜியின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார். பாலகர் படையில் சிவகாமி அம்மாள் அவரது அண்ணன் பரமானந்தம் ஆகிய இருவரும் சிறந்த பணிகளையும், பலர் நலனுக்காகவும தன்நாட்டின் சுதந்திரத்திற்காகவும் செய்துவந்துள்ளனர். இவர் போர்க்காலங்களில் பாலகர் படையில் பல இளைஞர்களை இணைத்து போர் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று வெடிகுண்டால் பாதிக்கப்பட்டவர்களைத் தனது முகாமிற்குக் கொண்டுவந்து சேர்க்கும் பணியைச் செய்தார் இந்திய தேசிய இராணுவத்தில் நேதாஜியின் உணர்ச்சிமிக்க குரல்களைக் கேட்டு இந்திய இளைஞர்கள் ஆர்வமுடன் சேர்ந்து திறமையாகச் செயல்பட்டனர். இவர்கள் நடத்திய பிரச்சார நாடகத்தின் மூலம் முகாமிற்கு பல்லாயிரக்கணக்கான டாலர்களும் நிவாரண நிதியாக கிடைத்தது. சிவகாமி அம்மாள் திறமையால் பலரின் உயிர் காக்கும் கருவியாகவும், தனது வீரச்செயல்களின் மூலம் நாட்டு மக்களுக்கு சுதந்திரப் போராட்ட உணர்வை ஊட்டியவராகவும் இவர் திகழ்ந்தார்.

'வீர வனிதா' நாடகத்தில் சிறப்பான முறையில் பாடல்களைப் பாடி நடித்து தனது திறமையை இவர் வெளிப்படுத்தியுள்ளார். சிவகாமி அம்மாள் பரமானந்தம் ஆகிய இருவரும் சிங்கப்பூர், கோலாலம்பூர், பர்மா ஆகிய இடங்களில் 'வீரவனிதா' என்ற தலைப்பில் மக்கள் அடிமை நிலை மாறி பிரிட்டிஷ் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்ற கருத்துக்களை நாடகமாக நடத்தினர். நேதாஜியின் ஆதரவு பெற்று பல இடங்களில் நடித்ததால் அதிகமான பொருள், டாலர் ஆகியவை கிடைத்தன. இவை அனைத்தையும் சர்கார் முகாமின் நலனுக்குப் பயன்படுத்தி கொண்டனர்.

இவர் செய்த நாடகம் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இருந்தது. இந்த நாடகம் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியைக் கண்டு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மகிழ்ச்சி அடைந்தார். இவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார். சிவகாமி அம்மாளை அழைத்து ஜான்சிராணி படையின் அணிவகுப்பு நடத்துமாறு சுபாஷ் சந்திரபோஸ் உத்தரவு கொடுத்தார். அதற்குப் பணிந்து சிவகாமி அம்மையார் இராணுவத்தில் அணிவகுத்துச் சென்றார். ஆணைகள் பிறப்பித்தல், உடற்பயிற்சி செய்து காட்டல், பல வித்தியாசமான செயல்களைச் செய்து காட்டல் ஆகியவற்றை இவர் செய்தார். இவைகளில் மனதைப் பறிகொடுத்த நேதாஜி சிவகாமியை பர்மாவிற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் நல முகாமில் உள்ள நண்பர்களை விட்டுசெல்ல சிவகாமி விரும்பவில்லை. சிங்கப்பூரில் நடந்த இந்திய தேசிய ராணுவ அணிவகுப்பில் சிவகாமியின் திறமையை ஜான்சி ராணி படையினருக்குக் காட்டி நேதாஜி மகிழ்ந்தார். நாடகத்தைப் பார்த்த இளையோர் மறுநாள் காலையில் இந்திய ராணுவத்திலும், ஜான்சிராணிப் படையிலும் தங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு வந்து நிற்பார்கள். இந்த இருவரும் நாடகத்தின் மூலம் செய்த சேவையால் மூன்றரையாண்டு காலத்தில் இந்திய அகதிகள் இருபதினாராயிரம் பேர் உதவி பெற்றார்கள். நேதாஜி பர்மாவிற்கு அழைத்து செல்ல விரும்பியதை மறுத்துவிட்டோம் என்பது சிவகாமியின் வருத்தமாகும். ஆனாலும் இந்திய தேசிய இராணுவத்தில் பல திறமையான செயல்களைச் செய்து இந்திய சுதந்திரத்திற்காக இவர் தியாகம் செய்துள்ளார்.



சிவகாமிஅம்மாள் பாலகர் படையின் திறமையில் சுதந்திரம் பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டதால் இரவு நேரங்களில் சிங்கப்பூர், கோலாம்பூர் அதைச்

சுற்றியுள்ள பல பகுதிகளில் நாடகங்களை நடத்தி இந்திய மக்களிடமும், மலாயா மக்களிடமும் பிழைக்கச் சென்ற அகதிகளிடமும் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பாடல்கள் பாடி நாடகம் மூலம் மக்களை விழிப்பு கொள்ளச் செய்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர் ஒழிந்து இந்திய மண்ணில் முழுசுதந்திரம் பெறவேண்டும் என்ற முழக்கம் செய்துக்கொண்டிருந்தார் நேதாஜி சுபாஷ்சந்திர போஸ், இந்திய தேசியக் கொடியை டெல்லியின் கோட்டையின் மீது பறக்கவிட வேண்டும் என்று சுதந்திரப்படையின் வீரத்துடன் ஜெய்ஹிந்த்! வந்தேமாதரம்! என்ற முழக்கம் மேற்கொண்டார். நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் அவர்களின் பாலகர் படையில் சிவகாமி அம்மாள் தனி சிறப்பான திறமைமிக்க சுதந்திர போராட்ட வீரப் பெண்மணி ஆவார்.

### சிவகாமி அம்மையார் தாயகம் திரும்புதல்

1942ஆம் ஆண்டு தொடங்கி 1945 வரை இவர்கள் பாலகர் படையில் சிறந்து விளங்கினர். யுத்தத்தின் முடிவில் சிவகாமி அம்மையார் தாயகம் திரும்பும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த மூன்றரையாண்டு காலம் சிவகாமி 11 முதல் 14 வயதுள்ள பெண்ணாக இருந்தாலும் தேசிய எண்ணங்கொண்ட வீராங்கனை போல் நடந்து வந்தார். யுத்தத்தின் முடிவில் இந்திய பிரிட்டிஷ் பட்டாளமானது சமூக நல விடுதியைக் கைப்பற்றிய பின்னர், பிரிட்டிஷ் பட்டாளமானது சிவகாமியை அழைத்துச் சிப்பாய்க்கு முன்னாள் நடனமாடும்படியாக உத்தரவிட்ட பொழுது, இந்தக் கூலிப்படைகளுக்கு முன்னாள் நடனமாடுவதற்கு நான் பயிற்றுவிக்கப்படவில்லை என்று கூறி மறுத்துவிட்டார். உடனே முகாமை விட்டு வெளியேற வேண்டுமென்று பிரிட்டிஷ் அதிகாரி கூறியபோது பெட்டிப் படுக்கையுடன் தனது இல்லம் வந்து சேர்ந்ததாக அவர் தெரிவிக்கிறார். திருமதி. சிவகாமி அம்மையார் தாயகம் திரும்பி வரும்போது அவரை வரவேற்க எவரும் வரவில்லை.

### திருமணம்

சிவகாமி அம்மாவுக்கும் குப்புசாமிக்கும் 1950ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. குப்பசாமியின் குடும்பமும் சிவகாமி அம்மாவின் குடும்பமும் உறவினர்கள். சிவகாமியின் கணவர் குப்புசாமி தருமபுரியில் உள்ள நெசவாளர் காலனியில் ஒரு அமைப்பில் அலுவலக உதவியாளர் பணியை செய்து கொண்டிருந்தார். 1952 ஆம் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் குப்புசாமி இறந்துவிட்டார்.

### சுதந்திரத் தியாகிகளைப் பாராட்டுதல்

இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியதற்காக சிவகாமி அம்மையாரை வாழ்த்தி தமிழ்நாடு அரசு செம்புப் பட்டயம் வழங்கியது. இந்திய நாட்டு விடுதலை 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடப்பட்டபோது, விடுதலைப் போரில் ஈடுப்பட்ட தியாகச் செம்மல்களுக்கு 1973 ஆம் ஆண்டு இந்த செம்புப் பட்டயம் வழங்கப்பட்டது.

வெள்ளையர்க்கு எதிராகப் போராடிய தியாகிகளுக்கு பொன்விழா ஆண்டு நினைவாக 9.8.1993 இல் தமிழக முதல்வர் பரிசும் கேடயமும் வழங்கினார். இந்திய சுதந்திரவிழாவின் 75ஆம் ஆண்டை முன்னிட்டு அரசாங்கத்தின் மூலம் சிவகாமியின் வீரச்செயல்களைப் பாராட்டி தியாகி சிவகாமி அம்மையார் கோப்பையும் வழங்கப்பட்டன.

### இந்திய தேசிய இராணுவத்தின் பழனிவேல்பிள்ளை

திருமதி சிவகாமியம்மாள் அவர்கள் குறித்து திரு பழனிவேல்பிள்ளை கூறியதாவது,

பழனிவேல் பிள்ளை என்பவர் இந்திய தேசிய இராணுவத்தின் ஆஸாத் ஹிந்த் சர்க்காரில் மலாயா சிலாங்கூர் மாகாணத்தில் சுகாதார சமூக நல இலாகாவின் தலைவராகப் (Member in chare) பணியாற்றியவர், அதோடு பிரச்சார இலாகாத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இளைஞர்களின் மனதில் இந்திய தேசிய இராணுவத்தின் சுதந்திர உணர்வுகளை பழனிவேல் பிள்ளை ஏற்படுத்தினார். இவர் சர்காரின் நலனுக்காகவும், பிரச்சாரத் தலைவராகவும் இந்திய தேசிய இராணுவத்தில் கடுமையாகப் போராடியவர். இந்த முகாமில் பாலகர் படை மீது வீரப் பயிற்சிகளைக் கொடுத்தார். பழனிவேல் பிள்ளையின் பிரச்சாரத்தின் மூலம் சுதந்திர



உணர்வு இந்திய மக்களிடம் உருவாகியது. இந்தப் படையின் மேஜர் ஜெனரலாக அழகப்பன் செயல்பட்டார். இவர் தமிழ் மக்களின் மொழிபெயர்ப்பு ஆசிரியராகவும் திகழ்ந்தார். இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அறிந்திருந்தார். ஆனால் அவருக்குத் தமிழ்மொழி தெரியாது. அங்கு மொழிபெயர்ப்பாளராக மேஜர் ஜெனரல் அழகப்பன் என்பவர் செயல்பட்டார். எம்.கே.இராமச்சந்திரன் நாயுடு என்பவர் இந்திய சுதந்திரச் சங்கத்தலைவர் ஆவார். இராமசந்திர நாயுடு கோலாம்பூரில் பெரும் தியாகம் செய்தார். படையின் தலைவராக நேதாஜி செயல்பட்டார் கேப்டன் ஏ. கேம்ப் என்பவர் வழி நடத்திச் சென்றார்.

எஸ்.ஏ. அய்யர் என்பவர் ஆஸாத் ஹிந்த் நிவாரண விடுதியின் மேற்பார்வையாளராகச் செயல்பட்டார். இந்த சுந்திர ஆஸாத் நிவாரண விடுதி கோலாம்பூரில் அமைந்துள்ளது. டாக்டர் எம்.கே.லட்சுமையா, கிழக்காசிய இந்திய சுதந்திரச் சங்கத்தின் தலைவர் ஆவார். இவ்வாறு இந்தி தேசிய இராணுவத்தில் பல தியாகிகள் இந்திய தேசிய இராணுவத்தைத் தலைமை தாங்கி நடத்தினர். இதில் பழனிவேல் பிள்ளை என்பவர் இளைஞர் படையின் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகவும் அங்கு இந்த சிவகாமி, பரமானந்தம் மற்ற இளைஞர்கள் மீது இருந்த அன்பினாலும் தனது படையையும் சமூக நல விடுதியையும் வலிமைப்படுத்தினார். இதனால் இளைஞர் படைகளில் இருக்கும் பெண்கள் பழனிவேல் பிள்ளையை தந்தையைப் போல பாவித்தனர். அதில் சிவகாமி அம்மாள் அவர் மீது அதிகம் பற்றுக்கொண்டவர். பழனிவேல் பிள்ளை ஆஸாத் ஹிந்த் சர்காரில் நேதாஜியின் பாராட்டுதலைப் பெற்றார். சிவகாமி அம்மாள் அங்கு தியாகப் பணிகள் மேற்கொண்டதற்கான ஆதாரமாக புகைப்படங்கள் உள்ளன. அவர்களுக்கு வழஙகப்பட்ட நற்சான்றிதழ் துண்டுபிரசுரம், ஆஸாத் ஹிந்த் படையின் சிப்பாய்ச் சின்னம் மூவர்ணக்கொடிச் சின்னம் எனப் பல வகையான புகைப்படங்கள் இருக்கின்றன.

**இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு**

இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் கிழக்கு ஆசியாவில் இருந்த தமிழர்களின் பங்கு மகத்தானதாகும். மலேயா, பர்மா, சயாம், சுமத்ரா போன்ற நாடுகளுக்குப் பிழைக்கச் சென்ற தமிழர்கள் வதைக்கப்பட்டனர். இந்தியா விடுதலை பெற்றால் ஆசியாவின் மற்ற நாடுகள் உடனே விடுதலை பெறும் என்ற நேதாஜியின் அறைகூவல் அவர்களைச் சிந்திக்கவும் செயல்படவும் வைத்தது.

எலின் வில்கின்சன் என்ற ஆங்கிலேயே அம்மையார் காந்தியடிகள் வெள்ளையரின் முதல் விரோதி. ஆனால், 1943க்குப் பிறகு தான் காந்தியடிகள் வெள்ளையர்களைப் பற்றி முழுமையாக உணர்ந்து கொண்டார். இந்திய விடுதலைப் போராட்ட ஒளிவிளக்கு மங்காமல் இருக்க நேதாஜி மலேசியாவிலும் பர்மாவிலும் இந்திய தேசிய இராணுவத்தைக் கொண்டு செயல்பட்டார். அங்கிருந்த தமிழினம் அவருக்கு உதவியாக முழுமையாகச் செயல்பட்டது. இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர்கள் பெரும்பங்கு கொண்டனர். மக்களின் முழுமையான ஈடுபாடு என்ற நேதாஜியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தினரும் முழுமையாகப் பங்கேற்றனர். இது வியப்பிற்குரியதாகும்.

இந்திய தேசிய இராணுவத்தில் மொத்தம் நான்கு படைப் பிரிவுகள் இருந்தன. இவற்றில் பாதி வீரர்கள் தமிழர்கள். நேரு பிரிகேடில் 600 தமிழர்கள் இருந்தனர். இவர்களில் பலர் அரக்கான் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தனார்.

ஜான்சி ராணி படையின் தலைவராக கேப்டன் லட்சுமி இருந்தார். இவர் சென்னையைச் சேர்ந்தவர். இவரைப் போன்ற பல பெண்கள் இந்திய விடுதலைக்காகப் போராடினார்கள். இளம் பெண்கள் பல தங்கள் நீண்ட கூந்தலைக் கத்தரித்துவிட்டு ராணுவப் பயிற்சிக்குப் பின் பர்மா போர்முனைக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் செவி லியர்களாகப் பணிபுரிய மறுத்து துப்பாக்கி ஏந்தி ஆங்கிலேயருடன் போராட விரும்பினார்கள். தமிழர்கள் மீது நேதாஜி மிகுந்த பாசம் கொண்டிருந்தார். படைப் பயிற்சியின் போது ஒரு தமிழர் இறந்த பொழுது மிகவும் வருத்தப்பட்டு இந்த மாதிரி நிகழ்ச்சி நடக்கக் கூடாது என ஆணை யிட்டார். ஒருமுறை 600க்கும் மேற்பட்ட தென்னிந்திய இந்திய தேசிய இராணுவ வீரர்களைக் கைதாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இரண்டாம் உலகப்போர் 1945 மே மாதம் முடிந்தது. ஆனால் 1945 மார்ச் மாதத்தில் நான்கு தமிழர்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்திய விடுதலை பெற்ற பிறகு இவ்வீரர்களைப் பற்றி நாம் அறியாதது விந்தையிலும்



விந்தையே. தலைசிறந்த படைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் 46 போர் வீரர்களைத் தேர்ந்தெடுத்து டோக்கியோவிற்கு நேதாஜி அனுப்பினார். அவர்கள் அங்கு தலைசிறந்த இராணுவப் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றனர். அவ்வாறு சென்றவர்களில் 16 பேர் தமிழர்கள்! அதில் இலங்கைத் தமிழர் ஒருவரும் இருந்தார். இலங்கை விடுதலை பெறுவதற்கு இலங்கைத் துறை ஒன்றை நேதாஜி உருவாக்கினார். இந்திய தேசிய இராணுவத்தில் சேரத் தமிழர்கள் பெரும் ஆர்வம் கொண்டனர். படைசேர்க்கும் இடங்களில் ஒரே நாளில் 2500 பேர் சேர்ந்தனர். உடல் தகுதி வலிமை இல்லாதவர்கள் கூட தங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு சத்தியாக்கிரகம் செய்தனர். திருமணம் ஆன அன்றே கூட இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தவர்கள் உண்டு.

**பொருள் உதவி**

இந்திய தேசிய இராணுவத்திற்கு இந்திய மக்கள் அதிகமான பண உதவிகளை செய்தனர். இந்திய தேசிய ராணுவத்தின் முகாமில் இருக்கும் படைகளுக்கு இது பயன்பட்டது. சில சமயங்களில் நேதாஜிக்கு போடப்பட்ட மாலைகள் 30,000 ரூபாய் வரை ஏலத்தில் விலை போயின. ஒருவர் தன்னிடமிருந்த 200 மாடுகளை அளித்தார்.

கிழிந்த உடையுடன் ஏழ்மையின் உச்சத்தில் இருந்த ஒரு மூதாட்டி தன்னிடம் இருந்த மூன்று டாலர் பணத்தைத் தந்த போது நேதாஜி அதை வாங்கத் தயங்கினார். பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு மூதாட்டி நேதாஜியை வற்புறுத்தினார். நேதாஜியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. இவ்வாறாக தனது சுதந்திரத்திற்காக நேதாஜிசுபாஷ் சந்திரபோஸ் தனது வலிமையைப் பெருக்கினார். இந்திய தேசிய இராணுவத்திற்கு மிக அதிகமாகப் பண உதவி செய்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களாவர். செட்டியார்கள் சிலர் டோக்கியோவிற்கு சென்று இராணுவப் பயிற்சியும் பெற்றனர். பர்மாவில் இவர்கள் 15 கோடி ரூபாய் நேதாஜிக்கு உதவினர். 5.9.1943 அன்று செட்டியார் மூவர் 3 இலட்சம் ரூபாய் பணஉதவி செய்தனர்.

நேதாஜியைச் சுற்றித் தமிழர்கள் பலர் எப்போதும் இருந்தனர். அவருடைய சமையல்காரார் பெயர் காளி. அவர் தயாரிக்கும் ரசத்தை ‘சூப்’ என்று சொல்லிச் சுபாஷ் சுவைத்துக் குடித்து மகிழ்வார். மலேயாவில் நேதாஜிக்கு ஆதரவாக ‘யுவபாரதம்’ சுதந்திர இந்துஸ்தான் போன்ற இதழ்கள் வெளிவந்தன. இவை மக்களுக்கு விடுதலை உணர்வுகளை ஏற்படுத்தின. எல்லா விடுதலைத் தியாகிகளுக்கும் ஏற்படும் நிலைதான் இவர்களுக்கும் ஏற்பட்டது. வறுமையில் துன்பப்பட்டனர், மாண்டனர்.

**முடிவுரை:**

சிவகாமி அம்மையார் தனது அண்ணன் ஆதரவு இருக்கும் வரையில் மகிழ்ச்சியாக இருந்தார். 24.12.2004 ஆம் ஆண்டு பரமானந்தம் இறந்துவிட்டார். இன்றைக்கு இவர் தனது இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் ஓய்வூதியத்தைப் பயன்படுத்திக் கொண்டு தானே உணவைச் சமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.

தருமபுரி அரசு கலைக்கல்லூரி வரலாற்றுத்துறை சார்பாக சிவகாமி அம்மையாரின் விடுதலைப் போராட்ட தியாகத்தைப் பாராட்டி மாணவர் மாணவிகள் மூலம் இவருக்கு 25000 ரூபாய் பொன்முடிப்பு பேராசிரியர் சி.சந்திரசேகர் மூலம் வழங்கப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தியாகத்தைப் போற்றுவதே அவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான மரியாதையாகும்.

ஜெய்ஹிந்த்!

---

– **ச.இளந்திரையன்**, வரலாற்று மாணவர், அரசு கலைக்கல்லூரி, தருமபுரி.

# மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள்

– பி.கே.மிஸ்ரா

கடல் மீன் பிடித்தொழில், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடித்தொழில், உவர்நீர் மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு துணைப்பிரிவுகள் அடங்கிய பரந்துபட்ட தொழில் துறையாக மீன்வளத்துறை விளங்குகின்றது. குளிர் நீரில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்கள் ஆகியவையும் இந்தத் தொழில்துறையில் உள்ளடங்கும். 2021ஆம் ஆண்டில் நாட்டில் கூட்டுறவு அமைச்சகம் புதிதாகத் தொடங்கப்பட்டதினால் மீன்வளக் கூட்டுறவுச் சங்க இயக்கம் உத்வேகமாக வளர்ந்து வருகிறது. அதிலிருந்து இந்தத் துறையானது முன்னுரிமை கவனத்தையும் அக்கறையையும் பெற்று வருகிறது. தேவையான கொள்கை மற்றும் போதுமான நிதி ஆதார உதவியுடன் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

இந்தியாவில் மீன்வளத்துறை என்பது வளர்ந்துவரும் ஒரு தொழில் பிரிவாகும். எட்டாயிரத்திற்கும் அதிகமான கிலோமீட்டர் கொண்ட கடலோரப்பகுதியும் 2 மில்லியன் சதுர கிலோமீட்டர் அளவில் பிரத்யேகப் பொருளாதார மண்டலமும், நாடு முழுவதும் நன்னீர் நிலைகள் பரந்துபட்ட அளவில் இருப்பதும் இந்தியாவில் மீன்வளத்துறைக்கு விரிவான பொருளாதார வாய்ப்பை வழங்குகின்றன. உலக அளவில் எடுத்துக் கொண்டால் மீன் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது மிகப்பெரிய நாடாக விளங்குகிறது. உலக மீன் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 7.93 சதவிகிதம் ஆகும். அதே போன்று, உலக அளவில் மீன் வளர்ப்பு வாயிலாக மீன் உற்பத்தி செய்யும் நாடுகளில் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா விளங்குகிறது. மீன்வளத் துறையானது இந்தியப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் ஒரு சதவிகிதமாக உள்ளது. இந்தத் துறையானது மிக வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இந்த வளர்ச்சியானது தேசிய வருவாய்க்கு உதவுவதோடு இந்திய ஏற்றுமதி, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கலில் மிக முக்கியமான பங்கினையும் ஆற்றுகின்றது. 2.8 கோடிக்கும் அதிகமான மீனவர்கள் மற்றும் மீன் பண்ணை விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் இந்தத் தொழில் பிரிவு ஆதாரமாக உள்ளது. உவர்நீர் மற்றும் குளிர்நீர் உள்ளிட்ட கடல் மற்றும் உள்நாட்டு நீர்நிலை என இரண்டிலும் நீர் ஆதார வளமையானது இந்தியாவில் சிறப்பாக உள்ளது. மேலும் இந்தத் தொழிலுக்கான தொழில்திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. மீன்வளத்துறை மூலம் நாட்டிற்கு ரூ.50ஆயிரம் கோடிக்கும் அதிகமான அளவில் ஏற்றுமதி வருவாய் கிடைக்கிறது.

**மீன்வள அபிவிருத்தி: இந்திய அரசின் ஊக்குவிப்பு**

மீன்வளத்துறையின் மூலமாக இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகமானது ரூ.20,050 கோடி பட்ஜெட் ஒதுக்கீட்டில் பிரதம மந்திரியின் மீன் வளர்ப்புத் தொழில்முனைவோர் திட்டம் (Pradhan Mantri Matsya Sampada Yojana - PMMSY) தொடங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் இந்திய அரசானது 2014ஆம் ஆண்டில் நீலப்புரட்சித் திட்டத்தையும் தொடங்கியது. இந்தத்திட்டம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதோடு மீன்வளத்துறையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மீன்வளத்துறையில் சுயசார்பு பாரதம் என்பதை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வகையில் பயனாளியை மையமாகக் கொண்ட தொழில்முனைதலுக்கு கூடுதல் கவனம் தருகின்ற பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுறவு அமைச்சகம் தொடங்கப்பட்டப் பிறகு 2021ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கமானது உத்வேகம் பெற்று இயங்கி வருகிறது. இந்த நடவடிக்கையானது கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம்

| வ. எண் | மாநிலம் ஃ யூனியன் பிரதேசம் | சங்கங்களின் எண்ணிக்கை (நிலை) | | | மொத்த எண்ணிக்கையில் தொடக்கநிலை சங்கங்களின் % | உறுப்பினர்களின் எண்ணிக்கை | ஒரு சங்கத்திற்கு எத்தனை வேளாண் உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாநிலம் | மாவட்டம் | தொடக்க நிலை | | | |
| 1 | ஆந்திரப் பிரதேசம் | 1 | 13 | 2,810 | 10.26 | 2,86,410 | 102 |
| 2 | அருணாச்சலப் பிரதேசம் | - | - | 11 | 0.04 | 230 | 21 |
| 3 | அசாம் | 1 | 2 | 520 | 1.90 | 90,000 | 173 |
| 4 | பீகார் | 1 | 5 | 528 | 1.93 | 4,10,007 | 777 |
| 5 | சண்டிகர் | 1 | 5 | 1671 | 6.10 | 55,685 | 33 |
| 6 | கோவா | - | - | 26 | 0.09 | 1,503 | 58 |
| 7 | குஜராத் | 1 | | 701 | 2.56 | 94,893 | 135 |
| 8 | ஹரியானா | - | - | 124 | 0.45 | 1,276 | 10 |
| 9 | இமாச்சலப் பிரதேசம் | - | - | 62 | 0.23 | 9,742 | 157 |
| 10 | ஜார்கண்ட் | 1 | | 520 | 1.90 | 32,635 | 63 |
| 11 | கர்நாடகம் | 1 | - | 714 | 2.61 | 4,82,115 | 675 |
| 12 | கேரளா | 1 | - | 985 | 3.60 | 4,60,486 | 467 |
| 13 | மத்தியப் பிரதேசம் | 1 | - | 2,734 | 9.98 | 96,817 | 35 |
| 14 | மஹாராஷ்டிரா | 1 | 36 | 3,775 | 13.78 | 3,32,636 | 88 |
| 15 | மணிப்பூர் | 1 | 3 | 800 | 2.92 | 14,258 | 18 |
| 16 | மேகாலயா | 1 | - | 128 | 0.47 | 611 | 5 |
| 17 | மிசோராம் | 1 | 1 | 47 | 0.17 | 1,656 | 35 |
| 18 | நாகாலாந்து | 1 | - | 370 | 1.35 | 9,234 | 25 |
| 19 | ஒடிசா | 1 | - | 775 | 2.83 | 1,54,318 | 199 |
| 20 | பஞ்சாப் | - | 1 | 9 | 0.03 | 95 | 11 |
| 21 | ராஜஸ்தான் | 1 | 1 | 137 | 0.50 | 4,130 | 30 |
| 22 | சிக்கிம் | - | - | 8 | 0.03 | 230 | 29 |
| 23 | தமிழ்நாடு | 1 | 12 | 1,475 | 5.38 | 7,61,521 | 516 |
| 24 | தெலுங்கானா | 1 | - | 5,200 | 18.98 | 3,64,357 | 70 |
| 25 | திரிபுரா | 1 | - | 308 | 1.12 | 22,967 | 75 |
| 26 | உத்திரப் பிரதேசம் | 1 | 23 | 1,125 | 4.11 | 54,521 | 48 |
| 27 | உத்திராகண்ட் | 1 | 1 | 167 | 0.61 | 634 | 4 |
| 28 | மேற்கு வங்கம் | 1 | 20 | 1,433 | 5.23 | 1,31,578 | 92 |
| 29 | அந்தமான் – நிகோபார் தீவுகள் | - | 1 | 129 | 0.47 | 4,149 | 32 |
| 30 | டாமன் – டையூ | - | - | 19 | 0.07 | 3,176 | 167 |
| 31 | இலட்சத்தீவு | - | - | 6 | 0.02 | 2,910 | 485 |
| 32 | ஜம்மு – காஷ்மீர் | - | 1 | 6 | 0.02 | 162 | 27 |
| 33 | புதுச்சேரி | 1 | 1 | 67 | 0.24 | 72,162 | 1077 |
| 34 | லடாக் | - | - | 1 | 0.00 | 21 | 21 |
| மொத்தம் | | 24 | 126 | 27,391 | 100 | 39,57,104 | 144 |

அளித்தல் மற்றும் அவற்றை வலுப்படுத்துதல் என்ற இந்திய அரசின் முக்கிய கொள்கை முடிவாக உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பவர்களாக உள்ளனர்.

**இந்தியாவில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்கம்**

இந்தியாவில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்கமானது 1913லேயே தொடங்கிவிட்டது. மகாராஷ்டிராவில் முதல் மீனவர்கள் சங்கம் "கர்லா மச்சிமர் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இடைப்பட்ட 110 ஆண்டுகளில் இந்திய மீன்வளக் கூட்டுறவுச் சங்க இயக்கமானது பலவகையான அடுக்குநிலை அமைப்புகளுடன் அனைத்து மாநிலங்களிலும் பரவியுள்ளது. எனினும் அதன் முழுமையான ஆற்றல் இன்னமும் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை.

இந்தியாவில் உள்ள 34 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் தற்போது 24 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் தலா ஒரு மாநில அளவிலான மீன்வளச் சம்மேளனங்கள் உள்ளன. மூன்று மாவட்டங்களில் மட்டுமே ஆறு மண்டல சம்மேளனங்கள் உள்ளன. 126 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான மீன்வளச் சம்மேளனங்கள் செயல்படுகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது 39.57 இலட்சம் மீனவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 27 ஆயிரத்து 391 தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு சங்கத்தின் சராசரி உறுப்பினர் எண்ணிக்கை 144 மீனவர்கள் ஆகும். 500 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள தொடக்கநிலை மீனவர் சங்கங்கள் புதுச்சேரி, தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் பீகாரில் உள்ளன. ஒரு சங்கத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கை 144 என்ற தேசிய சராசரியை விட அதிகமாக உறுப்பினர்கள் உள்ள சங்கங்கள் அசாம், பீகார், கர்நாடகம், கேரளா, இமாச்சலப்பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு, டாமன் – டையூ, இலட்சத்தீவு மற்றும் புதுச்சேரி ஆகிய 10 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ளன.

**மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களில் சம்மேளனத்தின் பங்கு**

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனம் (The National Federation of Fishers Cooperatives Ltd. - FISHCOPFED) என்பது இந்தியாவில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கத்தின் அபிவிருத்திக்கான உச்சநிலை மற்றும் தேசிய அளவிலான கூட்டுறவு அமைப்பாகும். 1980ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இந்தக் கூட்டமைப்பு 1982இல் செயல்படத் தொடங்கியது. நாடு முழுவதும் இந்த சம்மேளனத்தில் 104 நிறுவனங்கள் உறுப்பினராக உள்ளன. இதில் இந்திய அரசின் மீன்வளம். கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் மற்றும் தேசிய கூட்டுறவு சங்க அபிவிருத்திக் கழகம் (National Cooperative Development Corporation - NCDC) ஆகியவையும் உள்ளடங்கும்.

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனமானது நாட்டில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. இது சர்வதேசக் கூட்டுறவு அலையன்சில் ஒரு உறுப்பினராகவும் உள்ளது. மேலும் சர்வதேசக் கூட்டுறவு மீன்வளக் கழகத்தின் (IFCO) உறுப்பினராகவும் அதேபோன்று ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கான கட்டமைப்பில் (The Network for the Development of Agricultural Cooperatives in Asia and the Pacific - NEDAC) உறுப்பினராகவும் உள்ளது.



மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனம் மீன்வளத் துறையில் பல்வேறு மேம்பாடு மற்றும் நல்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் சிரமமின்றி செயல்படுவதற்காக பல்வேறு மாநிலங்களில் மீன் சந்தையில் சில்லறை விற்பனையாளராகவும் ஒட்டுமொத்த விற்பனையாளராகவும் சம்மேளனம் செயல்பட்டு வருகின்றது. இது தடைகள் ஏதும் இல்லாத சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதோடு விற்பனையாளர்களுக்கு அவர்களது உற்பத்திப் பொருளுக்கான சிறந்த விலையையும் பெற்றுத் தருகிறது.

### மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களின் தேசியத் தரவுத்தொகுப்பு

கூட்டுறவு அமைச்சகம் தொடங்கப்பட்டதில் இருந்து மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னுரிமை கவனத்தையும் அக்கறையையும் பெற்று வருகின்றன. நாட்டின் முதலாவது கூட்டுறவு அமைச்சரான திரு அமித்ஷாவின் வழிகாட்டுதலின்படி அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு பஞ் சாயத்திலும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். அதாவது நாட்டில் மொத்தமாக 2 இலட்சம் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியம் (National Fisheries Development Board - NFDB) மற்றும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனம் ஆகிய இரண்டும் தொடர்புடைய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் அதிகாரிகளுடன் இணைந்து விரைந்து பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளன. கடல் மீன்பிடித்தொழில் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடித்தொழில் மற்றும் உவர்நீர் மீன்வளர்ப்பு போன்ற பல்வேறு துணைப் பிரிவுகள் அடங்கிய பரந்துபட்டத் தொழில்துறையாக மீன்வளத்துறை விளங்குகின்றது. குளிர் நீரில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்கள் ஆகியவையும் இதில் உள்ளடங்கும். மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனையில் மீனவப் பெண்கள் முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றனர். மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களிலும் அவர்கள் செயலூக்கத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் பிரத்யேகமான மீனவப் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. மீன்வளத் துறையில் உள்ள இடைவெளிகளை அடையாளம் கண்டறியவும் அந்த இடைவெளிகளை நிரப்புவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கும் தரவுத் தொகுப்பு உதவியாக இருக்கும்.

மீன்வளத் துறையில் தொடக்கநிலைச் சங்கங்கள் கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் சம்பளம் பெறுகின்ற செயலாளரால் தொழில்முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். தொடக்கநிலை வேளாண் கடன் சங்கங்ளைப் (Primary Agricultural Credit Societies - PACS) போன்று இவை தானியங்கி மையமாக ஆக்கப்பட வேண்டும். சரியான அளவில் உறுப்பினர்களுடன் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதற்கு, நீர்நிலைகள் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகளை மேப்பிங் செய்வது இன்றியமையாதது ஆகும். அனைத்து மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களையும் வலைப்பின்னலில் இணைப்பதும் மறுகட்டமைப்பு செய்வதும் கட்டாயமானது ஆகும். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனத்தின் ஆதரவால் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மேல்நிலை அடுக்கு அமைப்புகளோடு ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

### தேசிய சம்மேளனத்தை வலுப்படுத்துதல்

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிட்டெட்டின் தேசிய சம்மேளனம் 1982 2020 காலகட்டத்தில் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை மீனவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கியுள்ளது. திறன் கட்டமைப்புப் பயிற்சிகளோடு, பிரதமரின் மீன்வளத் தொழில்முனைவுத்திட்டம் (Pradhan Mantri Matsya Sampada Yojana - PMMSY) குறித்தும், கூட்டுறவுச் சங்கங்களின் கோட்பாடுகள் குறித்தும் நேரடிப் பயிற்சி அல்லது இணையவழிப் பயிற்சி மூலம் தேசிய சம்மேளனம், அடிமட்ட நிலையில் உள்ள மீனவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசின் மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகமானது இந்தச் சம்மேளனத்தை இறுதி நிலை நடைமுறையாக்கல் முகமை (EIA) என அடையாளம் கண்டு அங்கீகரித்து உள்ளது. இந்த சம்மேளமானது மூலதனப் பங்கு மற்றும் பல்வேறு திட்டங்களின்கீழ் நிதி உதவி ஆகியவற்றால் வலுப்படுத்தப்பட வேண்டும். மீன்வளக் கூட்டுறவுச் சங்கப் பிரிவில் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான பயிற்சி மற்றும் சமூகப்பாதுகாப்புத் திட்டங்களின் நிதி இந்தச் சம்மேளனத்திற்கு வழங்கப்பட வேண்டும். மீன்வளக் கூட்டுறவுச் சங்கப் பிரிவில் மீன்வள உற்பத்தி அமைப்புகளை

(Fish Farmer Producer Organizations - FFPO) உருவாக்குவதில் இந்த சம்மேளனம் முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் மீன்வளக் கூட்டுறவுச் சங்க மேலாண்மை நிறுவனம் அமைப்பதற்கான தேவை உள்ளது. புவனேஸ்வரில் உள்ள 'கௌசல்ய கங்கா' மீன்வளத் தொகுப்பிடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சம்மேளனத்தின் பயிற்சி மையமானது மீன்வளக் கூட்டுறவுச் சங்க மேலாண்மை நிறுவனமாக தரநிலை உயர்த்தப்படலாம். திட்டமிட்ட மற்றும் படிப்படியான அமலாக்கமுறை மூலம் மீன்வளக் கூட்டுறவுத்துறையில் தொழில்திறன் மேம்பாட்டிற்கான மண்டலக் கட்டமைப்புகள் இந்த மேலாண்மை நிறுவனத்துடன் இணைக்கப்படலாம்.

**ஆத்மநிர்பார் பாரத் அபியான் (சுயசார்பு இந்தியா)**

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் பிரதமர் ரூ.20 இலட்சம் கோடி பொருளாதார நிவாரணத் தொகுப்பை அறிவித்துள்ளார். அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில்

## மீன்வள வெற்றிக் கதைகள்

மகாராஷ்டிரா மாநில சம்மேளனம், தமிழ்நாடு மாநில சம்மேளனம், மத்தியப் பிரதேச மாநில சம்மேளனம் மற்றும் ஆந்திரப்பிரதேச மாநில சம்மேளனம் ஆகிய மாநில சம்மேளனங்கள் மீன்வளத்துறையில் மிகச் சிறப்பாகச் செயலாற்றுகின்றன. அது மட்டுமல்லாமல் கேரளாவில் உள்ள மத்ஸ்யஃபெட் (Kerala state Co-opreative Federation for Fisheries Development Ltd - MATSYAFED) குஜராத் மீன்வள மத்திய கூட்டுறவுக் கழகம், மேற்குவங்கத்தின் பென்ஃபிஷ் (BENFISH - The Apex Fishermen's Co-operative Society of West Bengal) போன்றவையும் சிறப்பாகச் செயலாற்றுகின்றன. ஏனைய மாநிலச் சம்மேளனங்களும் கூட சிறப்பாகப் பணியாற்றத் தொடங்கியுள்ளன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி, சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் சிறப்பாகச் செயலாற்றுகின்றன. மாநில அளவிலான சம்மேளனங்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதில் கவனம் செலுத்தியாக வேண்டும். தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டுவதில் மாநிலச் சம்மேளனங்களின் பங்கு என்ன என்பதையும் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

## கேரளா

1984இல் பதிவு செய்யப்பட்ட மாநில அளவிலான மத்சயஃபெட் (MATSYAFED) சம்மேளனத்தில் உறுப்பினர்களாக 668 தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தொடர்ச்சியாக கடந்த மூன்று ஆண்டுகளாக சம்மேளனத்தின் மொத்த ஆண்டு தொழில் தொகை ரூ.300 கோடிக்கும் அதிகமாகவே இருந்து வந்துள்ளது. மேலும் இந்த சம்மேளனம் உள்நாட்டு மீன் விற்பனையிலும், மீன் ஏற்றுமதியிலும் சாதனைகளைப் புரிந்து வருகின்றது. கேரள மாநிலம் முழுவதும் சில்லறை மீன் விற்பனை நிலையங்களின் சங்கிலித்தொடரை இந்தச் சம்மேளனம் பராமரித்து வருகின்றது. மேலும் இது தனக்கென சொந்தமாக மீன்வலை தயாரிக்கும் ஆலையையும், பதப்படுத்துதல் ஆலையையும் நடத்தி வருகின்றது. பயிற்சி மற்றும் சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் இந்தச் சம்மேளமானது தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம் அளிப்பதில் செயலூக்கமான பங்கினையும் ஆற்றி வருகின்றது.

## குஜராத் மீன்வள மத்திய கூட்டுறவுக் கழகம் (GFCCA)

1956ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட குஜராத் மீன்வள மத்திய கூட்டுறவு கழகமானது (Gujarat Fisheries Central Co-operative Association Limited - GFCCA) மாநில சம்மேளனங்களிலேயே மிகப் பழமையானது ஆகும். இதில் 308 தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினராக உள்ளன. இந்தச் சம்மேளனம் 2021–22ஆம் ஆண்டில் அதிகபட்சமாக ஆண்டுத் தொழில்தொகை ரூ.544.23 கோடியை கையாண்டுள்ளது. தில்லியில் வெற்றிகரமாகச் செயல்படக்கூடிய மீன் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்துவதோடு இந்தச் சம்மேளமானது இயந்திர மீன்பிடிப் படகுகளுக்கான எரிபொருள் வழங்குவதற்காக பல்வேறு இடங்களில் டீசல் நிலையங்களையும் நடத்தி வருகின்றது. மாநிலத்தின் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களை இந்தச் சம்மேளனம் வலுப்படுத்தி வருகின்றது.

ஆதாரம்: ஃபிஷ்கோப்ஃபெட் (FISHCOPFED)



குறிப்பிட்ட முதலீடுகள், மீன்வளத்துறையில் கூடுதலாக 55 இலட்சம் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

**முடிவுரை**

இந்தியாவில் தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 4 மில்லியன் மக்கள் பொருளாதார ரீதியாகப் பலன் அடைந்து வருகின்றனர். மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களானது நமது சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் சமூகப்பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கமுடியும். பயனாளிகள் இருக்கும் இடத்திலேயே சேவைகளை வழங்குவதற்கும், மக்களுக்கு ஊட்டச்சத்து உணவை வழங்குவதில் மிக முக்கியமான பங்கினை ஆற்றுவதற்கும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை தங்களுக்கு ஏற்பப் பயன்படுத்தவேண்டிய அவசரத்தேவை உள்ளது. மாறிவரும் பொருளாதாரச் சூழலில் ஒவ்வொரு நிலையிலும் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நீடித்து நிலையாக செயல்படுவதற்கான விநியோகம் மற்றும் மதிப்புக்கூட்டல் சங்கிலித்தொடரை உருவாக்கி நிர்வகிக்கவும் இந்தச் சங்கங்களுக்கு நிதிஉதவி அளிக்கப்பட வேண்டும். போதுமான கொள்கை மற்றும் நிதி உதவி மூலம் மீன்வளக் கூட்டுறவுச் சங்கப்பிரிவை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றது.



கூட்டுறவு அமைச்சகம், மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆகிய இரண்டு அமைச்சகங்களின் தேசிய அளவிலான ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் மீன்வளக் கூட்டுறவுச் சங்கப்பிரிவிற்கு உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. நிதி உதவி அளிப்பதோடு, சுதந்திரத்திற்குப் பிறகு இதுவரை ஏற்பட்டுள்ள இடைவெளிகளை நிரப்பும் செயலை வலுப்படுத்தும் வகையிலும் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (நபார்ட்), தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (National Coopertaive Development Corporation - NCDC) மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டுக்கழகம் (National Fisheries Development Board - NFDB) ஆகியவற்றின் ஆதரவும் தேவைப்படுகிறது. முதல் நடவடிக்கையாக அடுத்துவரும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 10 மில்லியனுக்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் (Group Accident Insurance scheme - GAIS) காப்பீடு வழங்கியாக வேண்டும். நான்கு மில்லியன் மீன்வளக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பிரதமரின் மீன் வளத் தொழில்முனைவுத்திட்டம் (Pradhan Mantri Matsya Sampada Yojana - PMMSY) திட்டம் குறித்தும் கூட்டுறவின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்தும் இணையவழி விழிப்புணர்வுப் பயிற்சியை அளிக்க வேண்டும். மீன்வளக் கூட்டுறவுச் சங்கப் பிரிவானது பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கின்ற நலிவடைந்த மக்கள் பிரிவினரை பிரதிநிதித்துவம் செய்வதால், அந்தச் சங்கங்களுக்கு விற்பனை உதவி வழங்கப்பட வேண்டும். அதாவது ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட் (அமுல்) போன்று உள்நாட்டு சந்தையில் வெற்றிகரமாக வளர்ச்சி பெறுவதற்கான நீடித்த நிலையான வர்த்தகத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும். தொடக்கநிலை மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்தை கணினிமயமாக்குதல் என்பது, இந்தப் பிரிவு அடிமட்ட நிலையிலும் வளர்ச்சி காண்பதை விரைவுபடுத்தும்.

---

– **பி.கே.மிஸ்ரா**, புதுதில்லி தேசிய மீன்வளக் கூட்டுறவுச் சங்கச் சம்மேளன முன்னாள் நிர்வாக இயக்குநர், இந்தியாவில் மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு மற்றும் ஆளுகை தொடர்பான நிபுணர்.

# வேளாண் விளைபொருள் விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மை

– சிநேக குமாரி

சந்தைப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றோடு, கூடுதல் உற்பத்தி என்பதிலிருந்து தரமான விளைச்சல் என்பதை நோக்கி வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் கவனம் உருமாறியுள்ளது. சிறப்பான சேமிப்பு வசதிகள், மூலவளங்களைத் திறம்பட மேலாண்மை செய்தல், விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பணம் பட்டுவாடா செய்தல் மற்றும் தானியங்கள் வீணாவதை மிகவும் குறைத்தல் ஆகியவற்றில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தற்போது முன்னேற்றம் கண்டு வருகின்றன. வேளாண் விளைபொருள்களை மிகத் திறம்படத் தரம் பிரித்தல், வகைப்படுத்துதல், கையாளுதல் என்பவை விநியோகச் சங்கிலித்தொடரை மிகச் சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும். விநியோகச் சங்கிலித்தொடரை மீளுருவாக்கம் செய்வதில் பருவநிலை, சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்சார் நீதி ஆகியவற்றில் அதிகபட்ச இலாபம் அடைதல் ஆகிய இலக்குகளையும் தாண்டி கூடுதல் கவனத்தை கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்துகின்றன.

விநியோகச் சங்கிலித்தொடர் என்பது வேளாண் விற்பனைப் பொருள்களை உற்பத்தியாளரிடம் இருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் தொடர் நடவடிக்கைகள் ஆகும். இதில் போக்குவரத்து வாயிலாக பொருள்களை எடுத்துச் செல்லுதல், சரக்குப் போக்குவரத்து நிறுவனங்கள், சேமிப்பகங்கள், கொள்முதல், சேமிப்புக் கிடங்குகள், இருப்பு மேலாண்மை மற்றும் பதப்படுத்துதல் போன்ற தொடர் நிகழ்வுகள் உள்ளடங்கும். வேளாண் விளைபொருள்களுக்கான விநியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மையானது (Agriculture Supply Chain Management - ASCM) திறன்மிக்கத் திட்டமிடல், வடிவமைப்பு, ஒருங்கிணைப்பு, நிறுவனம், சேமிப்பு, பதப்படுத்துதல், வேளாண் விளைபொருள்கள் பண்ணையில் இருந்து உணவுத் தட்டிற்குச் செல்வது வரையிலான பயணத்தைக் கண்காணித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது. பருவநிலைக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளக்கூடிய மீளுருவாக்க வேளாண் விளைபொருள் சங்கிலித் தொடரானது விவசாயத்தின் மீதான சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நெருக்கடிகளை நீக்குவதற்கு உதவியாக இருக்கும்.

### விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மையின் முக்கியத்துவம்

விவசாயிகள், பதப்படுத்துதல் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், சேகரிப்பாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் போன்ற பலதரப்பட்ட பங்குதாரர்களை இணைப்பதன் மூலம் உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதோடு நீடித்த நிலையான விவசாய மேம்பாட்டிற்கும் வேளாண் விளைபொருள்களுக்கான விநியோகச் சங்கிலித் தொடர்கள் உதவுகின்றன. சரக்குகளைக் கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல், விநியோகித்தல் போன்ற விநியோகச் சங்கிலித் தொடர் இடைநிலைக் கட்டங்களை விவசாயிகள் பெரிதும் சார்ந்திருக்க வேண்டியதாக உள்ளது. விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மை என்பது சேமிப்புப் பிரச்சினைகளைச் சரியாகக் கையாளும் விதத்தில் மூலவளங்களை சரியான அளவில் ஒதுக்கீடு செய்தல், போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல், விற்பனைப் பொருள்களுக்கான இருப்பு மேலாண்மை ஆகியவற்றைக் கையாள வேண்டியதாக உள்ளது.

### வேளாண் விளை பொருள்களுக்கான விநியோகச் சங்கிலித் தொடரில் கூட்டுறவுச் சங்கங்கள்

வேளாண் விளை பொருள்களுக்கான விநியோகச் சங்கிலித்தொடருக்கு தொழில்நுட்பம், நிதி மற்றும் இயக்குதல் அம்சங்களில் உதவக்கூடிய சேவைகளை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி



வருகின்றன. உழவர் உற்பத்திக் கழகங்கள் (Farmer Producer Organizations - FPOs), தொகுப்பிட அடிப்படையிலான வியாபாரச் சங்கங்கள் (Cluster-Based Business Organizations - CBBOs), கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் போன்ற கூட்டமைப்புகள் பல்வேறு வியாபார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவையாக இருக்கின்றன. வேளாண் இடுபொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்தல், விவசாயத்திற்குத் தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், கடன் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருதல், மொத்தமாக விற்பனை செய்வதற்காக விளைபொருள்களை ஒன்று திரட்டுதல், வேளாண் விளைபொருள்களைப் பதப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் மேற்கூறிய கூட்டமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன. தகவல் தெரிவித்தல், சந்தைப்படுத்துதல், போக்குவரத்து மற்றும் வேளாண் விளைபொருள்களை விநியோகித்தல் ஆகியவற்றிற்கான தளங்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் விநியோகச் சங்கிலித் தொடர் செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வசதிகளை வழங்குவதோடு மிகச் சரியான வேளாண் இடுபொருள்களை (விதை உரம், அக்ரோ வேதிப்பொருள்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் உயிர் உரங்கள்) வழங்குவதன் மூலம் தரமான விளைச்சல் கிடைக்க உதவுகின்றன.

**கூட்டுறவுச் சந்தை மற்றும் விநியோகச் சங்கிலித்தொடர்**

வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் கவனமானது சந்தைப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றோடு, கூடுதல் உற்பத்தி என்பதிலிருந்து தரமான விளைச்சல் என்பதற்கு உருமாறியுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தற்போது சிறப்பான சேமிப்பு வசதிகள், மூலவளங்களைத் திறம்பட மேலாண்மை செய்தல், விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பணம் பட்டுவாடா செய்தல் மற்றும் தானியங்கள் வீணாவதை அதிக அளவில் குறைத்தல் ஆகியவற்றில் முன்னேற்றம் கண்டு வருகின்றன.

**தொடக்கநிலை வேளாண் கடன் சங்கச் சேமிப்பகம் மற்றும் விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மை**

இந்தியாவில் கூட்டுறவுத் துறைக்கான முதலாவது அமைச்சரான திரு.அமித்ஷா தலைமையின் கீழ் கூட்டுறவு அமைச்சகமானது அண்மையில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு உத்வேகம் கொடுத்துள்ளது. இதனால் கூட்டுறவு இயக்கத்தில் மிக விரைவான வளர்ச்சியை நாடு கண்கூடாகக் கண்டு வருகிறது. தொடக்கநிலை விவசாயக் கடன் சங்கங்கள் (Primary Agricultural Credit Society - PACS) பல்நோக்கு மையங்களாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீன்வளம், பால்வளம், கிராமப்புறங்களில் கிடங்குகள் கட்டுதல், உணவு தானியங்களைக் கொள்முதல் செய்தல், வேளாண் இடுபொருள்களை (விதை, உரம்) சேமித்து வைத்தல், எல்பிஜி / சிஎன்ஜி / பெட்ரோல் விநியோகம், குறுகியகால மற்றும் நீண்டகாலக் கடன்களை வழங்குதல், வாடிக்கையாளர்களுக்கு விவசாயக் கருவிகளைக் கடனாகத் தரும் மையங்கள், பொதுச்சேவை மையங்கள், நியாயவிலைக் கடைகள் (Fair Price Shops - FPSs), சமுதாய அளவிலான நீர்ப்பாசனம், வங்கி வர்த்தக உதவியாளர் நடவடிக்கைகள் முதலானவை உள்ளிட்ட பல துறைகளுக்கு இடையிலான பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ள தகுதியானவையாக தொடக்கநிலை விவசாயக் கடன்

## கச்சாப் பொருள்களிலிருந்து மதிப்புக்கூட்டல் பொருள்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிகரமான பயணம்

வெங்கடேஸ்வரா கூட்டுறவு பவர் – அக்ரோ புராசசிங் லிமிட்டெட்டை 2019இல் திரு. சிவாஜி டோலோ நிறுவினார். விவசாயிகளும் முன்னாள் இராணுவத்தினரும் இதில் உறுப்பினர்களாக இருப்பதால் இந்த நிறுவனம் வலிமையான நிறுவனமாகச் செயல்படுகின்றது இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது 20 ஆயிரம் விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தச் சங்கமானது மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலம் முழுவதும் பணி ஆற்றுகின்றது. உற்பத்தி, பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருள்களை ஏற்றுமதி செய்தல் ஆகிய பணிகளை இந்தச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது. நாசிக் மாவட்டத்தின் மலேகுவான் பகுதியில் உள்ள அஜங் வாடல் என்ற இடத்தில் 508 ஏக்கர் பரப்பளவில் ஒரு பண்ணையை இந்தக் கூட்டுறவுச் சங்கம் சொந்தமாகக் வைத்துள்ளது. இந்தக் கூட்டுறவுச் சங்கமானது முந்திரிப் பருப்பு பதப்படுத்துதலில் புதிய உத்திகளை உருவாக்கி சந்தைப்படுத்துதல் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. மேலும் நாக்பூரில் பால் பதப்படுத்துதல் மையம், ஜெரேனியம் விளைவித்தல், காற்றில்லாத ஊட்டச்சத்து இயற்கை உரத்திட்டம், வேளாண் பொருள்களுக்கான சேமிப்புக் கிடங்குகள் / பண்டகசாலைகள், இயற்கை முறையில் விளைந்த மஞ்சளைப் பதப்படுத்தும் தொழில் பிரிவுகள், செயற்கை முத்துகள் உற்பத்தி பண்ணை, பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி, ஆடு வளர்ப்பு, உயிருள்ள விலங்குகளை ஏற்றுமதி செய்யும் திட்டம் போன்ற நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றது. [ஆதாரம்: www.venkateshwarapoweragro.com <file:///C:\Users\LENOVO\Downloads\www.venkateshwarapoweragro.com> ]

சங்கங்கள் உள்ளன. கிடங்குகள் மேலாண்மை, கொள்முதல் மையங்கள் மற்றும் நியாயவிலைக் கடைகள் முதலானவை மீளுருவாக்கம் செய்யப்படுவதற்கு முன்மாதிரிகள் தேவைப்படுகின்றன. அதாவது தரமான விளைச்சல், இருப்பு, போக்குவரத்து மற்றும் தகவல் மேலாண்மையில் கவனம் செலுத்துகின்ற முன்மாதிரிகள் தேவைப்படுகின்றன.

பல்வகை சேவை மையங்களாக இந்த தொடக்கநிலை விவசாயக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியோடு கூடவே வேளாண் விளைச்சலைக் கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் உதவுகின்றன. கிராமங்களில் சேவைகளை வழங்குவதில் பொதுச்சேவை மையங்களாக தொடக்கநிலை விவசாயக் கடன் சங்கங்கள் உதவிபுரிகின்றன. காலமாற்றத்தில் தொடக்கநிலை விவசாயக் கடன் சங்கங்கள் வேளாண் இடுபொருள்கள், வேளாண் கருவிகள் மற்றும் சேமிப்பு வசதிகளை வழங்கும் வகையில் தனது வர்த்தகத்தை பல்வகையானதாக விரிவுபடுத்தியுள்ளன.

தொடக்கநிலை விவசாயக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்கள் இருக்கும் இடத்திலேயே அவர்களுக்குத் தேவையான, சரியான வேளாண் இடுபொருள்களை விநியோகிக்கின்றன. தரமான விளைச்சல் மற்றும் சேமிப்புக்கிடங்கு வசதிகளையும் இது உறுதி செய்கின்றது. வேளாண் கொள்முதல், பண்டகசாலைகள் அமைத்தல், தொடக்கநிலை பதப்படுத்தல் மையங்கள், வாடிக்கையாளர்களுக்கு விவசாயக் கருவிகளை கடன் தரும் மையங்கள், தரம் பிரித்தல் மற்றும் வகைப்பிரித்தல் அலகுகள், குளிர்ப்பதனத் தொடர் சேமிப்புக் கிடங்கு வசதிகள், பகுப்பாய்வு அளவுகள், போக்குவரத்து வசதிகள், ஸ்மார்ட் மற்றும் துல்லியமான விவசாயத்திற்கான உள்கட்டமைப்பு வசதி, பயிர்த்தொகுப்பிற்கான விநியோகச் சங்கிலித் தொடர் உள்கட்டமைப்பு வசதி, பேக்கேஜிங் அலகுகள், அங்கக இடுபொருள்கள் உற்பத்தி, பழங்களைப் பழுக்கவைக்கும் அறைகள், உரம் தயாரிக்கும் திட்டங்கள், உயிர் தூண்டுதல் உற்பத்தி அலகுகள், சேமிப்புக் குழிகள், வேக்ஸ் பிளாண்ட், ஏற்றுமதிப் பயிர்த் தொகுப்புக்கான விநியோகச் சங்கிலித் தொடர் வசதி போன்றவற்றை உருவாக்குவதற்காக தொடக்கநிலை வேளாண் கடன் சங்கங்கள் கடன்களைப் பெற்றுள்ளன.

### விநியோகச் சங்கிலித் தொடர் ஆபத்துக் காரணிகளைக் கையாளுதல்

தரம் தொடர்பான விதிமுறைகள், கிடைக்கக் கூடிய மனித மூலவளம், சந்தையில் விலை ஏற்ற இறக்கங்கள், பருவநிலை



மாறுதல்கள், போக்குவரத்துப் பயணத்தில் தாமதங்கள், கச்சாப் பொருள்கள் கிடைத்தல், வேளாண் சார்ந்த நடவடிக்கைகளில் செயல்திறன் மற்றும் உற்பத்திதிறன் ஆகியவற்றோடு தொடர்புடைய வினியோகச் சங்கிலித் தொடர் ஆபத்துக் காரணிகளை கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படக் கையாள வேண்டிய தேவை உள்ளது. டிஜிட்டல் மயமாக்குதல், தரவுப் பகுப்பாய்வைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படக்கூடிய வினியோகச் சங்கிலித் தொடர் ஆபத்துக் காரணிகளை திறமையாகச் சமாளிக்கலாம். அளவு, உண்மைத்தன்மை, பல்வகைத்தன்மை மற்றும் திசைவேகம் ஆகிய அம்சங்களைக் கொண்ட வினியோகச் சங்கிலித் தொடரின் தரவுகளை கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படக் கையாள முடியும்.

### வினியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மைக்கான முன்னுதாரணங்கள்

வினியோகச் சங்கிலித் தொடர் நடவடிக்கைகளில் உருவாகக் கூடிய துணைப்பொருள்களைக் குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி (3Rs) செய்தல் என்பதில் கூட்டுறவு சங்கங்கள் கவனம் செலுத்துகின்றன. இதனால் பொருள்கள் வீணாவது பெருமளவில் குறைக்கப்படுகின்றது. வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த முன்மாதிரிகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில் உள்ளன அதிலும் குறிப்பாக வேளாண் விளைபொருள்களின் வாழ்நாள் வரம்பை அதிகப்படுத்துவதற்காக சேமிப்புக் கிடங்குகள் மற்றும் பண்டகசாலைகளைத் திட்டமிடுவதில் முன்மாதிரிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### கச்சாப் பொருள்களிலிருந்து மதிப்புக்கூட்டல் பயணம்

அசாமில் உள்ள ஈஸ்டர்ன் அக்ரோ புராசசிங் மற்றும் டீ வேர்ஹவுசிங் கூட்டுறவு சங்கமானது கோபால் சந்திர பைஷ்யா என்பவரால் 1971இல் தொடங்கப்பட்டது. இந்தச் சங்கம் மதிப்புக்கூட்டப்பட்ட கடுகுப் பொருள்களின் விற்பனைத் தொடரை மேம்படுத்துவதற்காக கடுகு எண்ணெய் பேக்கேஜிங் தொழிற்சாலையை நிறுவியது. அதே போன்று சுத்திகரிக்கப்பட்ட சோயா எண்ணெய் பேக்கேஜிங் தொழிற்சாலை மற்றும் தரமான அசாம் தேநீருக்காக தேயிலை பேக்கேஜிங் தொழிற்சாலையையும் நிறுவியது. இந்தச் சங்கமானது தேயிலை ஏலம் விடப்படும் மையங்களில் தேயிலைக்கான சேமிப்புக் கிடங்கு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. கூட்டுறவு முறையிலான இந்த அணுகுமுறையானது தரத்தை உறுதி செய்வதோடு, பிராண்ட் மீதான நம்பிக்கையைக் கட்டமைக்கவும் உதவியுள்ளது. பண்டகசாலைகளைக் கட்டுதல், சேமிப்புக்கிடங்கு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தச் சங்கம் விற்பனைப் பொருள்களுக்கான சங்கிலித்தொடரை மீளுருவாக்கம் செய்துள்ளது. பல்வேறு இடங்களில் உள்ள விற்பனை மையங்கள் உற்பத்தி சார்ந்த இலாபத்திற்கான வலைப்பின்னலைக் கட்டமைப்பதில் உதவியுள்ளன. [ஆதாரம்: easternagro.co.in <file:///C:\Users\LENOVO\Downloads\easternagro.co.in>]




**முடிவுரை**

விதை, ஏற்றுமதி, இயற்கை உரச் சங்கங்கள் பிரிவுகளில் தேசிய அளவிலான மூன்று கூட்டுறவுச் சங்கங்களை நிர்மாணிக்க இருப்பதாக கூட்டுறவு அமைச்சகம் அண்மையில் அறிவிக்கை செய்துள்ளது. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை நிர்மாணித்தல், மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு உறுப்பினராக உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் திறன்மிக்க விநியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மை அமைப்பை சொந்தமாகக் கைக்கொண்டு செயல்படுத்தி நிர்வகிக்க வேண்டிய தேவை உள்ளது. ரூபாய் 500 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய பன்மாநில விதைக் கூட்டுறவுச் சங்கமானது விதை உற்பத்தி, பதப்படுத்துதல், சேமித்து வைத்தல் மற்றும் தரமான விதைகளை விநியோகித்தல் ஆகிய செயல்பாடுகளை மீளுருவாக்கம் செய்வதில் உதவியாக இருக்கும். இயற்கை உர விளைபொருள்கள் சங்கமானது ஆய்வுக்கூட வலைப்பின்னல் வாயிலாகத் தரப்படுத்துதல் மற்றும் சான்றிதழ் அளித்தல் செயல்பாடுகள் மூலம் இயற்கை உணவுச் சந்தைக்கு உதவி புரிவதாக அமையும். வேளாண் விநியோகச் சங்கிலித்தொடர்களின் செயல்பாடுகளுக்கான சங்கமானது பயிற்சி மற்றும் திறன் கட்டமைப்பு வகுப்புகளை நடத்தும். ஏற்றுமதி சங்கமானது கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல், பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், பிராண்டிங் செய்தல், பேக்கேஜிங் போன்ற பல்வேறு விநியோகச் சங்கிலித் தொடர் நடவடிக்கைகளின் வாயிலாக கூட்டுறவுச் சங்கங்களின் 29 கோடி உறுப்பினர்களுக்கும் பலன் அளிக்கும்.

மீளுருவாக்க சங்கிலித் தொடரை நோக்கிய உருமாற்றம் என்பது கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பலன்களை அளிக்கிறது. நிறுவன ஆதரவு, நிறுவன மறுகட்டமைப்பு, வலைப்பின்னல் மற்றும் ஒத்திசைவு, பயிற்சி, தொழில்நுட்ப அடிப்படை அறிவு, வேளாண் இடுபொருள்கள் வசதி, அறிவு பகிர்தல், போதுமான உள்கட்டமைப்பு வசதி. தரமான சேமிப்புக்கிடங்கு, திறன் கட்டமைப்பு, விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள், சந்தை குறித்த விழிப்புணர்வு, தரவுப் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு போன்ற முன்னோட்ட நடவடிக்கைகள் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்ற சிறப்பான விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மையை மீளுருவாக்கம் செய்ய உதவும். தொழிற்சாலை சார்ந்த ஒத்திசைவு மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு இடையிலான விநியோக சங்கிலித் தொடர் வலைப்பின்னல்கள் ஆகியன விநியோகச் சங்கிலித் தொடரை மீளுருவாக்கம் செய்யவும் ஒட்டுமொத்தமான கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு உதவியும் உள்ளன. துணை விளைபொருள்கள் குறித்த அறிவு மற்றும் அத்தகைய பொருள்களின் பயன்பாடு குறித்து மேலும் கூடுதலாகத் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் விநியோகச் சங்கிலித்தொடரில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால அபிவிருத்திகள் குறித்தும் திறன்மிக்க மேலாண்மைக்கு அவற்றின் பயன்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்தும் உறுப்பினர்கள் எந்த அளவிற்குத் தெரிந்து வைத்துள்ளனர் என்பதைப் பொறுத்தே வேளாண் விளைபொருள்களுக்கான விநியோகச் சங்கிலித்தொடர் மேலாண்மை அமையும்.

---

**– சிநேக குமாரி**, புனேயில் உள்ள சிம்பயோசிஸ் இண்டர்நேஷனல் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) கல்வி நிறுவனத்தின் சிம்பியோசிஸ் பொருளாதாரப் புலத்தில் உதவிப்பேராசிரியர்.

# கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக தற்சார்பு இந்தியாவை உருவாக்குதல்

–தினாநாத் தாகூர்

கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்தவரை பொதுமக்கள் கைகோத்து, தங்களிடம் உள்ள வளங்களை ஒருங்கிணைத்து, தனிநபர்களால் சாதிக்கமுடியாத பொருளாதார இலக்குகளை எட்ட முடியும். வேளாண்மைக்கான ஆதரவும், உணவுப் பாதுகாப்புத் திட்டங்களும் அரசுக்கு மிகப்பெரிய அளவில் பொருளாதார, நிர்வாகச் சுமைகளை ஏற்படுத்துகின்றன. இந்தியாவின் வலிமையான கூட்டுறவு வரலாற்றையும், வேளாண்துறையில் இந்தியா தீவிர கவனம் செலுத்தி வருவதையும் ஆராய்ந்து பார்க்கும்போது, உணவு உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு மேலாண்மையை முன்னின்று நடத்தும் பொறுப்பில் இருந்து அரசு விலகிக்கொண்டு, அப்பொறுப்பை உழவர் கூட்டுறவு அமைப்புகளிடம் ஒப்படைப்பதுதான் சிறந்த தீர்வு என்பதை உணர முடிகிறது.

கூட்டுறவு என்பது இந்தியாவில் ஒரு தத்துவமாகவே தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை கூட்டுறவு இயக்கம் என்பது ஊரகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. இந்தியாவில் இன்றைய நிலையில் சுமார் 29 கோடி பேர் இந்தியாவின் கூட்டுறவுத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பாக, வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள், மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவது மட்டுமின்றி, சமூகம் சார்ந்த அணுகுமுறை மூலம் அவர்களுக்குத் தேவையான நிதிப்பாதுகாப்பு வளையத்தையும் வழங்குகின்றன.



கூட்டுறவின் மூலம் செழிப்பு என்ற முழக்கத்தை இந்தியப் பிரதமர் முன்வைத்த போது, ஒட்டுமொத்தக் கூட்டுறவுச் சமுதாயமும் மகிழ்ச்சியில் திளைத்தது. இந்தியப் பிரதமர் அறிவித்தவாறே, கூட்டுறவுத்துறை மேம்பாட்டிற்கு என தனி அமைச்சகத்தை ஏற்படுத்துவது என்று, 2021ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் தேதி முடிவு எடுக்கப்பட்டது. இந்தியாவில் கூட்டுறவுத் துறையை மேம்படுத்துவதில் மத்திய அரசுக்கு இருந்த ஆழமான உறுதிப்பாட்டையும், எண்ணத்தையும் இது வெளிப்படுத்தியது. கூட்டுறவு அமைப்புகள் தான் பொருளாதார வளர்ச்சிக்கான மிகச் சரியான மாற்றுமுறை என்று அரசு பார்ப்பதையும், அதன் மூலமாகவே அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம் என்ற கனவை இந்தியா நனவாக்க முடியும், தற்சார்பு இந்தியா என்ற தொலைதூர இலக்கை அடைய முடியும் என்று மத்திய அரசு நம்புவதையும் இந்த நடவடிக்கை வெளிப்படுத்தியது.

### கூட்டுறவால் ஏற்படும் சமூகப் பொருளாதார அதிகாரம் அளித்தல் விளைவுகள்

வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு, வேலைவாய்ப்புப் பெருக்கம் போன்றவற்றைக் கையாளுவதில் கூட்டுறவு அமைப்புகளுக்கு

இயல்பாகவே சாதகமான அம்சங்கள் இருப்பதால் சமூக, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சிறந்த கருவிகளாக கூட்டுறவு அமைப்புகள் பார்க்கப்படுகின்றன. கூட்டுறவு அமைப்புகள் எனப்படுபவை, பொதுமக்களை மையமாகக் கொண்ட குடிமக்கள் அமைப்புகள் என்பதால், அவற்றால் எந்தவிதத் தடையும் இல்லாமல் பொருள்கள் மற்றும் சேவைகளை பொதுமக்களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் சாத்தியத் திறமை உள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்தவரை பொதுமக்கள் கைகோர்த்து, தங்களிடம் உள்ள வளங்களை ஒருங்கிணைத்து, தனிநபர்களால் சாதிக்க முடியாத பொருளாதார இலக்குகளை எட்ட முடியும். சந்தைகளை அணுகுதல், பொருளாதார வாய்ப்புகளையும், வளர்ச்சியையும் உருவாக்குதல், சுதந்திரமான சந்தை நிலைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு உதவி செய்யவும், உறுதிசெய்யவும் கூட்டுறவு அமைப்புகளால் முடியும். அதன் பயனாக, இந்தியாவின் பொருளாதார மற்றும் சமூக அமைப்புகளில் சாதகமான குறியீடுகளை ஏற்படுத்தும் திறன் கூட்டுறவு அமைப்புகளுக்கு உண்டு.

**கூட்டுறவு அமைப்புகள், வேளாண்மை மற்றும் உணவுப்பாதுகாப்பு**

வேளாண் வளத்தையும், நீடித்த உணவுப் பாதுகாப்பையும் எட்டுவதற்கு இந்தியாவுக்கு புதுமையான வழிகள் தேவைப்படுகின்றன. இந்த இலக்கை எட்ட வேண்டுமானால், உணவுப் பாதுகாப்பு, உணவு விநியோகம், நுகர்வுச் சங்கிலி என ஒவ்வொரு நிலையிலும் புத்தாக்கமும், ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தும் திறனும் தேவைப்படுகின்றன. ஒருபுறம் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அதே வேளையில், இயற்கை வளங்களைப் பாதுகாத்து, பராமரித்து விரிவுபடுத்தவும் வேண்டும். அதற்குப் புத்தாக்க முறைகள் தேவை. அதற்கு முழுமையான அணுகுமுறைகளை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் நடைமுறை தேவை. அது உள்நாட்டு மற்றும் பாரம்பரிய அறிவின் மீது கட்டி எழுப்பப்பட வேண்டும். அதுமட்டுமின்றி, கூட்டுறவு போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் முக்கியத்துவம், மையத்தன்மை, அவசியம் ஆகியவற்றை அங்கீகரிப்பதாக இருக்கவேண்டும். பயிர்களின் வலிமையை மேம்படுத்துதல், உற்பத்தியையும், வாழ்வாதாரத்தையும் பெருக்குதல் ஆகியவற்றை ஒருபுறம் மேற்கொள்ளும் நிலையில், மற்றொருபுறம் மண்வளத்தையும், பல்லுயிர் வாழ்சூழலையும் பெருக்குவதற்கு உழவர்கள் அவர்களின் சொந்தக் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக தீவிரமாகவும், சிறப்பாகவும் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

வேளாண்மைக்கான ஆதரவும், உணவுப்பாதுகாப்புத் திட்டங்களும் அரசுக்கு மிகப்பெரிய அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகச் சுமைகளை ஏற்படுத்துகின்றன. இந்தியாவின் வலிமையான கூட்டுறவு வரலாற்றையும், வேளாண்துறையில் இந்தியா தீவிர கவனம் செலுத்தி வருவதையும் ஆராய்ந்து பார்க்கும் போது, உணவு உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு மேலாண்மையை முன்னின்று நடத்தும் பொறுப்பில்



இருந்து அரசு விலகிக் கொண்டு, அப்பொறுப்பை உழவர் கூட்டுறவு அமைப்புகளிடம் ஒப்படைப்பதுதான் சிறந்த தீர்வு என்பதை உணர முடிகிறது. உணவுப்பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, நிதி உள்ளடக்கம் போன்ற உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய முன்னுரிமை அம்சங்களாக அடையாளம் காணப்பட்ட விசயங்களுக்குத் தீர்வு காணவும், பங்களிக்கவும் கூட்டுறவு அமைப்புகள் தான் மிகச் சரியான கருவிகள் என்பதை அரசு அங்கீகரிக்க வேண்டும். இந்தியாவின் மிக முக்கியமான, மிகப் பெரிய வலிமை என்பது அதன் மக்கள் தான், அவர்களிலும் குறிப்பாக கோடிக்கணக்கான உழவர் குடும்பங்கள் தான். தொழில்முறை மேலாண்மையுடன் இந்தியாவின் உழவர்களை இணைப்பதன் மூலம் கிடைக்கும் வலிமையைக் கொண்டு எந்தவிதமான இலக்கையும் இந்தியாவால் அடைய முடியும்.

**கூட்டுறவுக் கிராமங்கள் - எதிர்காலம்**

கூட்டுறவுக் கிராமங்கள் என்ற இலக்கை அடைவதற்கு சரியான கொள்கைகள் மற்றும் ஊக்குவிப்புகள் மூலம், உழவர்கள் ஒன்றிணைந்து கூட்டுறவு அமைப்புகளாக செயல்படும்படி மத்திய அரசு ஊக்குவிக்க வேண்டும். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும் தற்சார்பு கொண்ட கூட்டுறவுக் கிராமம் என்ற

இலக்கை நோக்கிப் பயணிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். கூட்டுறவுக் கிராமங்கள் என்ற தத்துவமே வேளாண் வளர்ச்சி மற்றும் உணவு மேலாண்மைக்கான ஈர்ப்பு சக்திகளை கிராமங்களிலும், ஊரகங்களிலும் நோக்கித் திருப்புவது தான். இந்த அணுகுமுறையின் கீழ் உழவர்கள் தங்களின் இயற்கை மற்றும் பொருளாதாரச் சொத்துக்களை, அவற்றின் திறமையான மற்றும் நீடிக்கத்தக்கப் பயன்பாட்டை உறுதிசெய்யும் வகையிலும், பாதுகாக்கும் வகையிலும், பராமரிக்கும் வகையிலும் ஒருங்கிணைப்பதற்காக ஊக்குவிக்கப்பட வேண்டும். நிலம், நீர் மற்றும் கால்நடைவளம் ஆகியவை புத்திசாலித்தனமாகவும், சிறப்பாகவும் மேலாண்மை செய்யப்படுவதன் மூலம் அவை எந்த வகையிலும் வீணடிக்கப்படாமல் இருப்பதும், வேறு வழியே இல்லாத சூழலில் மட்டும் தான் வேதிப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படும்.

### தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்பை உருவாக்க வேண்டியதன் தேவை

தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்பை ஏற்படுத்துவதை நோக்கி முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அரசு ஆராய வேண்டும். ஒவ்வொரு இந்தியக் கிராமத்திலும், அதன் ஒட்டுமொத்தப் பொருளாதார நடவடிக்கைகளை கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுத்துவதற்கும், மேலாண்மை செய்வதற்கும் ஒரு வேளாண் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். அதன் மூலம் உற்பத்திச்செலவு குறைவதுடன், உற்பத்தித்திறனும் அதிகரிக்கும்.




கிராம அளவிலான கூட்டுறவு அமைப்புகள் ஒவ்வொன்றிலும் வேளாண் கருவிகள் மற்றும் கால்நடை மேலாண்மை மையம் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். இத்தகைய இரண்டு அல்லது மூன்று கிராமக் கூட்டுறவு அமைப்புகள் ஒன்றாக இணைந்து பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவ வேண்டும். அவற்றில் அழுகும் பொருள்கள் மற்றும் அழுகாத பொருள்களைச் சேமித்து வைத்தல், வகைப்படுத்துதல், தரம் பிரித்தல், பேக்கேஜிங் செய்தல், வணிகம் செய்தல் ஆகியவற்றுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்குக் கடன் வசதி வழங்குவது மட்டுமின்றி, பசுமை எரிசக்தி, சுற்றுலா, நுகர்வோர் நலன், சுகாதாரம், கல்வி, தொழிற் பயிற்சி மையங்கள் ஆகியவற்றையும் இயக்க வேண்டும். அரசின் உணவுப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஒற்றை முகமையாக பல்வகை கிராம கூட்டுறவுச் சங்கங்கள் அறிவிக்கப்பட வேண்டும். இந்தியா முழுவதும் சமுதாய அளவில் இரண்டு இலட்சம் கூடுதல் பல்வகைப் பயன்பாட்டுக்கான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவது குறித்த மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் சமீபத்திய நடவடிக்கை என்பது கீழிருந்து மேல் அணுகுமுறையைக் கடைபிடித்து, இந்தியாவில் தற்சார்பை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சிறந்த நடவடிக்கையில் ஒன்றாகும்.

கிராமங்களில் விளைவிக்கப்படும் ஒவ்வொரு தானியமும் இந்தக் கூட்டுறவு அமைப்புகள் மூலமாகத்தான் தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், உணவு இழப்பும், உணவுப்பொருள்கள் வீணாவதும் முற்றிலுமாகத் தடுக்கப்படும்.

உழவர்களால் விளைவிக்கப்படும் அனைத்து வேளாண் விளைபொருள்களும், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களால் சேகரிக்கப்பட்டு, பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு வேளாண் விளைபொருள்கள் அளவிடப்பட்டு, அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையின்படி அதற்கான தொகை உழவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை

விவரம் இல்லாத சூழலில், சிறந்த சந்தை விலை உழவர்களுக்கு வழங்கப்படும். ஒருவேளை ஏதேனும் உழவர்கள் தங்களது விளைபொருள்களை உடனடியாக விற்கவில்லை என்றால், அது குறித்து கூட்டுறவு அமைப்புகளிடம் தெரிவிக்கலாம். ஒவ்வொரு உழவரும் அவர் விரும்பிய விலையில் விளைபொருள்களை விற்பனை செய்யவும், அவரது விருப்பமும், அவரது குரலும் மதிக்கப்படும் அளவுக்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். உணவுப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு தானியங்களை இருப்பு வைக்க முடியும். அவ்வாறு இருப்பு வைக்கப்படும் தானியங்களுக்கான தொகையை அரசு நிறுவனங்கள் பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங்களும் இந்தத் தத்துவத்தின்படி ஒருங்கிணைக்கப்பட்டால், நாட்டில் சுமார் ஏழு இலட்சம் கிராம வேளாண் கூட்டுறவு அமைப்புகளும் 3.5 இலட்சம் பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கும். கிராம அளவிலான வேளாண் கூட்டுறவு அமைப்புகளையும், பல்வகைப் பயன்பாட்டுக்கான கிராமக் கூட்டுறவுச் சங்கங்களையும், டிஜிட்டல் வழியாக இணைப்பதன் மூலம் தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்பை ஏற்படுத்த முடியும். தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்பை ஏற்படுத்துவதன் மூலமும், உணவு உற்பத்திச் செலவைக் குறைப்பதன் வழியாகவும், அரசின் உணவுப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான செலவைக் குறைப்பதன் மூலமாகவும் ஆண்டுக்கு மூன்று இலட்சம் கோடி ரூபாயைச் சேமிக்க முடியும். அதுமட்டுமின்றி, தேசியக் கூட்டுறவு உணவுத்தொகுப்பு ஊரகப் பகுதிகளில் மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி, ஊரக வளர்ச்சியில் புதிய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும்.

கூட்டுறவு மதிப்பு சார்ந்த நிறுவனங்கள் மூலம் தற்சார்பும் தானாக நீடிக்கத்தக்க வலிமையையும் கொண்ட பாரத இயக்கத்திற்கு நிதியுதவி வழங்குவதற்காக தேசியக் கூட்டுறவு உணவுத்தொகுப்புக்கு உதவும் வகையில், தேசிய ஊரக வேளாண் வள நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். புதுமையான மற்றும் படைப்புத்திறன் கொண்ட அணுகுமுறை மூலம் தேசிய ஊரக மற்றும் வேளாண் வள நிதியம் மற்றும் தேசியக் கூட்டுறவு உணவுத் தொகுப்புக்குத் தேவையான நிதி ஆதாரங்களை இப்போது உள்ள பட்ஜெட் ஒதுக்கீடுகளின் மூலமாகவே எளிதாக அடையாளம் காண முடியும். அரசு மற்றும் பெரு நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியுதவி சிக்கனமாகவும், சிறப்பாகவும் செலவிடப்பட்டால் இந்த அமைப்புகள் பொருளாதார மற்றும் சமூக நலனுக்கான சிறந்த கருவியாக மாறும். அது இந்திய குடிமக்களின் கண்ணியத்தையும், தன்னம்பிக்கையையும் ஒரு போதும் சிதைக்காது.

மிகச் சிறந்த வேளாண் உற்பத்தி முறை மேலாண்மை, உணவுப்பாதுகாப்பு, உணவு வழங்கல் சங்கிலி மேலாண்மை, தூய்மையான மற்றும் பசுமையான வழிகளில் எரிசக்திப் பாதுகாப்பை உறுதிசெய்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், காலநிலை மாற்றத்தின் தீய விளைவுகளைக் குறைத்தல், சமூக நல்லிணக்கத்தைப் பராமரித்துப் பாதுகாத்தல் ஆகியவை தான் இந்தியா எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவால்கள் ஆகும். இவற்றை உறுதி செய்வதில் தான் கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமான நிறுவனங்கள் கூட்டுறவு சங்கங்கள் தான். ஒட்டுமொத்தப் பொருளாதாரச் சூழலும், சந்தை நிலவரமும் எப்படி இருந்தாலும், உண்மையான கூட்டுறவு மதிப்பு சார்ந்த தொழில்முனையும் முயற்சிகள் ஒருபோதும் தோல்வி அடையாது. திறமையான உறுப்பினர்களால் இயக்கப்படும் கூட்டுறவு அமைப்பால் எத்தகைய அதிசயங்களை நிகழ்த்தமுடியும் என்பதும், அத்தகைய அமைப்பின் மூலம் தான் அனைத்து வகையான கூட்டுறவுச் சுரண்டல்களையும் தடுத்து நிறுத்தி, அனைத்து நிலைகளிலும் வளத்தை ஏற்படுத்த நம்மால் முடியும் என்பதும் உணர்த்தப்பட வேண்டும். வளர்ச்சி அடைந்த மற்றும் தற்சார்பு அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதற்கான பாதை, அதன் மக்கள், கிராமங்கள், ஆறுகள், வேளாண் விளைநிலங்கள், இயற்கை வளங்கள் மற்றும் ஆழமான, வலிமையான கூட்டுறவு அமைப்புகளைக் கடந்துதான் சென்றாக வேண்டும்.

---

**– தினாநாத் தாகூர்**, தேசியத் தலைவர், சஹாக்கர் பிரக்யா அமைப்பு, துணை மேலாண்மை இயக்குநர், தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம்.

# கூட்டுறவுத் தொழில்முனைவுகளை வலுப்படுத்தல்

– சாகர் கிஸான் வட்கர்

ஒரு கூட்டுறவு அமைப்பு வெற்றி பெற அதன் உறுப்பினர்கள், மேலாண்மை மற்றும் தலைமைக்கிடையே உள்ள உறவு துடிப்பாக இருக்கவேண்டும். இந்த இயக்கத்திலுள்ள ஒவ்வொரு பங்குதாரரும் தங்களுடைய கடமைகளை உணர வேண்டும். கூட்டுறவு அமைப்பும் எல்லா உறுப்பினர்களோடும், மேலாண்மைச் செயலாளர்களோடும் தொடர்ந்து இணைப்பில் இருக்கவேண்டும். கூட்டுறவு அமைப்பின் மேம்பாட்டிற்கு இவர்கள் அனைவருக்கும் தொடர் பயிற்சி அளிக்க வேண்டும். கூட்டுறவுத் தொழில்முனைவை வலுப்படுத்த மத்திய அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கூட்டுறவுத் தொழில்முனைவு என்பது ஒரு கூட்டுத் தொழில்முனைவாகும். கூட்டுறவுத் தொழில்முனைவாளர் ஒரு சமூகத் தலைவரைப் போல் செயல்பட்டு, ஒரு வணிக அமைப்பை ஜனநாயக முறையில் வழிநடத்தி அதன் வெற்றிக்கு வழி வகுப்பார். தன்னுடைய நலனைப்பற்றி மட்டும் கருதாமல், கூட்டுறவுத்துறையில் செயல்படும் தலைவர்கள் உறுதியான எண்ணத்துடனும், பங்களிப்புடனும் செயல்பட்டு, புதிய வழிமுறைகளைச் சிந்தித்து, சவால்களை ஏற்கும் திறமை பெற்றவர்களாக இருப்பர். ஒரு கூட்டுறவு அமைப்பின் உறுப்பினர்கள், அது நுகர்வோர் ஒருங்கிணைப்புப் பணியாளர்கள் அல்லது பொருள்கள் சார்ந்த இயக்கமாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் அந்த வணிகத்தின் பங்குதாரர்களாகவும் அத்தொழிலில் உருவாகும் பொருள்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள். கூட்டுறவு இயக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. கூட்டுறவு இயக்கத்தின் மிகப்பெரிய வலிமையே ஜனநாயக ஆளுமைதான். சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஒரு துறையின் முன்னேற்றங்களைப் பயன்படுத்தவும் கூட்டுறவு அமைப்புகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைகின்றன.

**பின்னணி:**

எல்லோரையும் உள்ளடக்கிய சமுதாய மேம்பாட்டை உருவாக்குவதற்கு சமூகப் பொருளாதார முதலீடு அவசியம் என்பதை இந்தியாவின் கூட்டுறவு இயக்கங்கள் அறிந்துள்ளன. கூட்டுறவு இயக்கங்களும், தொழில் முனைவுகளும் இந்தியாவின் சாத்திரத்தில் வளமை மிக்கதாகவும், பலதரப்பட்டதாகவும் நாம் காணலாம். கூட்டுறவுத் தொழில்முனைவு, வேலைவாய்ப்பு உற்பத்தி மற்றும் சொத்துக்களை மேம்படுத்தவும், சமுதாய அளவில் கிடைக்கும் வளங்களை மிக சிறப்பாகப் பயன்படுத்தவும் முயல்கின்றன.

உறுப்பினர்களால் உந்தப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் செயல்படும் இந்தக் கூட்டுறவு அமைப்புகள் களஅளவில் சிறந்த வணிக உணர்வோடும், பிணைப்போடும் சமுதாய ஒட்டுதலோடும், பொருள்களையும், சேவைகளையும் சிறப்பாக வழங்க இயலும். இந்தியாவில் கூட்டுறவு அமைப்புகள் விவசாய நிதி வழங்கலில் 19 சதவிகிதத்தையும், உரங்கள் விநியோகத்தில் 35 சதவிகிதத்தையும், உரங்கள் உற்பத்தியில் 30 சதவிகிதத்தையும், சர்க்கரை உற்பத்தியில் 40 சதவிகிதத்தையும், கோதுமைக் கொள்முதலில் 13 சதவிகிதத்தையும், நெல் கொள்முதலில் 20 சதவிகிதத்தையும் கொண்டுள்ளன (இந்திய தேசியக் கூட்டுறவுச் சங்கம் 2018). கூட்டுறவு இயக்கங்கள் மக்களுக்கும், வாழ்வாதாரத்திற்கும் மிகுந்த பயனளிக்கின்றன என்பதை நன்கு உணர்ந்த இந்தியப் பிரதமர் எல்லோரும் பங்குபெற்று மேம்பாடு அடையும் வகையில் 'கூட்டுறவிலிருந்து மேம்பாடு' என்ற முழக்கத்தோடு கூட்டுறவுக்கான அமைச்சகத்தையும் உருவாக்கியிருக்கிறார். சிறப்பாக, துடிப்பாக மேம்படும் என்றும் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான சட்ட மற்றும் செயல்முறை நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவிலும் மற்றும் உலகளவிலும் ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்களை கணக்கில் கொண்டு இத்துறையில்

புத்தாக்கல் தொழில்முனைவுக்கு அதிக ஊக்கம் அளிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு அமைப்புகளும் இயக்கமும் தொடர்ந்து வெற்றி பெற கூட்டுறவுத் தொழில்முனைவு மிகவும் அவசியம். கூட்டுறவுத் தொழில்முனைவு என்பது பல தனி நபர்கள் தங்களுடைய நிதி மற்றும் பிற வளங்களை ஒன்று திரட்டி உறுப்பினர்களின் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்ய ஒரு புதிய கூட்டுறவு அமைப்பினை உருவாக்குவது அல்லது ஏற்கெனவே உள்ள அமைப்பை சீர்செய்வதாகும். கூட்டுறவுத் தொழில் முனைவின் இலக்கு கூட்டுறவுச் சங்கங்களில் புதுமையான மேலாண்மையையும், புத்தாக்கத்தையும் உருவாக்குவதாகும். கூட்டுறவுச் சங்கத்தின் துடிப்பான ஆட்சி அமைப்புகளும், தேர்ச்சி பெற்ற திறமையான ஊக்கமுள்ள மனித வளங்களும் சிறப்பான நவீன மேலாண்மையும் இருந்தால்தான் மக்கள் ஒன்றிணைந்து பயனடைய முடியும்.

நாடெங்கிலுமுள்ள கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களின் தேவையை நிறைவு செய்து, சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு வணிக மாதிரிகளைக் காணலாம். உலகக் கூட்டுறவு கண்காணிபபு அமைப்பு 2022 (World Cooperative Monitor 2022 (ICA, 2022) கணிப்பின்படி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இணையான கூட்டுறவு வங்கியின் மொத்த வணிக சதவிகிதத்தின் அடிப்படையில் 16 கூட்டுறவு இயக்கங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன

பொருள் உற்பத்தி, சேவைகள் உற்பத்தி, புதுப்பிக்கப்படக்கூடிய எரிசக்தி, சுற்றுலா, போக்குவரத்து, கைத்தறி, கைவினைப்பொருள்கள், சிகிச்சைத்துறை, மாணவர் கல்விக்கூட நுகர்வோர்கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல துறைகளில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க நல்ல வாய்ப்புகள் உள்ளன. கூடுதலாக சமூக நலத்துறையில் பிற தனியார் தொழில்முனைவுகள் மேற்கொள்ள முடியாத துறைகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. உறுப்பினர்களை வணிகப்பணிகளில் ஈடுபடுத்தி, இலாபத்தைவிட நுகர்வோர் நலனே முதன்மையானது என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன.

**கூட்டுறவுத் தொழில்முனைவு:**

கூட்டுறவுத் தொழில்முனைவு என்பது ஒரு கூட்டுத் தொழில்முனைவாகும். கூட்டுறவுத் தொழில்முனைவாளர் ஒரு சமூகத் தலைவர் போல் செயல்பட்டு, ஒரு வணிக அமைப்பை ஜனநாயக முறையில் வழிநடத்தி அதன் வெற்றிக்கு வழி வகுப்பார். தன்னுடைய நலனைப்பற்றி மட்டும் கருதாமல், கூட்டுறவுத்துறையில் செயல்படும் தலைவர்கள் உறுதியான எண்ணத்துடனும், பங்களிப்புடனும் செயல்பட்டு, புதிய வழிமுறைகளைச் சிந்தித்து, சவால்களை ஏற்கும் திறமை பெற்றவர்களாக இருப்பர். ஒரே மாதிரியான தேவைகளும், மனநிலைகளும் கொண்ட மக்கள் ஒன்றாக இணைந்து தங்களுடைய வளங்களை ஒன்று திரட்டி இணைந்து செயல்பட்டு ஒரு துடிப்பான வெற்றிகரமான வணிகத்தைச் செய்வதே கூட்டுறவுத் தொழில்முனைவாகும். ஒரு கூட்டுறவு அமைப்பின் உறுப்பினர்கள், அது நுகர்வோர், பணியாளர்கள் அல்லது பொருள்கள் சார்ந்த இயக்கமாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் அந்த வணிகத்தின் பங்குதாரர்களாகவும் அத்தொழிலில் உருவாகும் பொருள்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள். கூட்டுறவு இயக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. கூட்டுறவு இயக்கத்தின் மிகப்பெரிய வலிமையே ஜனநாயக ஆளுமைதான். கூட்டுறவு இயக்கங்களில் ஏற்படும் இலாப நஷ்டங்கள் உறுப்பினர்களிடையேயும், பங்குதாரர்களிடையேயும் சமமாகப் பகிரப்படுகின்றன. ஒரு போட்டிமிக்க கூட்டுறவுத் தொழில்முனைவை உருவாக்க தனியார்துறை நிறுவனம் அல்லது தனிநபர் முனைவுகளைப் போலவே சிறப்பாகச் செயல்படக்கூடிய வணிகத் திட்டம் அவசியமாகும்.

**வாய்ப்புகளை அறிதல்:**

தொழில்முனைவைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு செயல்படக்கூடிய வணிகத்திட்டம் ஒன்று அவசியம். சமுதாயச் சவால்களையும், ஒரு துறையில் ஏற்படும் மாற்றங்களையும் கூர்ந்து கவனிப்பதன் மூலம் ஒரு கூட்டுறவு இயக்கத்தை உருவாக்க முடியும். சந்தையில் ஏற்படும் இழப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் கூட்டுறவுகள் சிக்கல்களைத் தீர்க்கும் கூட்டுறவுகளாகக்



கருதப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் இருக்கும் நிகழ்வுகளைக் கணித்து, தொழில்முனைவோர் தங்களுடைய அனுபவங்களுக்கேற்ற கூட்டுறவு அமைப்பை உருவாக்கலாம்.

**அமைப்பு வடிவமைப்பு**

துவக்கத் தொழில்முனைவோர்: ஒரு வணிகச் சூழ்நிலை சிறந்த வணிகச் செயல்பாட்டிற்கு உகந்தது என்று அறிந்தபின், அதற்கான அமைப்பு வடிவமைப்பை மேற்கொள்ள வேண்டும். அப்போது கவனிக்கப்படவேண்டியவை: எதற்காக உறுப்பினர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் எது தேவை என்று உணருகிறார்கள் என்பதை மையப்படுத்த வேண்டும்.

**• பொதுவான இலக்குகள்:**

தாங்கள் உருவாக்க நினைக்கும் கூட்டுறவு அமைப்பிற்கான தங்களுடைய பொதுவான இலக்குகள் எவை என்பதை உறுப்பினர்களும், துவக்கத் தொழில்முனைவோர்களும் உறுதி செய்யவேண்டும்.

**•எப்படி பங்குபிரிப்பது:**

கூட்டுறவுச் சங்கத்தில் எப்படிப்பட்ட உறுப்பினர்களைச் சேர்ப்பது, (உதாரணமாக, பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சமுதாய உறுப்பினர்கள் ஆகியோர்), உறுப்பினர்களைத் தரம் பிரிப்பது (உதாரணமாக, பங்குகளை வாங்குவதன் மூலம்) மற்றும் சொத்துக்களைச் சொந்தம் கொண்டாடும் வகையில் (பொதுவாக அல்லது இணைந்து).

**•ஜனநாயக ஆளுமை:**

ஆளுமை அமைப்பு முறை, தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். உதாரணமாக, கூட்டுறவுச் சங்கத்தின் ஆளுமையின் உறுப்பினர்களின் பங்கு கூட்டங்களிலும் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டங்களிலும் வாக்களிப்பது, இயக்குநர்கள் குழுவைத் தேர்ந்தெடுப்பது, இந்த இயக்குநர்கள் குழு வாரம் அல்லது மாதத்திற்கு ஒருமுறை கூடும் போது, எப்படி முடிவுகளை எடுப்பார்கள் என்பதாகும்.

**•மிகுதியைப் பகிர்ந்து கொள்வது:**

கூட்டுறவுச் சங்கச் செயல்பாடுகளால் ஏற்படும் உபரித்தொகையை உறுப்பினர்களிடையே எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதை நிறுவனம் உறுதி செய்யவேண்டும். இதைப் போலவே, வணிகச் செயல்பாடுகளில் உறுப்பினர்கள் ஈடுபடுவது, அதற்கான ஊதியத்தை வழங்குவது, உபரியிலிருந்து சேமித்து வைப்பது மற்றும் அந்தச் சேமிப்பை கூட்டுறவுச் சங்கம் மேலும் வளர முதலீடு செய்வது ஆகியன.

**•உறுப்பினர்கள்:**

யாரெல்லாம் உறுப்பினர்களாகச் சேரலாம், கூட்டுறவுச் சங்கத்தோடு அவருடைய உறவு எப்படிப்பட்டது, உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேரும் வழிமுறைகள், உறுப்பினர்களைத் திரட்டும் வழிமுறைகள் ஆகியன. கூட்டுறவுச் சங்கம், அந்த இயக்கத்தோடு இணைந்து செயல்படும் சமுதாய உறுப்பினர்கள், அமைப்புகள், சுற்றுச்சூழல், பணியாளர்கள், நுகர்வோர் மற்றும் பொருள்கள் சேவைகளை வழங்குபவர்களோடு உறவுகள்,செயல்பாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**•மூலதனத் தேவைகள்:**

மூலதனத்திற்கான நிதி ஆதாரங்கள் எங்கிருந்து பெறப்பட உள்ளது என்பது விளக்கப்பட வேண்டும். உதாரணமாக, உறுப்பினர்களிடமிருந்து பங்குகளாகவோ, கடன்களாகவோ அல்லது பிற கூட்டுறவு அமைப்புகளிடமிருந்தோ, வங்கிகளிடமிருந்தோ கடன் பெறப்படும் அளவு ஆகியவை.

**வணிகச் செயல்பாட்டின் வாய்ப்புகள் மற்றும் வணிகம் செய்யும் முறையின் திட்டங்கள்:**

ஒரு வணிகச் செயல்முறையை வடிவமைப்பதற்கு முன் கூட்டுறவுத் தொழில் முனைவோர் தாங்கள் செய்யப் போகும் வணிகத்தின் வாய்ப்புகள் பற்றி முதலில் ஆய்வு செய்ய வேண்டும். சந்தை சார்ந்த ஒரு ஆய்வை மேற்கொண்டு, சந்தையின் அளவு, அதில் உள்ள வாடிக்கையாளர்களின் விவரங்கள், தாங்கள் செய்யப் போகும் வணிகத்தின் போட்டியாளர்களின் விவரங்கள், நுகர்வோரின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் சந்தைப்போக்கு ஆகியவற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தத் திட்டச் செயல்பாட்டில் பின்வருவனவற்றைக் கவனிக்க வேண்டும்:

- வணிகம் செய்ய வேண்டியதின் அவசியம் மற்றும் இலக்குகள்
- விநியோகச் செயல்முறைத் திட்டம்
- எப்படி வளங்களைத் திரட்டுவது, செலவிடுவது
- என்னென்ன பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்வது அதற்கான சந்தை வருவாய் நிலவரம், பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்யத்

தேவைப்படும் செலவுகள், அதற்கான மூலதனங்கள் ஆகியன.

- மூலதனத்தைத் திரட்டுதல்

**சட்டப்பார்வை மற்றும் கூட்டுறவு அமைப்பை உருவாக்கல்:**

கூட்டுறவை அமைப்பதற்கு முன் தொழில்முனைவுக்கு ஏற்ற சட்ட அமைப்பைத் தேர்ந்தெடுப்பது அவசியம். இந்தத் தொழில்முனைவைத் துவக்க நினைப்பவர்கள் மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கமாக இருந்தால் மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையும், பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கமாக இருந்தால் மத்திய அரசின் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையும் அனுகலாம்.

**மேலாண்மை மற்றும் முன்னெடுத்தல்:**

உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய சமுதாய மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் சிறப்பாக நிறைவு செய்ய அதனுடைய எண்ணங்களுக்கும், இலக்குகளுக்கும் நம்பகமாக இருக்கவும், வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், ஒரு தொழில்முனைவுக்கு சிறந்த தலைவர்கள் அல்லது இயக்குநர்கள் குழு இருப்பதையும் ஒரு கூட்டுறவு அமைப்பு உறுதி செய்யவேண்டும். ஒரு கூட்டுறவு அமைப்பு வெற்றி பெற வேண்டுமானால் உறுப்பினர்கள், மேலாண்மை மற்றும் தலைமைப் பதவியிலிருப்பவர் களுக்கிடையே சுமுகமான, துடிப்பான உறவு இருக்கவேண்டும். அவர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தில் தடை ஏதும் இருக்கக்கூடாது. இயக்குநர்கள் குழு, கூட்டுறவு அமைப்பின் நிதி நிலைமைகளையும், முதலீடுகளையும், செயல்பாடுகளையும் முனைப்புடன் கண்காணித்து தக்க நிதிசார் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும். சட்டப்படியான பதிவேடுகளையும், தரவுகளையும் முறையாக வைத்திருந்து வணிக வாய்ப்புகளை எப்போதும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

**உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு, தலைவர்கள் மற்றும் மேலாண்மைக்கான பயிற்சி மற்றும் கருத்தாளர்களுக்கான தகவல்:**

கூட்டுறவு இயக்கத்தில் விழிப்புணர்வும், பயிற்சியும் மிகவும் தேவையானவை. கூட்டுறவு இயக்கம் வளர, கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள், மேலாண்மை அலுவலர்கள் மற்றும் தலைவர்களுக்கு தொடர் பயிற்சி அவசியம்.

**கூட்டுறவுத் தொழில்முனைவைப் போற்றுவதில் அரசின் பங்கு:**

இந்தியாவில் கூட்டுறவுத் தொழில்முனைவை வலுப்படுத்த மத்திய அரசு பல திட்டங்களை வகுத்து, சேவைகளை வழங்கி வருகிறது. பெரிய அளவிலான கூட்டுறவுத் தொழில்முனைவுகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வழங்கப்படும் சேவைகளை அட்டவணையில் காணலாம்.

கூட்டுறவுத் தொழில்முனைவு என்பது அதிகம் பயன்படுத்தப்படாத வளங்களையும், சந்தை வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, பல தொழில்முனைவுகள் தொடர்ந்து மேற்கொள்ளும் புத்தாக்க முயற்சிகளை வணிகமயமாக்குதலாகும். தனித்தனியான அமைப்புகளும், சமுதாயங்களும் ஒரு வலைத்தொடரில் இணைந்து செயல்படும் போது, பொருள் மற்றும் சேவையின் மதிப்பைத் தொடர்ந்து கூட்டுவதில்



இருக்கும் கூட்டப்பட்ட மதிப்பை தனித்தனியாகப் பகிர்ந்து கொள்வதில் அல்ல. இப்படிப்பட்ட கூட்டு அமைப்பில் உறுப்பினர்களிடையே அதிக நம்பிக்கை ஏற்படும். ஏனெனில் கிடைக்கும் உத்திகள் பொதுவானவையாகக் கருதப்பட்டு, எல்லோருடைய திறனும் அதிகரிக்கும்.

இந்திய அரசு கூட்டுறவு இயக்கத்திற்கு அளிக்கும் உதவிகளின் முக்கியமான நோக்கம், வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், தன்னிறைவை உருவாக்குதல் மற்றும் ஏழ்மையையும், பசிப்பிணியையும் ஒழித்தல் ஆகும். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு அமைச்சர் திரு. அமித்‘ கூறியது போல நியாயமான, சமத்துவமான, சமூகப் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க வேண்டும்.

கூட்டுறவுத் தொழில் முனைவுகளில் ஈடுபட்டிருப்பவர் களிடையே தோன்றிவரும் பிரச்சினைகளை விவாதித்து தீர்வு களைக் காணவும், எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளவும், வணிகக் கூட்டுமுயற்சிகளை மேற்கொள்ளவும், ஆண், பெண் இளைஞர்கள் கூட்டுறவுத்துறையில் ஈடுபடவும், ஒரு பொதுத்தளத்தை உருவாக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் பொருள்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்யும் போது அவர்களுக்குக் கூட்டுறவுப் பண்பையும், அவற்றின் மதிப்புகளையும் கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

| எண் | துறை | அமைச்சகம் | செயல்படும் திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | பால்வளம் | மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளம் | கால்நடை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி பால்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்புகளுக்கான தேசிய கால்நடை இயக்கம் |
| | மீன்வளம், | | மீன் மற்றும் நீர்; இனங்கள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி<br>பிரதம மந்திரி மீன்வளத் திட்டம் |
| 2 | கைத்தறி மற்றும் கைவினைப்பொருள்கள் | துணி | • தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம்<br>• கைத்தறி நெசவாளர்களுக்கான முழுமையான நலத் திட்டம்<br>• அம்பேத்கர் கைவினைஞர்கள் மேம்பாட்டுத் திட்டம்<br>• கைத்தறித் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம்<br>• பட்டுத் தொழில் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த திட்டம்<br>• பெரிய ஒருங்கிணைந்த துணி உற்பத்திப் பகுதி மற்றும் ஆடைகள் தயாரிப்புப் பூங்கா<br>• ஒருங்கிணைந்த கம்பளி மேம்பாட்டுத் திட்டம் விசைத்தறித் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம்<br>• வடகிழக்குத் துணி மேம்பாட்டுத் திட்டம் தேசிய கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுத் திட்டம்<br>கைவினைப் பொருள்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் கைவினைப்பொருள்கள் பெரிய தொகுப்பு |
| 3 | கைத்தறி மற்றும் கைவினைப்பொருள்கள | குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவு அமைச்சகம் | பாரம்பரியத் தொழில்கள் புதுப்பிப்பு நிதித்திட்டம்<br>சூரிய எரிசக்தி கைராட்டினம் இயக்கம் ; காதி கிராமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம் |
| | | சிறுபான்மையினர் நல அமைச்சகம் | பாரம்பரியக் கலைகள், கைத்தொழில்கள் மேம்பாட்டிற்கான செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் |

| எண் | துறை | அமைச்சகம் | செயல்படும் திட்டங்கள் |
|---|---|---|---|
| 4 | மக்கள் நல்வாழ்வு | ஆயுஷ் | ஆயுஷ்மான் உடல் ஆரோக்கியத்திற்கான மத்திய அரசுத் திட்டம்.<br>நிலைத்து நிற்கும் மூலிகைகள் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நிலைத்து நிற்கும் மூலிகைகள் மேலாண்மைக்கான மத்திய அரசுத் திட்டம்.<br>தேசிய ஆயுஷ் இயக்கம். |
| | | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம் | பிரதம மந்திரி நலமான இந்தியா மருத்துவ உள்கட்டமைப்புத் திட்டம்<br>நலமான இந்தியா தேசிய எண்ம இயக்கம்<br>பிரதம மந்திரி மக்கள் நல்வாழ்வுத் திட்டம் |
| 5 | சுற்றுலா மற்றும் போக்குவரத்து | விமானப் போக்குவரத்து | கிருஷி உடான் திட்டம் |
| | | சுற்றுலா | புனித, ஆன்மீக, பாரம்பரியச் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் |
| | | கனரக தொழில்துறை மற்றும் பொதுத்துறை | இருவகை மற்றும் மின்சார வண்டிகள் இந்தியாவில் உற்பத்தி மற்றும் ஏற்புத் திட்டம் |
| | | பழங்குடியின மக்கள் நலன் | பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரி பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் |
| | | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் | பட்டியலினப் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம் |
| 6 | பெண்கள், பட்டியலினப் பழங்குடி மக்கள் மற்றும் பழங்குடி மக்கள் | | • பிரதம மந்திரி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம்<br>• பழங்குடி மக்களின் பொருளாதார அதிகாரமளித்தல் திட்டம்<br>• விளிம்புநிலை மக்கள் வாழ்வாதாரம் மற்றும் தொழில்முனைவு ஆதரவுத் திட்டம் |
| | | சிறுபான்மையினர் நலம் | சிறுபான்மையினர் மகளிர் தலைமை மேம்பாட்டுத் திட்டம் புதுவெளிச்சம் திட்டம் |

| எண் | துறை | அமைச்சகம் | செயல்படும் திட்டங்கள் |
|---|---|---|---|
| 7 | சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்த் தன்மை | சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் | பசுமை இந்தியா தேசிய இயக்கம்<br>தேசிய கடலோர மேம்பாட்டுத் திட்டம் |
| | | புதிய மற்றும் புதுபிக்கப்படக்கூடிய எரிசக்தி | • உயிரி எரிசக்தித் திட்டம் உயிரி எரிசக்தி (தொகுப்பில் அல்லாத)<br>• உயிரி எரிசக்தித் திட்டம் உயிரி வாயுத் திட்டம் (தொகுப்பில் அல்லாத)<br>• காற்று மற்றும் பிற புதுப்பிக்கப்படக்கூடிய எரிசக்தித் திட்டம்<br>சூரிய வெப்ப எரிசக்தி: சூரிய வெப்ப மின்சாரம் (தொகுப்பில்), சூரிய வெப்ப மின்சாரம் (தொகுப்பில் அல்லாத) |
| 8 | உற்பத்தியாளர்கள் / பொருள்கள் | உணவு பதனீட்டு தொழில்கள் | • உணவுப் பதனீடு குறுதொழில்கள் மேம்பாட்டுத் திட்டம்<br>பிரதம மந்திரி உணவு கடல் பொருள்கள் பதனீடு மேம்பாடு மற்றும் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் |
| | | வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் | • தேசிய தேனீ வளர்ப்புத் திட்டம்<br>• ஒருங்கிணைந்த தோட்டப் பொருள்கள் மேம்பாட்டுத் திட்டம்<br>• வடகிழக்கு மாநிலங்களுக்கான இயற்கை விவசாய பொருள்கள் மதிப்புக்கூட்டு வலைத் தொடர் மேம்பாட்டு இயக்கம் |

– **சாகர் கிஸான் வட்கர்,** ஆலோசகர் தேசியக் கூட்டுறவுச் சங்கம், புதுடெல்லி.



திட்டம் மாத இதழை
தவறாமல் படியுங்கள்
இந்தியா 2023 இயர்புக் இப்போது விற்பனையில்.

# உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

– இஷிதா ஜி.திரிபாதி
–நிஷிதா மான்

உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாடுகளில் பலதரப்பட்டவை. அவை நாடெங்கிலும் பல துறைகளில் பலவகையாகச் செயல்பட்டு வருவதால் அவை அனைத்திற்கும் ஒரே விதமான அணுகுமுறை வெற்றி பெறாது. இப்படிப்பட்ட உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த ஒருங்கிணைந்த பார்வையும், விழிப்புணர்வும், பயிற்சியும், வழிகாட்டுதலும், தொழில்நுட்ப மற்றும் எண்ம மேம்பாடுகளும் அவசியம்.

உலகளவில் பெரிய ஜனநாயகமாக விளங்கும் இந்தியாவில் அடித்தளக் களமட்டத்தில் ஜனநாயகத்தை கூட்டுறவு இயக்கம் பிரதிபலிக்கிறது. நூறாண்டுகளுக்கு மேலாகவே இந்தியப் பொருளாதாரத்தில் கூட்டுறவுகள் இயங்கி வந்துள்ளன. தற்போது இந்தியாவில் 21 கோடி உறுப்பினர்களைக் கொண்ட 8.54 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இக்கூட்டுறவுகளின் தோற்றமும், வளர்ச்சியும் மாநிலங்களுக்கிடையே மாறுபடுகின்றன. அவைகளின் மேம்பாட்டிற்கு ஒவ்வொரு மாநிலமும் மேற்கொள்ளும் பார்வையும், அணுகுமுறையும் இதற்குக் காரணமாகும். இதனால், மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா போன்ற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட கடன் வழங்கா கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம், பீஹார், ஒடிசா, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் இவை குறைவாகவும் உள்ளன.

கூட்டுறவு அமைப்புகள் வெற்றி பெற அவை எப்படி துவக்கப்பட்டு செயல்படுகின்றன என்பதும், அவற்றில் உறுப்பினர்கள் தாமே முன்வந்து ஈடுபடுவது, எல்லோருக்கும் சமமான வாய்ப்புகள், அறிவார்ந்த மேலாண்மை, இடைத்தரகர்கள் இல்லாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கத்தில் வரும் இலாபம் அதிகளவில் உறுப்பினர்களுக்குக் கிடைப்பது ஆகியன சார்ந்தனவாக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் கடன் வழங்கா கூட்டுறவு சங்கங்கள் நிலைத்து வளர்ந்து மேம்படவும், போட்டிமிக்கதாக விளங்கவும் எந்த வகையான வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி இந்தக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

### இந்தியாவில் கூட்டுறவு அமைப்பு:

இந்தியாவில் கூட்டுறவு அமைப்புகள் செயல்படுவதற்கான சட்ட அமைப்பு, கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1912, பரஸ்பர கூட்டுறவு சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 2022 ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. நம் நாட்டில் இரண்டு வகையான கூட்டுறவு அமைப்புகள் உள்ளன மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள். ஒரு மாநிலத்திற்குள் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அரசுகளின் கீழும், பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய அரசின் கீழும் செயல்படுகின்றன. பொதுவாக இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயம், பால்வளம், வீட்டுவசதி மற்றும் கடன் மற்றும் வங்கி சார்ந்தவைகளாக பெரும்பாலும் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக செயல்படுகின்றன.

மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் பீஹார் மாநிலங்களில் சுய உதவிக்குழுக்கள் பிரதானமாக உள்ளன. இவை முறைசாரா வகையில் செயல்பட்டாலும், அடிப்படையில் கூட்டுறவு மனப்பான்மையிலேயே செயல் படுகின்றன. அவை, சிறிய அளவில் குறிப்பிட்ட செயல்பாட்டிற்காக பெரும்பாலும் பின்தங்கியுள்ள மகளிருக்காகச் செயல்படுகின்றன. ஆனால், பெரிய அளவிலான கூட்டுறவு சங்கங்கள் வணிக ரீதியிலும் அதிகப் பொருள்களின் அடிப்படையிலும் செயல்படுகின்றன.

**உலகமயமாக்கல்:**

உலகமயமாக்கலால் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கருதப்பட்டது. ஆனால், இதனைப் பொய்ப்பிக்கும் விதத்தில் அமுல், தோட்டக்கலை பொருட்கள் உற்பத்தியாளர்கள் விற்பனை மற்றும் பதனீட்டு சங்கம், இந்திய விவசாயிகள் உர கூட்டுறவுச் சங்கம், ஒடிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு, கர்நாடகா பால் உற்பத்தியாளர்கள் சங்கக் கூட்டமைப்பு, கேரள கூட்டுறவு பால் விநியோக சங்கக் கூட்டமைப்பு ஆகியவை சிறந்து விளங்குகின்றன. இது போன்ற அமைப்புகளின் வெற்றிக்கு முக்கியமான காரணம் அவை பல மட்டங்களில் செயல்பட்டு, பொருள் வழங்கு சங்கிலித் தொடரை வலுவாக வைத்திருப்பதுதான். அது அமுலாக இருக்கட்டும் (பெட்டி 1 காண்க) அல்லது ஒடிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பாக இருக்கட்டும் அல்லது இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவுச் சங்கமாக இருக்கட்டும் அவை மக்களுக்கு தேவைப்படும் பொருள்களை அடையாளம் கண்டு, பொருள்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து முறையாக சேகரித்து பதப்படுத்தி, நுகர்வோர் வீடுவரை சென்றடைய பொருள் வழங்கு சங்கிலி அமைப்பை வலுவாக வைத்திருப்பதுதான்.

ஒடிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1962ன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஒடிசா மாநிலக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு, பால் உற்பத்தியை ஊக்குவித்தல், பால் வளத்தைப் பெருக்குதல், கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் பால் சார்ந்த பொருள்களை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இந்தக் கூட்டமைப்பின் முக்கியமான நோக்கம், இந்த மாநிலத்தில் உள்ள கிராமப்புற வேளாண் சமூகத்தினரின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகும். பால் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் பயனளிக்கும் வகையில் சிறப்பாக பொருள்கள் வழங்கு சங்கிலித் தொடரை அமைத்திருப்பதே ஒரிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் வலிமையாகும். அமுல் இயக்கத்தைப் போலவே, இந்தக் கூட்டுறவு அமைப்பும் மூன்றடுக்குகளில் செயல்படுகிறது. முதல் அடுக்காக கிராமக் கூட்டுறவு வங்கி, இந்த கிராமத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் தாங்களே இசைந்து, இணைந்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு வழங்குவார்கள். இது இரண்டாம் அடுக்காகும். இந்த அமைப்பில் பாலை பரிசோதிப்பவர்கள் பிற பணியாளர்கள் இருப்பார்கள். இந்த இரண்டாம் கட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சேகரிக்கப்பட்ட பாலை சுத்திகரிப்பு தொழிற்சாலைக்கு அனுப்புகிறது. இந்தச் சங்கங்கள், கிராமப்புறச் சங்கங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங்களையும் கூட வழங்குகின்றன. மூன்றாம் கட்டமாக பால் உற்பத்தியாளர்கள் சங்கக் கூட்டமைப்பு சேகரிக்கப்பட்ட பாலைப் பதப்படுத்தி, பெட்டிகளில் அடைத்து, பால் மற்றும் பிற பால் சார்ந்த பொருள்களை விற்பனை செய்கிறது. இந்தப் பொருள்கள் விற்பனையாகும் போது. வாரம் தோறும் பால் வழங்கிய விவசாயிகளுக்கு கிராமப்புற பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவர்களுக்கான நிதி வழங்கப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பில் மாநிலத்திலுள்ள எல்லா இரண்டாம் கட்ட பால் உற்பத்திச் சங்கங்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். மாநில அரசும் இதில் பங்கு கொள்கிறது. இந்தக் கூட்டமைப்பால் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த பொருள்கள் மாநிலமெங்கும் விநியோகிக்கப்படுகின்றன. சிறுநகரங்களிலிருந்து துவங்கி பெரு நகரங்கள் வரை இவை வழங்கப்படுகின்றன. 1980களில் ஒரிசா மாநிலத்தில் பெரிய அளவிலான பால் வளத்துறை இல்லாத காலகட்டத்தில் அமுலின் பெரு வெற்றியைக் கருத்தில் கொண்டு ஒரிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு துவக்கப்பட்டது. அப்போது, உபரியாக பால் உள்ள விவசாயிகள் அதைப் பதப்படுத்த முடியாமலும், விற்பனை செய்ய முடியாமலும் இருப்பதைப் பயன்படுத்தி அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது. இதனால், அவர்களுடைய வருமானம் உயர்ந்து அவர்கள் விற்ற பாலுக்கான பணம் வாரம் தோறும் கிடைத்தது. கட்டக் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினரான திரு.அணில் முஹாபாத்ரா ஒரிசா மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புக்கு 30 ஆண்டுகளாக பாலை வழங்கி வருகிறார். சிறந்த பாலை அதிக அளவில் உற்பத்தி செய்தால் நல்ல விலை கிடைப்பதால் இவர் தன்னுடைய கால்நடைகளைச் சிறப்பாகப் பராமரித்து, நல்ல உணவையும் வழங்கினர். அடிக்கடி கால்நடை மருத்துவர் இக்கால்நடைகளை பரிசோதிப்பதால் விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். பாலின் தேவை தொடர்ந்து இருப்பதாலும், நிலையான வருமானம் இருப்பதாலும் அருகிலுள்ள கிராம மக்கள் கால்நடைகளை வளர்க்கத் துவங்கியுள்ளனர்.

இப்படிப்பட்ட அமைப்புகள் வெற்றி பெறுவதற்கான பிற காரணங்கள் அவர்கள் கையாளும் பொருள்களின் எண்ணிக்கை அவற்றின் உற்பத்தியிலேயே சிறந்த தொழில்நுட்பத்தையும், இடுபொருள்களையும் பயன்படுத்துதல், சிறந்த வணிக அளவிலும், பன்னாட்டு அளவிலும் விநியோகம் செய்தல் ஆகியவையாகும். சந்தைக்கேற்றவாறு திறமையாகச் செயல்பட்டால்தான் வெற்றி பெறமுடியும் என்பதை இந்த அமைப்புகள் விளக்குகின்றன. இந்தியப் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் துறையாக உள்ள உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் பெருமளவில் வெற்றியடைய முடியும் என்பதற்கு உதாரணமாக இந்த வேளாண் பொருள்கள் மற்றும் கால்நடைப் பொருள்கள் சார்ந்த சங்கங்களின் இமாலய வெற்றியைக் குறிப்பிடலாம்.

**இனிவரும் காலங்களில்:**

உற்பத்திக் கூட்டுறவு சங்கங்கள் செயல்பாடுகளில் பலதரப்பட்டவை. அவை நாடெங்கிலும் பல துறைகளில் பலவகையாகச் செயல்பட்டு வருவதால் அவை எல்லாவற்றிற்கும் ஒரே விதமான அணுகுமுறை வெற்றி பெறாது. சில துறைகளில் தனித்துவமான அணுகுமுறை தேவைப்படும். இந்த வகையில் பிரதமர் ஜனவரி 2023இல் ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டார். தற்போது உடல் நலம் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய ஆர்வம் பெருகி வரும் நிலையில் இயற்கை வேளாண் பொருள்களுக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அதனை ஊக்குவிக்க வேளாண் பொருள்களுக்கான தேசிய அளவிலான கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். இப்படிப்பட்ட உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த ஒருங்கிணைந்த பார்வையும், விழிப்புணர்வும், பயிற்சியும், வழிகாட்டுதலும், தொழில்நுட்பம் மற்றும் எண்ம மேம்பாடுகளும் அவசியம்.

**1. ஒருங்கிணைப்பு**

இந்திய அரசின் குறு, சிறு, நடுத்தரத் தொழில் அமைச்சகம் கூட்டுறவுச் சங்கங்களை குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவுகளாக உதயம் எண்ம தளத்தில் பதிவு செய்ய அனுமதிக்கிறது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல நல்ல வழிகள் கிடைக்கின்றன. உதயம் தளத் தரவுகளின்படி, இந்தத் தளத்தில் 16000க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவுகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் தகவல்களை மேலும் ஆராயும் போது இவற்றில் பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்கள் உற்பத்தி சங்கங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்து பதனிட்டு, பெட்டிகளில் அடைத்து, சேமிப்புக் கிடங்குகளில் வைத்து விநியோகம் செய்பவர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறு, சிறு, நடுத்தரத் தொழில்முனைவுகளுக்கு பகுதி சார்ந்த கூட்டுத்தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள் மிகுந்த பலனை அளித்துள்ளன.

இந்தத் திட்டங்களில் பொதுச் சேவை மையங்கள், விளம்பர மையங்கள், பதனீட்டு மையங்கள், கழிவுகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், சோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு மையங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், திறன் வளர்ப்புகள் ஆகியவற்றிற்கு நிதி அளிக்கின்றன. உள்நாட்டுப் பொருள் கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம் மற்றும் பன்னாட்டுக் கூட்டுறவுத் திட்டங்கள் மூலமாகவும், குறு, சிறு, நடுத்தரத் தொழில்முனைவுகளுக்கு விநியோகம்சார் தொடர்புகள் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட உதவிகளால் பொருள்களை உற்பத்தி செய்து பதப்படுத்தும் துறைகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகப்படியான தரமான பொருள்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவுகளுக்கு உதயம் தளம் என்பது, கிட்டத்தட்ட ‘உங்களுடைய நுகர்வோரை அறிந்துகொள்ளுங்கள்’ என்பதற்கு சமமானதாகும். இந்த வகையில், அரசு மற்றும் பிற அமைப்புகள் வேறு எந்தச் சான்றிதழ்களையும் கேட்காமல் உதயம் சான்றிதழின் அடிப்படையில் திட்டப் பலன்களை வழங்குவர். அரசின் முழுமையான அணுகுமுறை அடிப்படையில் இது அமைகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறு, சிறு, நடுத்தரத்தொழில் முனைவுகளுக்கான அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

**2. விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்:**

இன்றையத் தேவை, கூட்டுறவுத்துறை ஒரு சிறந்த பணி வாய்ப்பு என்பதை மாணவர்களுக்கு உணர்த்துவதே ஆகும். இதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். மக்களின் திறன் மேம்பாட்டை வளர்க்க நாடெங்கிலும் கூட்டுறவு

இயக்கம் சார்ந்த விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களின் திறன்களை மேம்படுத்த பல்வேறு அமைச்சகங்கள் செயல்படுத்தும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களிலும் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சிக் கழகங்களிலும் கூட்டுறவுத்துறையை இணைக்கலாம். தொகுப்பு அளவுத் திட்டங்களில் செயல்படுத்தப்படும் மென்திறன் பயிற்சிகளை கூட்டுறவுத் துறையினருக்கு வழங்கலாம்.

சிறிய அளவில் செயல்படும் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளவர்களை அதே துறையில் உள்ள நாட்டில் சிறப்பாகச் செயல்படும் பிற பெரிய அளவிலான பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தால் பெரிய அமைப்புகளை அவர்கள் பின்பற்றுவதற்கு வசதியாக இருக்கும். பெரிய கூட்டுறவு நிறுவனங்கள், சிறிய கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழிகாட்டியாகவும் செயல்படலாம். உதாரணமாக, வழிகாட்டுதல் திட்டங்களின் அடிப்படையில் பெரிய கூட்டுறவு அமைப்புகள் சிறிய கூட்டுறவு சங்கங்களோடு பங்காளிகளாகவும், கூட்டுச் செயல்பாட்டாளர்களாகவும், ஒத்துழைப்பாளர்களாகவும் செயல்படலாம்.

இந்த வகையில் இந்திய அரசு பின்வரும் அமைப்புகளின் உருவாக்கலை அறிவித்துள்ளது.

(i) தேசிய அளவிலான பல மாநிலங்களில் செயல்படும் விதைகள் கூட்டுறவுச் சங்கங்கள். இவை தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களாகச் செயல்பட்டு




விதைகள் உற்பத்தி, கொள்முதல், பதனிடுதல், விளம்பரப்படுத்துதல், பெட்டிகளில் அடைத்தல், கிடங்குகளில் சேமித்தல், விற்பனை மற்றும் விநியோகத்தை மேற்கொள்ளும். இவற்றில் விதைகள், துடிப்பான ஆய்வுகள், மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும்.

(ii) இயற்கை வேளாண் பொருள்களைக் கொள்முதல் செய்து ஒன்று சேர்த்தல், சான்றிதழ் வழங்குதல், ஆய்வு செய்தல், கிடங்குகளில் வைத்தல், பதனீடு செய்தல், பெட்டிகளில் அடைத்தல், விளம்பரம் செய்தல், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல், வியாபாரம் செய்தல் ஆகியவற்றிற்கான பல மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவு இயற்கை வேளாண் பொருள்கள் சங்கத்தை அமைத்தல். அனைத்து மட்டங்களிலும் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள், அந்தந்தத் துறையில் உள்ள உயர்மட்ட சங்கங்களில் இணைந்து இந்தத் துறையில் உள்ள மதிப்புகூட்டுத் தொடர்வளையத்தின் பயன்களைப் பெறலாம்.

(iii) தொழில்நுட்பம் மற்றும் மின்மயமாக்கல்: கூட்டுறவுத் துறையில் தொழில்நுட்பம், உற்பத்தித்திறன் மற்றும் வணிக அணுகுமுறைகள் மேம்படுத்தப்படாமலும், மின்மயமாக்கல் இல்லாமலும் இருந்தால் கூட்டுறவு இயக்கம், போட்டித்தன்மை இழந்து தேவையற்றதாகிவிடும். இதனை எதிர்கொள்ள நேரடி மானியங்கள் முதல் பல்வேறு கடன் வசதிகள் வரை பல உதவித் திட்டங்களை அரசு வழங்கி வருகிறது. பெரிய அளவிலான உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படும் கூட்டுறவுகளுக்கு தொகுப்புகளில் இடமளித்து அவர்களுக்கு உதவி செய்யலாம்.

**முடிவாக:**

வேகமாக வளரும் இந்திய பொருளாதாரச் சூழலில் கூட்டுறவுகளின் பங்களிப்பு குறைவாகக் காணப்பட்டாலும் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைத்து நிற்கும் வளர்ச்சியை அளிப்பதில் அவர்களின் பங்கு அளப்பரியது. இந்தியாவின் பிரதமரின், 'கூட்டுறவோடு இணைந்த மேம்பாடு' என்ற அறைகூவலின் அடிப்படையில் கூட்டுறவு இயக்கத்தினால் எல்லோரையும் உள்ளடக்கிய மேம்பாடு நிகழ்கிறது. புதிய கூட்டுறவு அமைச்சகத்தின் திட்டங்களால் கூட்டுறவுத் துறைக்குள்ள இடர்பாடுகள் களையப்பட்டு, ஏற்கெனவே உள்ள கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாட்டிற்கு வேகம் கிடைக்கும்.

மாநில அளவுகளில் செயல்படும் கூட்டுறவு அமைப்புகள் துறை ரீதியாக ஒன்றிணைந்து மாநிலக் கூட்டுறவு அமைப்புகளாக உயர்ந்து நிலைத்து நிற்கும் மேம்பாட்டை உருவாக்க நன்கு திட்டமிடப்பட்ட செயல்திட்டம் அவசியம்.

---

**– டாக்டர். இஷிதா ஜி.திரிபாதி,** கூடுதல் மேம்பாட்டு ஆணையர், குறு, சிறு, நடுத்தரத் தொழில் அமைச்சகம்,

**– நிஷிதா மான்,** துணை இயக்குநர், குறு, சிறு, நடுத்தரத் தொழில் அமைச்சகம்,

# கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தாக்கமும் தொழில்நுட்பமும்

– ஹரிகிருஷ்ண மிஸ்ரா

புத்தாக்கம், தொழில்முனைதல் ஆகியவற்றை நிர்வகிப்பதில் தொழில்நுட்பத்தின் பங்கு உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆகச் சிறந்த வர்த்தக நடைமுறைகள் டிஜிட்டல் மூலம் செயல்படக் கூடியவையாகக் கிடைக்கின்றன. தொழில்நுட்பம், வேகமாக மாறிவரும் இன்றைய வர்த்தகச் சூழலுக்கு ஏற்ப புத்தாக்கம், தொழில்முனைதல் ஆகியவற்றின் பலன்களை அதிகரிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும். திரள் நிறுவனமாகச் செயல்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் நவீனத் தொழில்நுட்பப் புத்தாக்கப் புரட்சியின் ஓர் அங்கமாக இருந்து தங்களது உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதற்கான ஆதரவுக் கொள்கைகளின் பலன்களைக் கூடுதலாகப் பெறுவதற்கு முன்வர வேண்டும்.

சமூகத்தில் வெவ்வேறு வடிவங்களில் வர்த்தக நிறுவனங்கள் பல இருக்கும் பொழுது கூட்டுறவுச் சங்கத்தை வர்த்தக நிறுவன மாதிரியில் வளர்த்தெடுக்க வேண்டுமா என்று அடிக்கடி விவாதிக்கப்படுகின்றது. உள்ளூர் வர்த்தக ஆளுகை, சந்தைப்படுத்துதலில் உள்ள ஆபத்துக் காரணிகள் மற்றும் வாழ்வாதாரத்தில் ஏற்படும் சவால்கள் ஆகியவற்றை கூட்டு மனோபாவ அணுகுமுறையில் ஒரு கூட்டுறவுச் சங்கமானது எதிர்கொள்கின்றது. இதன் உள்ளார்ந்த தத்துவம் என்னவெனில் இத்தகைய தனிநபர்கள் ஒரே விதமான பின்னணியில் ஒன்று சேரும் போது அவர்கள் சந்தையில் போட்டியாளராக நீடித்துச் செயல்படுவதற்காக தங்களது மூலஆதாரங்களை ஒன்று திரட்டுகின்றனர் என்பதே ஆகும். சர்வதேசக் கூட்டுறவுச் சங்கத்திற்கான கூட்டணி அமைப்பானது (The International Cooperative Alliance - ICA) கூட்டுறவுச் சங்கம் என்பதை அதன்




உறுப்பினர்களே உருவாக்குகின்ற, கட்டுப்படுத்துகின்ற மற்றும் நிர்வகிக்கின்ற ஒரு நிறுவனம் என்று வரையறை செய்கின்றது. இந்த உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தன்னார்வமாகச் சேருகின்றனர். பொருளாதார நடவடிக்கைகளின் மூலமாக கூட்டு உறுப்பினர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு முனைகின்ற ஒரு நிறுவனமாக இது உள்ளது. அதுமட்டுமல்லாமல் உறுப்பினர்களின் சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளைத் தக்கவைக்கவும் செய்கிறது. கூட்டுறவுச்சங்க வடிவிலான நிறுவனங்கள் போன்ற திரள்சார் அமைப்புகளுக்கும் ஏனைய வர்த்தக அமைப்புகளுக்கும் இடையில் உள்ள மிகமுக்கியமான அடிப்படை வேறுபாடுகள் இங்கே தரப்படுகின்றன. அவை:

• கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமானவர்களாகவும் நிதி உதவி செய்பவர்களாகவும் இருக்கின்றவர்கள் அதை பயன்படுத்துபவர்களே ஆவர்.

• கூட்டுறவுச் சங்கத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்கள் அதை பயன்படுத்துபவர்களே ஆவர்.

• கூட்டுறவுச் சங்கங்களின் பலன்களை தங்களுடைய பயன்பாடு மற்றும் பங்களிப்பின் அடிப்படையில் அவற்றின் உறுப்பினர்களே பங்கீடு செய்து கொள்கின்றனர்.

சில்லறை விற்பனை, வீட்டு வசதி, பொதுப்பயன்பாட்டு வசதிகள் மற்றும் கைவினைக் கலைகள் போன்ற பொருளாதாரப் பிரிவுகளில் கூட்டுறவு வடிவிலான நிறுவனங்கள் செயல்படுகின்றன. அதிலும் குறிப்பாக, பண்ணைப் பிரிவில் இவை சிறப்பாகச் செயல்படுகின்றன.

**கூட்டுறவுச் சங்கங்களின் பரவலும் அவற்றின் வீச்சும்**

சர்வதேச அளவில் உலக மக்கள்தொகையில் 12 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மூன்று மில்லியன் கூட்டுறவுச் சங்கங்களில் ஏதாவது ஒன்றில் உறுப்பினர்களாக உள்ளனர். உலகக் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காணிப்பு 2022 (World Cooperative Monitor - 2022) அறிக்கையின்படி உலகில் உள்ள மிகப்பெரிய 300 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பரஸ்பர அமைப்புகளின் மொத்த ஆண்டுத் தொழில்தொகை 2146 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். கூட்டுறவுச் சங்கங்கள் உலகம் முழுவதிலும் 280 மில்லியன் நபர்களுக்கு வேலைகளை அல்லது வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. இது உலகில் வேலையில் உள்ள மக்கள்தொகையில் 10 சதவிகிதம் ஆகும். சர்வதேச கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டணியின் அறிக்கையின்படி உலகம் முழுவதும் உள்ள மூன்று மில்லியன் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு பில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர். சர்வதேசத் தொழிலாளர் கழகத்தின் (International Labour Organization - ILO) அறிக்கையின்படி உலகளாவிய வேளாண் விளைபொருள்களில் 50 சதவிகிதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்கப்படுகின்றன.

வளரும் நாடுகளில் கூட்டுறவு என்பது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே ஏற்படுகின்றது. வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் ஆகியோரை முறைசார்ந்தும் முறைசாரா நடைமுறைகள் வாயிலாகவும் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற இத்தகைய குழுக்கள் உற்பத்தி சார்ந்த உள்ளீட்டுப் பொருள்கள், நடைமுறைகளை நிர்வகித்தல் மற்றும் சொந்தமாக கைக்கொள்ளுதல், உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைகளில் ஈடுபடுதல் மற்றும் தங்களைத் தாங்களே ஆளுகைக்கு உட்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளன. நகரப் பகுதிகளிலும் கூட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் சார்ந்தவையாக இருந்தாலும் கூட மோன்ட்ராகன், இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவுச் சங்கம் (Indian Farmers Fertiliser Cooperative - IFFCO), கிரிஷக் பாரதி கூட்டுறவு லிமிட்டெட் (Krishak Bharati Cooperative Limited - KRIBHCO) மற்றும் ஆனந்த் பால் கூட்டுறவு லிமிட்டெட் (Anand Milk Union Limited - AMUL) போன்ற சில நிறுவனங்கள் உலகப் புகழ்பெற்றவையாக வளர்ந்துள்ளன. தொழில்நுட்பத்தை ஏற்று தகவமைத்துக் கொள்ளுதல், சந்தைக்கேற்ப செயல்படுதல் மற்றும் பிராண்டிங் செய்தல் ஆகியவற்றின் மூலம் மிகச்சிறந்த நடைமுறைகளை கைக்கொண்டு இந்த நிறுவனங்கள் உலகப் புகழை அடைந்துள்ளன. குறிப்பாக காஃபி, கொக்கோ, பருத்தி மற்றும் மீன்பிடித்தல் ஆகியவை சார்ந்த கூட்டுறவுச் சங்கங்களில் சர்வதேச மதிப்புக்கூட்டல் சங்கிலித்தொடர் செயல்படுகின்றது. சூரிய மற்றும் காற்று மூலமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் போன்ற தொழில்நுட்பம் சார்ந்த செயல்திட்டங்களைத் திறம்படக் கையாளும் திறனை கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுள்ளன.

இந்தியாவில் 8.5 இலட்சம் கூட்டுறவு அலகுகள் உள்ளன. இதில் 20 சதவிகித அலகுகள் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களாக உள்ளன. மீதி உள்ள 80 சதவிகித அலகுகள் கடன்சாராத கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். மீன்பிடித்தல், பால்வளம், உற்பத்தியாளர், பதப்படுத்துதல், நுகர்வோர், தொழிற்சாலை, சந்தை, சுற்றுலா, மருத்துவமனை, வீட்டுவசதி, போக்குவரத்து, தொழிலாளர் நலம், பண்ணை விவசாயம், சேவை, கால்நடை வளர்ப்பு, பன்னோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வகையான நடவடிக்கைகளில் கடன்சாராத கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

**கூட்டுறவுச் சங்கங்களில் புத்தாக்கமும் தொழில்முனைவும்**

ஒரு வர்த்தக நிறுவனம் என்பது, சட்டரீதியான அதன் இணைப்பு நிறுவனங்கள் எவ்வாறு இருந்தாலும், அது எப்பொழுதும் சந்தையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவே செயல்படும். இதில் கூட்டுறவுச் சங்கங்களும் விதிவிலக்கல்ல. புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் அதேபோன்று நிரூபிக்கப்பட்ட வர்த்தக மாதிரிகள் மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களை ஏற்றுப் பயன்படுத்துதல் ஆகியன வர்த்தக நிறுவனங்களின் தொடர்ச்சியான செயல்உத்திகள் ஆகும். இத்தகைய செயல்உத்திகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருத்தமாக இருக்குமா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். பொருத்தப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு இத்தகைய பரிமாணங்கள் எவ்வகையில் பங்காற்றுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். கண்டுபிடிப்பை அடுத்து புத்தாக்கம் வருகிறது என்று விவாதிக்கப்படுகிறது. ஒரு கண்டுபிடிப்பானது கண்டுபிடிப்பாளரை கூர்ந்து கவனிக்கவும், சிந்தனைகளை ஒருங்கிணைக்கவும் புதிய யோசனைகளை உருவாக்கவும் ஊக்கப்படுத்துகின்றது. இத்தகைய யோசனைகள் செயல்வடிவம் பெற்றாக வேண்டும். அதாவது இந்த யோசனைகள் வணிகத்தை மேம்படுத்துவதற்காக அல்லது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரு புதிய உற்பத்திப் பொருளாக ஒரு புதிய நடைமுறையாக மற்றும் / அல்லது ஒரு புதிய சேவையாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, புத்தாக்கம் என்பதை ஒரு உற்பத்திப்பொருள், நடைமுறை அல்லது சேவை என்பதில் ஏற்படுவதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் ஆகியவற்றை நிர்வகிப்பதில் தொழில்நுட்பத்தின் பங்கு உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆகச் சிறந்த வர்த்தக நடைமுறைகள் டிஜிட்டல் மூலம் செயல்படக் கூடியவையாகக் கிடைக்கின்றன. டிஜிட்டல் மூலம் செயல்படக்கூடிய வெப் 4.0 (Digitally enabled Web 4.0), தொழிலகம் 4.0 (Industry 4.0) ஆகியவை செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence - AI), இயந்திரக்கற்றல் (Machine learning - ML), மெய்நிகர் யதார்த்தம் (virtual reality - VR) மற்றும் செறிவூட்டப்பட்ட யதார்த்தம் (Augmented reality - AR) ஆகியவற்றின் வழியாக பலன்களைப் பெறுவதற்காக வடிவமைக்கப்பட்ட புத்தாக்கங்களாகும். தொழிலகம் 4.0 சந்தையானது மிக விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. 2019இல் இருந்து 2024 வரை கூட்டு வருடாந்திர கூட்டு வளர்ச்சி விகிதம் (Compounded annual growth rate - CAGR) மதிப்பு 16.9 சதவிகிதம் என்ற அளவில் எடுத்துக்கொள்ளப்பட்டால் 2024ல் இந்தச் சந்தை 156.6 பில்லியன் அமெரிக்க டாலரை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிளாக்செயின் தொழில்நுட்பங்கள் பிரத்யேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. இவற்றின் வளர்ச்சி முழுமை அடையவில்லை என்றாலும் கூட வெளிப்படையான பணப்பரிவர்த்தனைகளுக்கு இவை உதவிகரமாக உள்ளன. நிறுவன மூலவளத் திட்டமிடுதல் (Enterprise resource planning - ERP) என்பது விநியோகச் சங்கிலித்தொடர் அல்லது அத்தகைய ஒரு வலைப்பின்னலுக்கு உதவுகின்ற தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துகின்ற மற்றொரு சந்தையாகும். தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் ஆகியவற்றின் பலன்களை அதிகரிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் வேகமாக மாறிவரும் இன்றைய வர்த்தகச் சூழலுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

வழக்கமாக மூன்று அடுக்கு அமைப்பில் (தொடக்கநிலை, இடைநிலை மற்றும் உச்சநிலை) செயல்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களின் தேவையை ஒன்று திரட்டுகின்றன மற்றும் அத்தகைய சேவைகளை அவர்களுக்கு வழங்குகின்றன. சரக்கு இருப்புநிலை என்பதை முன்கூட்டியே கணிக்கக்கூடிய திறன் சிறப்பாக கைவரப்பெறாத ஒரு உறுப்பினருக்கு அநாவசியமாக இருப்புப் பொருள்களை வைத்திருப்பதினால் ஏற்படக்கூடிய செலவு என்பது மிக முக்கியமானதாகும். பணிப்பிரிவிற்கு ஏற்ப ஒவ்வொரு உறுப்பினரும் உற்பத்திப் பொருள்களை மற்றும் / அல்லது சேவைகளை உற்பத்தி செய்கின்றனர். தாமதம் ஏதும் இல்லாமல் இத்தகைய உற்பத்திப் பொருள்கள் / சேவைகள் உடனடியாக சந்தையால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது இன்றியமையாத நிபந்தனையாக ஆகின்றது.

மேலும், ஒரே விதமான கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றாக இணைந்து கூட்டுறவு ஒன்றியங்களை ஏற்படுத்துகின்றன. பங்குதாரர்களாக இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு

இடையில் தடையேதுமற்ற சேவை கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்த ஒன்றியங்கள் உருவாக்கப்படுகின்றன. புத்தாக்கம், தொழில்நுட்பம் சார்ந்த செயல்முறைகள் மற்றும் சந்தைசார் ஆபத்துக்காரணிகளைக் கையாளுதல் ஆகிய சுழல் வட்டத்தில் இத்தகைய ஒன்றியம் செயல்படுகின்றது. உறுப்பினர்களாக உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பலன்கள் பெறுவதற்காக சிக்கலான மதிப்புக் கூட்டல்களை உறுதி செய்யவேண்டும் என்ற நிலையில் ஒன்றியமானது அதிக அளவில் முதலீடு செய்கின்றது.

**பால்வளப் பிரிவில் ஒரு வகைமாதிரியாகச் செயல்படும் கூட்டுறவுச் சங்கத்தின் செயல் விவரம்**

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் பொருத்தங்கள், புத்தாக்கத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் கூட்டுறவுச் சந்தையை தயார்நிலையில் வைத்திருத்தல் ஆகியவற்றைக் குறித்து விளக்கம் அளிப்பதற்காக படம் 1இல் ஒரு வகைமாதிரியாக விளங்கும் பால்வளப் பிரிவின் ஒரு உதாரணம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் பால்வளப் பிரிவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பு முறையைப் பின்பற்றுகின்றன.

இத்தகைய கட்டமைப்பில் பல்வேறு வகையான அடுக்குகள் உள்ளன என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு அடுக்கும் தனது இயக்கத்தில் உள்ள சூழல்சார் நிலைமைகளைச் சார்ந்து வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக பால்வளப் பிரிவின் மதிப்புக் கூட்டல் சங்கிலித் தொடரில் கடைக்கோடியாக உள்ள அடுக்கானது, போக்குவரத்து மற்றும் சேவை வழங்குநர்களைச் சார்ந்துள்ளது. கருத்தாக்கம் உருவாக்குதல், திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் உள்ளீட்டுச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். கால்நடை, தீவனம், கால்நடைகளுக்கான உணவு, விலங்குகளின் ஆரோக்கியப் பராமரிப்பு, காப்பீடு மற்றும் கால்நடைப் பராமரிப்புச் சேவைகள் போன்ற உள்ளீட்டுச் சேவைகளை உற்பத்தியாளர்கள் பெறுகின்றனர். இந்த அடுக்கில் உற்பத்தியாளர் ஒரு வாடிக்கையாளரைப் போன்று செயல்படுகின்றார். உற்பத்தியாளரின் இடத்தில் பால் உற்பத்தி செய்வதற்காகும் செலவின் மீது சந்தையானது மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இன்று கால்நடைகளுக்கு உணவாகும் பயிர்கள், தீவன மேலாண்மைச் சேவைகள், கன்று வளர்ப்பு மையங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவுச் சேவைகள் போன்றவை மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடரில் சேர்கின்ற மிக முக்கியமான முன்னெடுப்பு நடவடிக்கைகளாகும். எந்தவொரு பால்வளம் சார்ந்த மதிப்புக்கூட்டல் சங்கிலித் தொடருக்கும் இதுவே அடிப்படைத் தேவையாகும்.

முதல் அடுக்கில் உற்பத்தியாளர் உள்ளார். மேலே விவரித்தவாறு சந்தையில் இருந்து இவர் உள்ளீடுகளைப் பெறுகிறார். இந்த அடுக்கினை மிகுந்த கவனத்துடனும் அறிவுப்பூர்வமாகவும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் இத்தகைய உற்பத்தியாளர்கள் மூலமாகத்தான் நீடித்த பால் உற்பத்தியை பால்வளத்துறையானது பெற்றாக வேண்டும். இத்தகைய உற்பத்தியாளர்கள் குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் இந்தத் தொழிலில் தாங்களாகவே ஈடுபட்டுள்ளனர். கறவை மாடுகளே இதன் உற்பத்தி அலகுகளாகும். அதே சமயம் கறவை மாடுகளின் எண்ணிக்கை அளவு உற்பத்தியாளருக்கு வியாபாரத்தை மிகச் சிக்கலானதாக மாற்றுகிறது. ஆகவே, வியாபாரச் சிக்கல்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்வது



என்பது முக்கியமானதாகிறது. வர்த்தக அலகுகள் எந்தவொரு அடிப்படை செயல்உத்தி சார்ந்த வர்த்தக அலகு போன்றே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சந்தையை நிர்ணயிப்பதிலும் இத்தகைய உள்ளீட்டுச் சேவைகளுக்கான சந்தை விலைகளை நிர்ண யிப்பதிலும் தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பத்தின் பங்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

இரண்டாவது அடுக்கு என்பது பால் சேகரிப்பு இடம் ஆகும். உற்பத்தியாளர்கள் பாலை எடுத்துச் சென்று ஊற்றுவதற்குத் தேவைப்படும் வசதிகளை உறுதிசெய்யும் இலக்குடன் இந்த அடுக்கு உள்ளது. இன்று தொழில்நுட்பம் மூலம் செயல்படும் சேவைகள் இந்த வசதியை விவசாயியின் வீட்டிற்கே சென்று சேர்க்க உதவுகின்றன. வெளிப்படையான வியாபார பரிவர்த்தனைகளையும் இவை உறுதிசெய்கின்றன. தொழில்நுட்பங்கள் அடிப்படை யிலான தானியங்கி பால் சேகரிப்பு அலகுகள் (Automatic collection units - AMCUs) வியாபாரப் பரிவர்த்தனையில் வெளிப்படைத்தன்மைக்கு ஆதரவாக இயங்குகின்றன.

மூன்றாம் மற்றும் நான்காம் அடுக்குகள் சமஅளவில் முக்கியமானவையாக உள்ளன. ஏனெனில் உற்பத்தியாளர் வீட்டில் உற்பத்தி செய்யும் பாலானது, அதிகம் விற்பனையாகும் நுகர்வுப்பொருள் (Fast-moving Consumer Good - FMCG) போன்றே தகுந்த விலையில் விற்கப்பட்டாக வேண்டிய தேவை உள்ளது. உறுதி அளிப்புத்திட்டத்தின் வாயிலாக இந்தச் சந்தை இணைப்பை உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுத்தித் தருவது என்பது சிரமமான காரியமாகும். இந்தப் பின்னணி யிலேயே கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் கழகங்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் இதே போன்ற அமைப்புகள் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. எளிமையான மதிப்புக்கூட்டல் நடவடிக்கைகளின் மூலம் (பாலைச் சேமித்துவைத்தல், தரத்தைப் பராமரித்தல் போன்றவை) தகுந்த விலை கிடைப்பதற்கு சந்தையில் பேச்சுவார்த்தை நடத்துதல், சந்தையின் விலை ஏற்ற இறக்கங்களின் பாதிப்பில் இருந்து உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தல், கறந்த பாலை சேகரித்து எடுத்துச் செல்வதற்கான வாகன வசதிகளை உற்பத்தியாளர்களுக்கு ஏற்படுத்தித் தருதல் போன்றவை உள்ளிட்ட கூட்டு நடவடிக்கைகளே முதன்மையான குறிக்கோள்களாக உள்ளன. இன்று தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகள் பால்வளத் துறையில் சிறப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பால் சேகரிப்பு மையங்களில் தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளை அறிமுகப்படுத்துதல், அதிக அளவு பாலைக் குளிர்விக்கும் வசதி கொண்ட தொழில் அலகுகள் (Bulk Milk Chilling Units - BMCUs), குளிர்விக்கும் மையங்கள், குளிர்சாதன சேமிப்பு வசதிகள் கொண்ட வாகனங்கள், பால்கேன் எடுத்துச் செல்லும் வசதிகள் உள்ளிட்டவை தொழில்நுட்பம் அடிப்படையிலான சேவைகளில் உள்ளடங்கும்.

பால் பதனிடும் தொழில் அலகுகள் ரோபோக்கள் உள்ளிட்ட அதிநவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. தர மதிப்பீட்டுக்கான அளவீடுகளைப் பராமரித்தல் மற்றும் சரியான அளவில் செலவைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கான செயல்திட்டங்கள் ஆகியவற்றுடன் மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்க இந்தத் தொழில்நுட்பங்கள் பயன்படுகின்றன. ஏழாவது அடுக்கு என்பது கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் உற்பத்தியாளர் கம்பெனி சட்டங்களின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனிகள் போன்று பல்வேறு வடிவங்களில் உருவாகியுள்ளன. பொருளாதார அளவைப் பராமரிக்கவும் சந்தை வாய்ப்பு, போட்டிகள் ஆகியவற்றைச் சமாளிக்கவும் இந்த அமைப்புகள் சில சமயங்களில் சம்மேளனமாக ஒன்றிணைகின்றன. இந்த அணுகுமுறை என்பது வர்த்தக நுண்ணறிவைக் கைக்கொள்ளும் செயலின் அடிப்படையில் (Business Intelligence - BI) மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் இந்தப் பால்வளப் பிரிவில் ஏற்கெனவே பயன்பாட்டிற்கு வந்துள்ள பல்வேறு அதிநவீனத் தொழில்நுட்பங்கள் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. ஒவ்வொரு அடுக்கும் தொழில்நுட்பத்தால் செயல்படும் சேவைகள் அறிமுகப்படுத்துவதற்கான குறிப்பிட்ட தேவைகளைப் பெற்றுள்ளன. மிக முக்கியமாக எந்திரங்கள், பொது சாதனங்கள், மனிதர்கள் போன்ற தனித்துவமாக அடையாளப்படுத்தப்படும் பொருட்களை இணையத்துடன் இணைக்கும் வலை (Internet of Things - IoTs) மற்றும் அன்றாட வணிக நடவடிக்கைகளை நிர்வகிக்க நிறுவனங்கள் பயன்படுத்தும் மென்பொருள் (Back-end ERP) போன்ற தொழில்நுட்பங்களின் பயன்பாடு உருவாகிவரும் நிலையில் பால்வளத்

தொழில்பிரிவில் செயல்முறை திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியன குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றன. விநியோகச் சங்கிலித் தொடர் போக்குவரத்துச் செயல்பாடுகளில் சென்சார் அடிப்படையில் வாகனங்களைத் தடம் அறிதல், இருப்பு வைப்பதற்கான திட்டமிடுதல் மற்றும் முன்கணிப்பு செய்தல் ஆகியவற்றின் காரணமாக விநியோகச் சங்கிலித் தொடரின் திறனும் அதிகரித்துள்ளது. இவற்றின் விளைவாக சரியான அளவில் செலவைப் பராமரித்தல் மற்றும் மூலவளங்களைப் பயன்படுத்துவதற்கான சரியான திட்டமிடல் ஆகியவற்றின் பலன்கள் சிறிய உற்பத்தியாளருக்கும் கூட இப்பொழுது கிடைக்கின்றன.

**முடிவுரையும் முன் செல்ல வேண்டிய பாதையும்**

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் (Science, Technology, and Innovation - STI) ஆகியன பொருளாதார வளர்ச்சிக்கும் மனித மேம்பாட்டுக்கும் முக்கிய உந்து சக்திகளாக விளங்குகின்றன. ஆத்ம நிர்பார் என்ற சுயசார்பு பாரதம் என்ற நிலையை அடைவதற்காக பொருளாதார மேம்பாடு, அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய நீடித்த நிலையான பாதையில் இந்தியா முன்னேறிச் செல்லவேண்டும். இதற்குப் பாரம்பரிய அறிவு அமைப்பு, உள்நாட்டுத் தொழில்நுட்பங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் அடிமட்ட நிலையில் புத்தாக்கத்தை ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டாக வேண்டும். தலைகீழான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் வலுவான தாக்கத்தை உருவாக்கக்கூடிய தொழில்நுட்பங்களின் புதிய வரவானது புதிய சவால்களை முன்வைப்பதோடு கூடவே அளப்பரிய வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருகிறது.

அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றுக்கான புதிய கொள்கையானது குறுகிய கால, மத்திம கால மற்றும் நீண்ட கால இயக்க அடிப்படையிலான செயல்திட்டங்களின் வாயிலாக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டுள்ளது. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் என இரண்டு தரப்பிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதன் மூலமும் பேணி வளர்க்கப்பட்ட சூழல்சார் அமைப்பை உருவாக்குவதன் மூலம் இந்த மாற்றங்கள் கொண்டுவரப்படும். டிஜிட்டல் இந்தியா கொள்கையானது (The Digital India policy - DI) பொதுச்சேவை மையங்கள் (Common Service Centres - CSCs) வாயிலாக டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்கு உதவியாக இருக்கின்றன. பொதுசேவை மையங்களின் சேவைகளை தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களோடு (Primary Agricultural Credit Societies - PACS) சேவைகளோடு ஒருங்கிணைப்பதற்காக கூட்டுறவு அமைச்சகம் மேற்கொண்ட முன்னெடுப்பு என்பது முன்னோக்கிய பாதையில் மிக முக்கியமான ஒரு அடியெடுப்பாகும். திரள்சேர் அமைப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தமக்கு ஆதரவாக இருக்கும் கொள்கைகளின் பலன்களை முன்னெடுக்கவும் வளர்த்தெடுக்கவும் வேண்டும். நவீன தொழில்நுட்பப் புத்தாக்கப் புரட்சியின் ஒரு அங்கமாக இருந்து இதனை மேற்கொள்ள வேண்டும்.

---

– **பேராசிரியர் ஹரிகிருஷ்ண மிஸ்ரா,** ஆனந்த் நகரில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனத்தில் (IRMA) பேராசிரியர்.

**எமது நூல்**

**பாரதிய விக்யான் மஞ்சூஷா** என்ற தலைப்பிலான இந்த நூல் மிகச் சிறப்பான ஆராய்ச்சி மற்றும் விசாரணைகளின் பயனாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நூல் விரிவான தகவல்களின் உள்ளடக்கம் என்பதைக் கடந்து, பழங்கால இந்திய அறிவியல் அறிவின் பல்வேறு பிரிவுகள் சார்ந்த அடிப்படைத் தகவல்களைக் கொண்டிருக்கும் தகவல் களஞ்சியமாகுமாகும். இதன் மலையாளப் பதிப்பு கடந்த 1987ஆம் ஆண்டு மூன்று தொகுப்புகளாக வெளியிடப்பட்டது. ஆங்கிலப்பதிப்பு 2005ஆம் ஆண்டில் முதல்முறையாக மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வெளியீட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டது. நம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்ட இந்த நூலாசிரியரின் அறிவுசார் திறமைக்கு நாம் செலுத்தும் மரியாதை இந்த நூலாகும். வாசகர்களுக்கு, குறிப்பாக இந்திய இளைஞர்களுக்கு இந்த நூல் சிறந்த வழிகாட்டி என்பது மட்டுமின்றி, சாதிப்பதற்கு உத்வேகம் அளிக்கும் ஆதாரமுமாகும்.

# உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டம்



'உலகின் மிகப் பெரிய தானிய சேமிப்புத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறையின் மூலம் ஏற்படுத்துவதற்கு, மத்திய அமைச்சகங்களின் குழு (Inter Ministerial Committee -IMC) அமைக்கப்பட்டு அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மை, விவசாயிகள் நல அமைச்சகம், நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோக அமைச்சகம், உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் ஆகியவற்றின் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலம் தானிய சேமிப்புத் திட்டம் உருவாக்கப்படும்.

காலக்கெடு நிர்ணயித்து சீரான முறையில், தொழில்முறை ரீதியாக திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்தது 10 மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டத்தை கூட்டுறவு அமைச்சகம் செயல்படுத்தும். திட்டத்தின் பல்வேறு மண்டலங்களின் வேறுபட்டத் தேவைகள் பற்றிய விவரங்களை இந்த முன்னோடித் திட்டம் வழங்கும். இதன் வாயிலாகக் கிடைக்கும் படிப்பினைகள், இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கு ஏற்ற பொருத்தமான வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

அமைச்சகங்களுக்கு இடையேயான குழு, கூட்டுறவு அமைச்சரின் தலைமையில் அமைக்கப்படும். இந்தக் குழுவில் விவசாயம், விவசாயிகள் நலத்துறை அமைச்சர், நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோகத்துறை அமைச்சர், உணவு பதப்படுத்தும் தொழில்துறைக்கான அமைச்சர், தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களையும்/திட்டங்களை அமுலாக்கும் நெறிமுறைகளையும் தேவைப்படும் சமயங்களில் மாற்றியமைப்பதற்கு இவர்கள் துணைபுரிவார்கள். சாத்தியப்படக்கூடிய, தெரிந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களில் (PACS) கிடங்குகள் போன்ற உள்கட்டமைப்புகள் விவசாயத்திற்காகவும், அதைச் சார்ந்த நோக்கங்களுக்காகவும் உருவாக்கப்படும். ஏற்பளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், பரிந்துரைக்கப்பட்ட இலக்குகள் ஆகியவற்றின் மூலம் இவை நிறைவேற்றப்படும். அந்தந்த அமைச்சகங்களில் அடையாளம் காணப்பட்டிருக்கும் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் செலவினங்களைப் பயன்படுத்தி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

கிடங்குகள், தனிப்பயன்களுக்கான மையங்கள், செயல்முறையாக்க அலகுகள் போன்ற பல்வேறு வகையான வேளாண் உள்கட்டமைப்புகளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் அமைப்பது, அதன் மூலமாக அவற்றை பல்நோக்கு சங்கங்களாக மாற்றுவது ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களின் அளவில் உள்கட்டமைப்பை உருவாக்கி அவற்றை நவீனமயமாக்குவதன் மூலம் போதுமான சேமிப்புத்திறன் உருவாக்கப்பட்டு, உணவு தானியங்கள் வீணாவது குறைக்கப்படும். நாட்டின் உணவுப் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன், விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு சிறந்த விலையைப் பெறவும் இவை உதவும். இந்தியப் பொருளாதாரத்தின் விவசாய மற்றும் கிராமப்புற காட்சிப்பரப்பை மாற்றியமைப்பதில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அடிமட்ட அளவில் ஆற்றிய முக்கியமான பங்களிப்புகளைக் கருத்தில் கொண்டு, உள்ளடங்கிய கிராமப்பகுதிகளிலும் அவற்றிற்கான அணுகலை எளிதாக்குவதற்கும் இந்த முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் மூலமாக நாட்டின் உணவுப்பாதுகாப்பை வலுப்படுத்துவது மட்டுமின்றி, தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் துடிப்பான பொருளாதார நிறுவனங்களாக தங்களை மாற்றிக் கொள்ளவும் முடியும். தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் துடிப்புமிக்க பொருளாதார அமைப்புகளாக வளரவும் இந்த முயற்சி துணைபுரியும்.

– ஆதாரம்: பத்திரிகை தகவல் மையம்

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 7th July 2023
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023




Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.